
கல்கி
புதிய தொடர்கதைகள்
தேன்கூடு
ஆர்வி
கண்கள் உறங்காவோ?
மாயாவி
அடுத்த இதழிலிருந்து
KALKI 5-4-1959
30
நயா பைசா



பாண்ட்ஸ்

ட்ரீம்ப்ளவர் டால்க்

**உபயோகித்தால்
நாள் முழுவதும்
புத்துணர்ச்சியுடனும்
நறுமணத்துடனும்
இருக்கலாம்**



சிருத்த ககமூட்டுவதும், நறுமணம் வாய்ந்ததுமான பாண்ட்ஸ் ட்ரீம்-ப்ளவர் டால்கம் பவுடர் உபயோகித்தால், நீங்கள் கொடிய வெப்பத்திலும், புழுக்கமான நாட்களிலும்கூட இனிய உணர்ச்சியுடன் இருக்கலாம். மென்மையான இந்த டால்கம் பவுடரை உடம்பில் தூவிக்கொண்டால், எரிச்சலூட்டும் வியர்வைத் தொல்லை ஒழியும். நாள் முழுவதும் புதுமலரைப்போல் இனிய புதுமையுடன் இருக்க பாண்ட்ஸ் ட்ரீம்ப்ளவர் டால்கம் பவுடர் உபயோகியுங்கள்

சீஸ்ப்ரோ-பாண்ட்ஸ் இன்கார்ப்பரேட்டட் (வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு.எஸ். அமெரிக்காவில் இணைக்கப்பெற்றது)

கல்கி
பொருளடக்கம்

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.



மலர் 18
இதழ் 36

தமிழ்த்திரு நாடுதன்னைப்—பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

விளம்பி ஞு
பங்குனிமீ 23

காங்கிரஸும் நகரசபைத் தேர்தல்களும்

தமிழ் நாட்டில் பல இடங்களில் நடைபெற்ற தேர்தல் முடிவுகளிலிருந்து நாம் தெரிந்து கொள்ளக்கூடிய பாடம் ஒன்றுண்டு. இது பழைய பாடமாயினும் மறுபடியும் படிக்க வேண்டிய பாடம், மீண்டும் நினைவுறுத்திக் கொள்ள வேண்டிய பாடம்.

விருதுநகரில் காங்கிரஸ் தோற்றது; நிதிமந்திரி திரு சி. சுப்பிரமணியத்தின் சொந்த ஊரான கோவையில் தோற்றது; தமிழ் நாட்டின் முக்கிய நகரமான மதுரையில் தோற்றது.

சில ஊர்களில் காங்கிரஸ் வெற்றி பெற்றிருந்தாலும் கணிசமான மெஜாரிட்டி பெற்று வெற்றி யடையவில்லை. கோபிசெட்டிபாளையத்தில்தான் முழு வெற்றி பெற்றது. அங்கு அடைந்த வெற்றியின் பெருமை அந்த ஊரில் சமீபத்தில் நடைபெற்ற அரசியல் திருவிழாவுக்கே உரித்தாகும்.

இந்தத் தேர்தலில் சுயேச்சையாளர்களே அதிக ஸ்தானங்கள் பெற்றிருக்கிறார்கள். இதுவே காங்கிரஸுக்குப் பெருந் தோல்வி என்று கருதப்படும்.

சுயேச்சையாளர்களுடன் ஒரு சில ஸ்தானங்கள் பெற்றுள்ள கம்யூனிஸ்டுகளோ, தி. மு. க. வினரோ சேர்ந்து விட்டால் காங்கிரஸ் மெஜாரிட்டி இழந்துவிடும்படி நேரிடும்.

இந்தக் கஷ்டத்திலிருந்து காங்கிரஸ் ஒரு நல்ல பாடம் கற்றுக்கொள்ளும் என்று எதிர்பார்க்கிறோம்.

காங்கிரஸ், எதிர்க் கட்சிகள் மாணவர்களிடையே செல்வாக்குப் பெற்று வருவதைப் பார்த்து, மாணவர்களை அரசியல் நோக்கங்களுக்குப் பயன்படுத்திக் கொள்ளக் கூடாது என்று முடிவு செய்தது. அத்துடன் நில்லாமல் மற்ற அரசியல் கட்சிகளையும் அழைத்து மேற்கண்ட முடிவுக்குக் கையொப்பமிடுமாறு கேட்டுக் கொண்டது.

அதேபோல், இனி ஸ்தல ஸ்தாபனங்களின் தேர்தல்களில் அரசியல் கட்சிகள் ஈடுபடக் கூடாது என்றும் காங்கிரஸ் முடிவு செய்யலாம்.

கிராமங்களின் நிர்வாகத்திலும், நகர நிர்வாகத்திலும் அரசியல் கட்சிகள் புக வேண்டியதில்லை.

ஆகவே ஸ்தல ஸ்தாபன நிர்வாகத்தில் புகுகிறவர்கள் ஊர் மக்களின் மதிப்புக்கும் மரியாதைக்கும் உரியவர்களாக இருக்க வேண்டும். அப்படிப்பட்டவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டால் மக்களுக்கு நன்மை விளையும். அந்த வசதி ஸ்தல ஸ்தாபனங்களின் தேர்தலில் அரசியல் கட்சிகள் புகாமல் இருந்தால்தான் ஏற்படும்.

பிரச்னையும் பரிகாரமும்

சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்

நல்லபடியாக நடத்தப்படும் கூட்டுறவுப் பண்டகசாலைகளை யாரும் ஆட்சேபிக்கவில்லை. காங்கிரஸ்காரர்களின் பேச்சுக்களிலிருந்து வெளியாகும் பலாத்கார கூட்டுறவு விவசாயத்துக்குத்தான் விவசாயத்தில் அனுபவமுள்ளவர்கள் ஆட்சேபணை செய்கிறார்கள். காங்கிரசின் கொள்கையை எதிர்ப்பவர்கள். கூட்டுறவுத் தத்துவத்தையோ பரஸ்பர உபகார தர்மத்தையோ ஆட்சேபிக்கவில்லை. ஆனால் டில்லியிலிருக்கும் நமது ஆட்சியாளர்கள் தாங்களே மார்க்ஸ், என்ஜில்ஸ் பாஷையைப் பேசிக் கொண்டு, சர்க்கார் பலாத்காரத்தைக் கொண்டே சமதர்மத்தை நிலைநாட்ட வேண்டும் என்ற கொள்கையை மனத்துள் வைத்துப் பேசுகிறார்கள். இதுதான் கவலை யளிக்கிறது!

நம் நாட்டு ஏழை மக்கள் வாழ வகை செய்ய வேண்டும். உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டும். இந்த இரண்டும் தான் இன்றையப் பிரச்னைகள். இந்தப் பிரச்னையைத் தீர்க்க, மக்களை வர்க்கங்களாகப் பிரித்து, அவர்களுக்குள் வேற்றுமையுண்டாக்கி, பரஸ்பர பொருமையையும் பூசலையும் கிளப்பி விடுவது வழியல்ல. ஒரு வகுப்பாரை இன்னொரு வகுப்பார் மீது ஏவிவிடுவது வழியல்ல. மக்கள் அனைவரும் உழைக்கவேண்டும். செல்வம் பெற்றவர்கள் உள்ளத்தில் பரிவும் அன்பும் சுரக்கச் செய்ய வேண்டும். இவைதான் வழி. இதற்குச் சற்று ஆத்மீக முயற்சி வேண்டும். இப்பணியை ஆற்ற எல்லா விதத்திலும் தகுதியும் அந்தஸ்தும் பெற்றவர் நேருஜி. அவர் இப்பணியை மேற்கொண்டால் நாம் விரும்பும் லட்சியம் கைகூடும். மக்களைப் பிரித்துப் பரஸ்பர விரோதத்தைப் பெருக்குவதால் ஒரு வெற்றியும் காண மாட்டோம்.

இந்த யுகத்தில் கடைத்தேற அமைந்துள்ள இரட்டை மந்திரம் உழைப்பும், இரக்கமும். உழைப்பே செல்வத்தைப் பெருக்கும். செல்வத்தின்பயன் அனைவரும் அடைவதற்கு இரக்கம் என்பது மந்திரம். உழைப்பில் ஊக்கம் குறையாமல் பலருக்கும் செல்வம் பயன்படும் வழி ஒப்புரவும் இரக்கமுமே யாகும்.

வியக்திகளின் செல்வத்தைச் சர்க்கார் பரிகரணம் செய்வதாலோ வேறுவித பலாத்காரத்தாலோ ஏழைகளுக்கு நன்மை செய்யலாம் என்று நிர்வாகம் நடத்தினால் உழைப்பதில் உள்ள ஊக்கம் மறைந்து போகும். அதனால் செல்வமும் விவசாயமும் குறைந்துதான் போகும். இம்முறைகளின் பயன் உழைப்பிலுள்ள ஊக்கத்தைக் கெடுக்கும். உற்பத்தி பெருகாது. குறையும். இவை அனுபவத்தில் கண்ட உண்மைகள். யாரும் உணரக்கூடிய உண்மைகள். ஆனால் நம் நாட்டில் இப்போது அவிழ்த்து விட்டுள்ள மார்க்ஸியக் குதிரை நம்மை எங்கே கொண்டு போய் விடும் என்று அதற்கே தெரியாது.

இந்தச் சூழ்நிலையில் செய்ய வேண்டியது என்ன? தேச மக்கள் அனைவரும் யார் எந்த வேலையில், எந்தப் பதவியில் இருந்தாலும் நன்றாக உழைத்துப் பாடுபட வேண்டும். செல்வம் படைத்தவர்கள், தங்களிடம் வந்துள்ள செல்வத்துக்குத் தங்களைத் தர்மகர்த்தாக்களாகப் பாவித்து மற்றவர்களுக்கு உதவ வேண்டும். இந்த இரண்டு கொள்கைகள்தான் நம் நாட்டில் நீண்ட நெடுநாட்களாக வந்துள்ள தர்மம். இந்தத் தர்மத்துக்குப் புத்துயிர் அளித்து எல்லாருடைய மனத்திலும் புகுத்துவதே இன்றையக் கடமை. ராமபிரானுக்கு விசுவாமித்திரர் பலா அதிபலா என்ற இரண்டு மந்திரங்களை உபதேசித்தார். உழைப்பு—இரக்கம் இரண்டுமே இன்று நமக்குரிய பலா அதிபலா மந்திரங்களாகும். இவைதான் நம் முன் எழுந்துள்ள பெரும் பிரச்னைகளுக்குப் பரிகாரம். இதை விடுத்து கம்யூனிஸ்ட்டு நாடுகளில் கம்யூனிஸ்ட்டுகள் செய்வதைப் போல் இங்கு நாமும் செய்து பார்ப்போம் என்று அரைகுறையாகச் சிந்தித்து, அரைகுறையான முறையில் செய்யப் பார்ப்பது வழியே அல்ல. போலி நடன முறைகளைக் கையாள்வது ஒரு பயனையும் அளிக்காது. அதற்குப் பதில் யாரைப் பார்த்துக் காப்பி அடித்தோமோ, அவர்களுடைய ஏளனத்துக்கு ஆளாவோம். கடைசியில், மக்கள் போலி நடவடிக்கைகளுக்குப் பதில் அசல் நடவடிக்கையே எடுத்துக் கொள்வோமே என்று கம்யூனிஸ்ட் கொள்கைகளுக்கே ஆதரவு கொடுப்பார்கள்!

மக்கள் தாங்களாகவே பரஸ்பரம் உண்மையோடு உதவி செய்துகொள்ளக் கூட்டுறவு முயற்சிகள் எடுத்துக் கொள்வதை நாம் ஆட்சேபிக்கவில்லை. அரசியல் நிர்ணயச் சட்டம் சொத்துக்களைச் சம்பாதிக்கவும், பேணிப் பாதுகாக்கவும் உரிமையளித்துள்ளது. அந்த உரிமையைப் பறிக்கப் பார்ப்பதைத்தான் ஆட்சேபிக்கிறோம். மக்கள், தங்களுக்கு இஷ்டப்பட்ட வேலை செய்து வாழ உரிமையளித்துள்ளது. அதைப் பறிக்கப் பார்ப்பதைத்தான் ஆட்சேபிக்கிறோம்.

சொந்த சாகுபடியை விட, அண்டை அயல் நிலக்காரர்களுடன் சேர்ந்து, அவர்கள் விருப்பத்தின் மேல் கூட்டுறவு முறையில் விவசாயம் செய்து உணவைப் பெருக்கினால் அதை யாரும் ஆட்சேபிக்கவில்லை. யாரோ ஒருவன் நிலத்தை

எடுத்து வேறு ஒருவனுக்குக் கொடுப்பதையே ஆட்சேபிக்கிறோம். அப்படிக் கொடுக்கப்பட்ட நிலத்தில் கூட்டுறவு முறை பண்ணையாயினும் வேறு எந்த விதப் பண்ணையாயினும் சரி, எது நடந்த போதிலும் சொத்தைப் பறிகரிப்பது நியாயமாகாது. இது அரசியல் நிர்ணயச் சட்டத்தைப் புறக்கணிப்பதாகும். இது பெருத்த அநீதி. இதுவன்றி, நாட்டில் உணவு உற்பத்தி குறைந்துவிடும். இவைதான் இதனால் ஏற்படக் கூடிய பலன்கள்.

நம் நாட்டில் சொந்தப் பண்ணை முறையினால் விளைவு பெருகுமா அல்லது கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தி, விவசாயத்தை அந்தச் சங்கங்களிடம் ஒப்படைத்தால் விளைவு பெருகுமா என்பது ஆராயப்பட வேண்டிய விஷயம். நம் நாட்டில் நடத்தக்கூடிய கூட்டுறவு விவசாயப் பண்ணை முறை வேறு. பிற நாடுகளில் சாகுபடிக்குக் கொண்டு வரப்படாத விஸ்தாரமான காட்டுப் பிரதேசத்தைப் பெரு முதல் போட்டு, விவசாய யந்திரங்களைக் கொண்டு நடத்தப்படும் பண்ணைகளின் தன்மை வேறு. அதைப்போல் நம் நாட்டிலும் கூட்டுறவு முறையினால் செய்து விடலாம் என்று நினைப்பது பிராந்தி. இரண்டுக்கும் அதிக வித்தியாசம். நம் நாட்டுக் கிராமாந்திரக் கூட்டுறவுச் சங்கங்களெல்லாம் எவ்வளவு தூரம்வேலை செய்யும் என்பதைப் பார்த்திருக்கிறோம்.

இந்தியாவில் மற்றப் பகுதிகளைவிடத் தமிழ் நாட்டில் பல கூட்டுறவுச் சங்கங்கள் நடத்தி நமக்கு நல்ல அனுபவமுண்டு. அந்த அனுபவத்தினாலேயே, கூட்டுறவு விவசாயம் வேண்டாம் என்று சொல்லுகிறோம். இருந்தாலும், எந்தக் கொள்கையையும் பரீட்சை செய்து பார்த்தால்தான் பலாபலன் தெரியும். ஆனால் இப் பரீட்சை விஷப்பரீட்சையாகும். பரீட்சைகளினால் நாட்டின் உணவு உற்பத்தி குறைந்து போனால் பெரிய அபாயம் என்பதைக் கூட்டுறவு விவசாயப் பித்தர்கள் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். இருப்பினும் சோதனைகள் செய்து, புதிது புதிதாகப் பாடங்கள் கற்கலாம். அதற்காக மக்களுடைய சொத்தைப் பறிகரணம் செய்வது சகிக்கக் கூடியதல்ல.

எடுத்துக் கொள்ளும் நிலத்துக்கு நஷ்ட ஈடு கொடுக்கும் விஷயம் பற்றி இதுவரை யாரும் பேசவில்லை. நிலத்தைப் பறித்ததற்காகக் கொடுக்கப்படும் நஷ்ட ஈடு பணமாகவோ, சர்க்கார் பத்திரங்களாகவோ கொடுத்தால், ஏற்கனவே காகிதப் பணவீக்கம் ஏற்பட்டு விலைவாசிகள் உயர்ந்து கஷ்டப்படும் நாட்டில், இன்னும் என்ன என்ன தொல்லைகள் விளையுமோ என்பதைப் பற்றி அதிகாரத்திலுள்ளவர்கள் சிந்தித்துப் பார்த்ததாகவும் தெரியவில்லை.

மக்களுக்குப் போதிய தைரியமில்லாததால், பிரச்னையைச் சுற்றி வளைத்துத் தாக்கப் பார்க்கிறார்கள். நில உச்சவரம்பை விரும்பாதவர்கள், 'நிலத்துக்கு மட்டும் ஏன் உச்சவரம்பு? எல்லாத் தொழில் வருமானங்களுக்கும் உச்சவரம்பு கட்டுங்களேன்' என்று வாதம் செய்கிறார்கள். மிகச் சாமர்த்தியமாக வாதாடி விட்டதாக வேறு நினைக்கிறார்கள். ஏற்கனவே செய்யத் நிர்மானித்த தவற்றை எதிர்ப்பதற்கு வழி இன்னும் பல தவறுகள் செய்யுங்கள் என்று சொல்லுவதல்ல. ஒரு தவறுக்குப் பதில் பல தவறுகளே ஏற்படும். சம்பாதித்துப் பெற்ற சொத்து நமது உடமையாகும். அரசியல் நிர்ணயச் சட்டம் கொடுத்துள்ள உரிமையுமாகும். அதைப் பறிக்கப் பார்க்கும் முயற்சிகளை நேராகக் கண்டிப்பதை விட்டு, நிலச் சொந்தக்காரர்கள், கூட்டுறவுச் சாகுபடி முறையை எதிர்த்துப் பேசுகிறார்கள்! கொள்ளைக்காரன் ஒரு ஸ்திரீயின் நகைகளை அபகரித்து, தங்கமாக உருக்கிவிடப் போவதாக மிரட்டினால், "அப்பனே! நகைகளை உருக்காதே. அது உனக்கு லாபகரமாகாது. நகையாகவே வைத்துக் கொள்" என்று அந்த ஸ்திரீ சொல்வது போலாகும். இதைத்தான் நிலத்தை இழக்க விரும்பாத நிலச் சொந்தக்காரர்கள் இப்போது பண்ணை முறைகளைப் பற்றிப் பேசிக்கொண்டிருப்பது. அநீதியை இவ்வாறு சுற்றி வளைத்துக் கொண்டு எதிர்க்கும் முறை அநீதியை அகற்றுவதற்குப் பதில் எல்லாரையும் குழப்பத்தில் ஆழ்த்தத்தான் உதவும்.

இன்று வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியது என்ன வென்றால்,—பாடுபட்டு உழைத்து வரும் ஏழை மக்களின் உள்ளத்தில் தவறான ஆசைகளைக் கிளப்பி விட்டு, 'உங்களுக்கெல்லாம் நிலம் கொடுக்கிறோம்' என்று சொல்லி ஏமாற்றுவதைக் கண்டிக்க வேண்டும். நிலம் படைத்த சொற்பப் பேர்களின் மீது ஏழைகளைத் துவேஷம் கொள்ளச் செய்து வர்க்கப் போராட்டத்தை வளர்க்கும் கொள்கையைக் கடுமையாகக் கண்டிக்க வேண்டும். சோஷலிஸ சமுதாயம் ஏற்படுத்த துவேஷத்தை வளர்க்கும் கொள்கையோடு எவ்வித உறவும் வைத்துக் கொள்ளக் கூடாது என்ற பாடத்தைத்தான் உலக வரலாறு கூறுகிறது. துவேஷத்தைக் கொண்டு, வோட்டுக்களை அறுவடை செய்யலாம். அதனால் உணவு உற்பத்தி பெருகாது. அது ஒரு நல்ல ஆட்சியாகாது; செல்வம் வளராது. உணவுக்கு வேண்டிய பண்டங்கள் நகரங்களுக்கு வரும் வழியுமாகாது.

மக்கள் அனைவரும் சந்தோஷமாக வாழ வழி செய்ய வேண்டும். துவேஷத்தில் சிலருக்கு ஏற்படும் திருப்தி நிரந்தர இன்பமாகாது.

துவேஷம் எல்லா வகையிலும் தீது. சர்க்காரின் ஆணையின் பேரில் ஏற்பட்ட துவேஷமாயினும், அது பிறகு சர்க்கார் கட்டுப்பாட்டுக்கு அடங்காமல் பிய்த்துக் கொண்டு சென்று விடும்!

—ஸ்வராஜ்யாவிலிருந்து

அரங்கத்தில் மூண்ட தீ


பாரத நாட்டில் மிகப் பெரிய க்ஷேத்திரங்களில் ஒன்ருக விளங்குவது, ஸ்ரீரங்கம்.

சமீபத்தில் இந்தக் திருக்கோயிலின் கர்ப்பக்கிருகத்தில் திடீரென்று தீப்பற்றிக் கொண்டது. ஆபரணங்களை உருக்கும் அளவுக்குத் தீ மூண்டிருக்கிறது. தமிழ் மக்களின் முந்தையத் தவப் பயனின் செயலால், பள்ளி கொண்ட கோலத்திலுள்ள எம்பெருமான் திருவுருவம் சேதமடையாமல் தப்பிற்று. அரவணைமீது அயர்ந்தருளும் கோலத்திலுள்ள இந்த மூல விக்கிரகத்தை, இதயமாகக் கொண்டே ஸ்ரீ ரங்கநாதர் ஆலயத்தைத் தமிழ் மன்னர்கள் வானளாவ எழுப்பினர்கள்.

தீ விபத்து ஏற்பட்டதும், அறநிலையப் பாதுகாப்பு மந்திரி அங்கு விரைந்து சென்ருர். நிலைமையை நேரில் பார்த்தார். அறநிலையப் பாதுகாப்பு ஆணையாளரும், இதர அதிகாரிகளும் அங்கு சென்று, நிலைமையை நேரில் அறிந்தார்கள். பழுதடைந்த கர்ப்பக் கிருகத்தில் மீண்டும் முறையாகப் பூஜைகள் நடத்தும் வரையில் தாற்காலிக ஏற்பாடுகளைச் செய்து வைத்தார்கள்.

ஆனல் இவையெல்லாம், பக்தர்களுக்குத் திருப்தி அளிக்கும் நடவடிக்கைகளாகி விடாது. தீ விபத்தின் மூலகாரணத்தைக் கண்டறிந்து தகுந்த நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

தீ விபத்து தற்செயலாக ஏற்பட்டதா? அல்லது திருட்டு வேலையா என்பதைச் சென்னை அரசாங்கம் உடனே ஆராய்ந்து அறிவிக்கவேண்டும். ஹிந்து மதத்துக்கும், ஹிந்து தேவாலயங்களுக்கும் எதிராகத் தமிழ் நாட்டில் நாஸ்திகம் தங்கு தடையின்றி வளர்ந்து வருவதை யாரும் மறுக்க முடியாது. இந்த நாஸ்திக வாதம் தாராளமாக அநுமதிக்கப்பட்டும் வருகிறது. இந்தியாவில் வேறு எந்த ராஜ்யத்திலும் காணுதவிதமாக இங்குதான் ஆலயவழிபாடுகளைத் தாக்கவும், மத துவேஷம் வளரவும் அநுமதிக்கப்பட்டிருக்கின்றன. தமிழ் நாட்டில் துவேஷப் பிரசார வாக்கியங்கள் எழுதப்படாத கோவில்கள் அநேகமாக இல்லை என்றே கூறிவிடலாம். ஸ்ரீரங்கம் கோவில் அருகேயும் கோவில் சுவர்களிலேயும், இவ்வித வாக்கியங்களைக் காண்பது அரிதல்ல. இவற்றையெல்லாம் மனத்தில் கொண்டு, அரங்கநாதர் ஆலயத்தில் ஏற்பட்ட தீ விபத்து நாஸ்திகர்களுடைய வேலையாக இருக்கலாம் என்றும் சிலர் நினைக்கிருர்கள். அரசாங்கம் விரிவாக விசாரணை நடத்தி முடிவு அறிவிக்க வேண்டும்.



காங்கிரஸ் பல ஊர்களில் படுதோல்வி அடைந்து வருகிறது!

என்ன சேதி?

கொடி விஷயம்

நகரசபைத் தேர்தல்களில் காங்கிரஸ் கட்சி அபேட்சகருக்காகப் பிரசாரம் செய்பவர்கள், அசோக சக்கரம் பதித்த மூவர்ணக் கொடியை உபயோகிக்கிறார்கள். இது மிகவும் தவறு. அசோக சக்கரம் பதித்த மூவர்ணக் கொடி தேசக் கொடி. எல்லாக் கட்சியினரும் மதிப்பும் மரியாதையும், வணக்கமும் செலுத்த வேண்டிய கொடி. அதை ஒரு கட்சிக் கொடி நிலைக்கு இழித்து விடுவது குற்றம். காங்கிரஸ் அபேட்சகர்கள் தங்கள் தேர்தல் பிரசாரத்தில் இக் கொடியை உபயோகப் படுத்துவதினால் மற்றக் கட்சியினர் தேசக் கொடிக்கு வணக்கம் செலுத்தக் கூசுகின்றனர். ராட்டை அமைந்த கொடியே காங்கிரஸ் கட்சிக் கொடி. அசோக சக்கரம் அமைந்தது தேசத்தின் பொதுக் கொடி. ராட்டை பதித்த கொடியைக் காங்கிரஸ்காரர்கள் பயன்படுத்திக்கொள்ளஏன் கூசுகிறார்கள்? ராட்டையில் மதிப்பு குறைந்தபடியினாலா? எது எப்படியாயினும் சர்வ கட்சிக்கும் பொதுவான கொடியைக் கட்சிக் கொடியாக்கி மதிப்பிழக்கச் செய்யக் கூடாது! ஒரு கட்சி அங்கத்தினர்களுக்குச் சர்க்காருடைய ஆதரவு இருக்கிறது என்று தவறான அபிப்பிராயத்தை உண்டாக்கி விடலாகாது.

காட்டிலாகா விழா

நூறு ஆண்டுகள் தொடர்ச்சியாக வளர்ந்து இடைவிடாது சமூகத்துக்குப் பணியாற்றும் தனி ஸ்தாபனங்களைப் பாராட்டி விழாக்கள் நடத்தப்படுவதை நாம் காண்கிறோம். அரசாங்கத்துறையில், நிர்வாக அரங்கில், தனி இலாகா கூட நூறு ஆண்டுகள் பணியாற்றி அதற்காக ஒரு விழா கொண்டாடுவதைச் சாதாரணமாகக் காண்பதில்லை. இதற்கு விலக்கு என்பதுபோல் நமது சென்னை ராஜ்யத்தில் காட்டிலாகா தனது நூறு வருஷ சேவையை மக்களுடைய கவனத்துக்குக் கொண்டுவர இப்போது முன்வந்திருக்கிறது. ஏப்ரல் 7 லிருந்து 14 வரையில் காட்டிலாகா தனது நூற்றாண்டு விழாவை ஒரு வாரம் விசேஷநிகழ்ச்சிகள் மூலம் கொண்டாடப் போகிறது.

காட்டிலாகா என்றால் மரத்தின் நிழலில் குளிர்ந்த காற்றை அனுபவித்துக் கொண்டு விலங்குகளை வேட்டையாடி, கள்ளி பொறுக்க வருபவர்களை விரட்டியடித்துக் கொண்டு உல்லாசமாகக் காலந் தள்ளுபவர்கள் நிறைந்த இலாகா என்றுதான் பலருக்கு எண்ணம். வன மகோத்சவம் கொண்டாடப்படும் வாரங்களில் மட்டும் காடுகள், மரம், செடி கொடி பற்றிய நினைவு வந்து, அந்த வாரம் முடிந்ததும் நினைவும் மறந்து விடும்.

ஆனால் உண்மை அவ்வாறு அல்ல; காட்டிலாகா நமது பொருளாதாரத்தில் முக்கிய இடம் பெற்றிருக்கிறது என்பதை எடுத்துக் காட்டியும், நமது அரசாங்க இலாகாக்களில் இது மிகவும் பழமையானது—நூறு ஆண்டுகள் தொடர்ந்து செயல் புரிந்து வந்திருக்கிறது என்பதைக் கூறவும் இந்த விழா சமயத்தில் ஒரு விசேஷ மலர்கூட வெளியிடத் திட்டமிடப்பட்டுள்ளது. காட்டிலாகா நூற்றாண்டு விழாவில் ராஜ்ய அமைச்சர்களுடன், பிரதமர் நேருவும், மத்திய மந்திரிகளும் கலந்து கொள்கின்றனர்.

சென்னை ராஜ்யத்தில் காடுகளின் பரப்பு சுமார் 8000 சதுர மைல். மொத்த நிலப் பரப்பில் 17 சத விகிதம் காடுகள். அவற்றிலிருந்து சுமார் 39,000 டன் தேக்கு மரங்களும், 800 டன் சந்தனக் கட்டைகளும், மூங்கில்களும் எண்ணற்ற மூலிகைகளும், நமக்கு உபயோகமாகும் பலவிதமான பொருள்களும் வருஷந்தோறும் கிடைத்துக் கொண்டிருக்கின்றன. சுமார் ஒரு கோடி ரூபாய் மதிப்புள்ள பொருள்கள் நமக்குக் காடுகளிலிருந்து கிடைக்கின்றன.

இச்செல்வத்தைப் போஷிக்கவும், பராமரிக்கவும், அபிவிருத்தி செய்யவும் ஒரு தனி இலாக்கா 1856 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு இன்று வரையில் செயலாற்றி வருகிறது.

திபெத் குழப்பம்

திபெத் நாட்டின் துரதிர்ஷ்டத்தைப் பற்றி இந்தியாவில் வருந்தாதவர்கள் இல்லை. திபெத் ராஜ்யம் சீன சாமராஜ்யத்துக்குப் பேருக்கு உட்பட்டிருப்பதாக ஆதிகாலந் தொடங்கிக் கருதப்பட்டு வந்தது உண்மை. ஆயினும் சாம்ராஜ்யத்துக்கு பந்தப்படாமல் சுதந்திர நாடாக பௌத்த மகா குருவின் ஆட்சியில் இருந்து வந்தது. இந்தியா சுதந்திரம் பெற்ற சமயத்தில் சீன அரசாங்கம் தன்னுடைய அதிகாரத்தைத் திபெத்தின் பேரில் செலுத்த யத்தனித்தபோது, இந்திய அரசாங்கத்துக்கு ஓரளவு சமாதானம் சொல்லப்பட்டும் அங்கீகரிக்கப்பட்டும் வந்தது. தற்போது ஏற்பட்டிருக்கிற நிலைமை இந்திய அரசாங்கத்துக்கு ஒரு பெருஞ் சோதனையாக உள்ளது. இந்தப் பிரச்னையை நமது பிரதமர் நேருவுக்கு விட்டு விடுவதுதான் உசிதம். அவர் தம்முடைய செல்வாக்கை ஓரளவு பயன்படுத்தித் திபெத் நாட்டின் சுதந்திரத்தைக் காப்பாற்ற முடியும். இதற்கு மேல் இந்திய அரசாங்கமாவது மக்களாவது ஒன்றும் செய்ய இயலாது. நம்முடைய ராணுவத்தைக் கொண்டு எந்த முயற்சியும் செய்ய இயலாது. இயலாத காரியத்தை ஆரம்பிப்பதும் பிசகு. ஆசிய மக்களின் நல்லபிப்பிராயத்தைச் சீன அரசாங்கத்தார் விரும்புவார்கள். நல்ல முறையில் சமாதானத்தைத் திபெத் நாட்டில் நிலைநாட்டுவார்கள் என்றும் நம்புகிறோம்.

ஆகாசவெடி

"தனியார் நிர்வாகப் பள்ளிகளிலுள்ள ஆரம்ப ஆசிரியர்களுக்குச் சம்பளம் வழங்கும் பொறுப்பைச் சீக்கிரமே அரசாங்கம் ஏற்கும்." —சென்னை கல்வி மந்திரி

சம்பளம் கொடுப்பதிலுள்ள வித்தியாசம் தொகையிலும் உண்டா என்று கேட்கப்படுகிறது!

★

"ஒரு சதுர அங்குலம் இடம் தானமளித்தாலும் அதைப் பூதானவாதிகள் மகிழ்வோடு ஏற்கவேண்டும்."
—பூதான இயக்க அன்பர் ஒருவர்

ரயில் வண்டிகளில் மூன்றும் வகுப்புப் பிரயாணத்தில் இத்தகைய தானங்கள் நடப்பதும் உண்டு.

★

"சென்னைநகரில் 100 அடி உயரத்துக்கு மேல் கட்டடங்கள் கட்டுவதற்குச் சர்க்கார் இனி அநுமதி அளிக்காது."
—மந்திரி ஸ்ரீ மாணிக்கவேலர்

இந்த உச்சவரம்பு காங்கிரஸில், சிலர் கட்டிவரும் ஆகாயக் கோட்டைகளுக்கும் பொருந்துமா என்று கேட்கப்படுகிறது.

★

"இந்தியாவிலிருந்து கொசு வலைகள் ஏற்றுமதி கணிசமாக முன்னேறி வருகிறது." —ஒரு புள்ளி விவரம்

உள்நாட்டில் கொசுக்களின் தொல்லை அதிகரித்து வருவதன் இரகசியம் இப்போது தெரிகிறது!

"ஹோலிப் பண்டிகையன்று விருந்தினர்கள் மீது சாயத் தண்ணீர் அடிப்பதில் நேரு மாளிகைக்குவந்திருந்த அந்நியப் பிரமுகர்களும் கலந்து கொண்டு நேருஜிக்கு உதவினர்." —டெல்லிச் செய்தி

அந்நிய உதவி பெறுவது நமக்குத் தண்ணீர்பட்டபாடாகி வருவது, இப்போது நன்கு வெளியாகிறதல்லவா?

★

"இந்தியாவின் சமாதான சேவையைப் பாராட்டி ஜப்பானிய நண்பர் ஒருவர் பெரிய வெண்கல மணி ஒன்றை அனுப்பியுள்ளார். அது இங்கு எப்போது வந்து சேரும் என்று தெரியவில்லை." —செய்தி

அந்த மணி எப்போது வந்து சேர்ந்தாலும், ஓசைப்படாமல் மட்டும் வந்துவிடப் போவதில்லை!

★

"சில தினங்களாக வெறி பிடித்த வெள்ளாடு ஒன்று இங்கு தெருவில் போவோரையெல்லாம் துரத்தி வந்து முட்டித் தள்ளுகிறது. அதிகாரிகள் வாளா விருப்பானேன்?" —நாகர்கோவில் செய்தி

இவ்விஷயத்தில் தலையிட்டு, ஒரு மோதலை உண்டாக்கக் கூடாதென்று அதிகாரிகள் நினைத்திருக்கலாம்.

★

"மிகப் பழையனவாகி, ஓடத் தகுதியற்ற 618 இந்திய சினிமாப் படங்களைப் பாகிஸ்தானில் ஓடக்கூடாதென்று அந்த அரசாங்கம் தடை விதித்துவிட்டது."
—கராச்சி செய்தி

ஓடத் தகுதியற்ற படங்களுக்கு 'ஓடாதே' என்ற தடை வேறு வேண்டுமா?

தலைவர் செல்வநாயகம்

—கொழும்பு, மார்ச் 24உ

சென்ற வாரம் கொழும்பு தமிழ்ச் சங்கத்தினர் கம்பர் விழாவைச் சைவ மங்கையர் கழகத்தில் சிறப்பாகக் கொண்டாடினார்கள். அவ் விழாவில் சங்கத் தலைவரும் தமிழ் மறைக் கழகத் தலைவருமான பண்டிட் கா. பொ. இரத்தினம் பேசுகையில், ஒருநாட்டின் பல துறைகளிலும் தொண்டாற்றியுள்ள பெரு மக்களைப் போற்றுவது மக்களின் தலையாய கடமையென்றும் அறிஞர்களைப் பாராட்டாத நாடு ஒருபோதும் முன்னேற முடியாதென்றும் தமிழகத்திலே பல அறிஞர்கள் தோன்றி மக்களுக்கு நல்லறிவு புகட்டி வந்துள்ளனரென்றும் கூறிக் கம்பரின் இலக்கியத் தொண்டை விரிவாக எடுத்துரைத்தார். இந்தக் கூட்டத்தில் வேறு பல தமிழறிஞர்களும் இலக்கியச் சொற்பொழிவாற்றினார்கள்.

நாட்டுக்குப் பல துறைகளிலும் சேவை செய்த பெரியார்களைக் கொண்டாடாத நாடு ஒருபோதும் முன்னேற்றமடைய முடியாதென்று பண்டிட் இரத்தினம் சொல்லியதைக் கேட்டவுடன் மார்ச்சு மீ 31-ம் தேதி வரும் ஈழத் தமிழகத் தந்தையெனப் போற்றப்படும் திரு எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் 61-வது ஜயந்தி தினம் தான் நம் ஞாபகத்துக்கு வருகிறது. செல்வா என்று அருமை பெருமையாக அழைக்கப்படும் திரு செல்வநாயகத்தின் அரசியல் கொள்கைகளைப் பற்றிப் பலரிடையில் கருத்து வேற்றுமைகள் இருக்கலாம். தமிழ் மக்களின் மொழி உரிமைக்காகவும், அரசியல் உரிமைகளுக்காகவும் அவர் கையாண்ட சத்தியாக்கிரகம் போன்ற நடவடிக்கைகளின் விவேகத்தைப் பற்றியும் கருத்து வேறுபாடுகள் இருக்கக்கூடும். ஆனால் திரு செல்வநாயகத்தின் தியாக சிந்தையையும் சேவா உணர்ச்சியையும் மன உறுதியையும் தார்மீகப் பண்புகளையும் பற்றி அவருடைய எதிரிகளிடையில் கூட நிச்சயம் அபிப்பிராய பேதம் இருக்க முடியாது. அடிக்கடி அரசியல் குட்டிக் கரணமடிக்கும் அரசியல்வாதிகள் மலிந்த ஒரு நாட்டிலே ஒருவர் ஒரே மாதிரியான அரசியல் கொள்கையை உறுதியுடன் கடைப்பிடித்து அதற்காக எவ்விதத் தியாகத்துக்கும் தயாராயிருப்பதென்றால் அது பெரிய ஆச்சரியமல்லவா?

1948-ம் ஆண்டில் இந்திய வம்சாவளியினர்களின் பிரஜாவுரிமைப் பிரச்னையில் அகில இலங்கை தமிழ்க் காங்கிரசுடன் கருத்து வேற்றுமை கொண்டு அதிலிருந்து விலகித் தமிழரசுக் கட்சியை அவர் நிறுவினார். இந்திய வம்சாவளியினர் அனைவரையும் இரவோடு இரவாக இந் நாட்டின் அந்நியர்களாக்கி அவர்களது பிரஜாவுரிமையையும் ஓட்டுரிமையையும் பறித்த சட்டங்களை முழு மூச்சுடன் எதிர்த்து, தமிழ் பேசும் மக்கள் எங்கு வசித்தாலும் அவர்கள் அனைவரும் மொழியால் ஒன்றுபட்டவர்கள் என்ற அடிப்படையில் தமிழரசுக் கட்சியை அவர் அங்குரார்ப்பணம் செய்தார். அவருக்குப் பக்கபலமாகத் திரு கு. வன்னியசிங்கம், திரு அ. அமிர்தலிங்கம், திரு வி. ஏ. கந்தையா, திரு ராஜவரோதயம் போன்ற பல தமிழ்த் தலைவர்கள் வாய்த்தார்கள். பத்து ஆண்டுகளுக்கு முன்னால் எந்த இலட்சியத்துடன் தமிழரசுக் கட்சி உதயமாயிற்றோ, அதே இலட்சியங்களுடன் இன்னும் பணியாற்றி வருவதற்கு, திரு செல்வநாயகமே பெருமளவு காரணமென்று கூறினால், மிகையாகாது. தமிழ் பேசும் மக்களை இந்தியத் தமிழர்களென்றும், இலங்கைத் தமிழர்களென்றும், யாழ்ப்பாணத் தமிழர்களென்றும், மட்டக்களப்புத் தமிழர்களென்றும் கூறுபோட அனுமதித்ததே தமிழர்களின் இன்றையத் தாழ்ச்சிக்கு மூலகாரணமென்பதை உணர்ந்து சகல தமிழர்களையும் ஒரு இனமாகத் திரட்டுவதில் திரு செல்வநாயகம் அரும்பாடுபட்டு வருகிறார். அவரது செல்வாக்கில் பொறாமை கொண்டவர்கள் வேண்டுமானால் அவரது அரும் பெரும் சேவைகளைச் சிறுமைப் படுத்தலாம். ஆனால் "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு. இன்றேல் தமிழினம் முழுவதற்கும் வீழ்வு" என்ற தாரக மந்திரத்தை அவர் அல்லும் பகலும் அனவரதமும் மக்களுக்கு எடுத்துரைத்துத் தீவிர சக்திகளையெல்லாம் கட்டுப்படுத்திவைத்து சத்தியத்தையும் தர்மத்தையும் பக்கபலமாகக் கொண்டு பணியாற்றி வருவதை நாடு நன்கறியும். அவரது இந்த மேலான பணியே "ஈழத் தமிழகத்தின் தந்தை" என்ற காரணப் பெயரை அவருக்கு ஈட்டிக் கொடுத்திருக்கிறது. திரு செல்வநாயகம் ஆரோக்கியத்துடன் பல்லாண்டு வாழ்ந்து, ஆரம்பித்த நல்ல பணியைத் தொடர்ந்து நடத்த வேண்டுமென்பதே தமிழர்களின் பிரார்த்தனையாகும். —ராஜனி



திரு செல்வநாயகம்

வள்ளுவர் வாசகம்

ராஜாஜி

76

துறப்பதற்கு ஒன்றும் இல்லையாயினும் துறவு பூணுவது மிக எளிதாயினும் ஊழின் பயனால் ஞானம் பெறாதவர்கள் மிக வறுமையிலாவது கஷ்டப்படுவார்கள். இல்லறம் விட்டுத் துறவறம் மேற்கொள்ளார்கள்!

முற்பிறப்பில் செய்த நல்வினைகளின் பயனாகத்தான் ஞானம் பெற்றுத் துறவு பூணும் விருப்பம் ஏற்படும்.

துறவில் மனம் செலுத்த முன் ஜன்மத்தில் நல்வினை செய்திருக்க வேண்டும். இல்லையாயின் எத்தனை வறுமையிலும் உலக வாழ்க்கையை விடமாட்டார்கள்.

துறப்பார்மன் துப்புரவு
இல்லார் உறற்பால
ஊட்டா கழியும்
எனின்.

[உறற்பால - ஊழின் பயனாக அநுபவிக்க வேண்டிய துன்பங்கள்; ஊட்டா கழியும் எனின் - அவர்களைத் தாக்காவிடின்; துப்புரவு இல்லார் - அகத்துக்கு வேண்டிய பொருள்கள் இல்லாமல் வறுமையினால் வருந்துகிறவர்கள்.]

ஊழின் பயனாக அந்த ஞானம் இருந்தால் அல்லவோ துறப்பார். இல்லையானபடியால் துறப்பாரில்லை என்று பொருள்பட 'துறப்பார்மன்' என்று சொன்னார். 'புத்தி யிருந்தால் அல்லவோ செய்வான்' என்று சொல்லுவது போல் இது ஒரு பாணி.

* * *

மணக்குடவரின் குறள் அமைப்புப்படி கடைசிக் குறளில் முனிவர் கேட்கிறார்:

நன்றாங்கால் நல்லவாக்
காண்பவர் அன்றாங்கால்
அல்லல் படுவது
எவன் ?

நன்மை வரும் காலத்தில் "சரி, நன்று" என்பார்கள் மக்கள். தீமை வரும் காலத்திலோ அல்லல்படுகிறார்கள். ஊழின் பயன் நல்லதாகும் போது மகிழ்ச்சியடைகிறார்கள். அந்த விதியே கஷ்டம் தரும் காலத்தில் அதை ஒப்புக் கொள்ளாமல் வீணாக அல்லற்படுகிறார்கள். இது என்ன மடமை! நல்லது வரும்போது கேள்வி கேட்காமல் சந்தோஷமாக அநுபவிக்கிறார்கள். கஷ்டம் வந்தபோது, 'இது என்ன அநியாயம்!' என்று குற்றம் சொல்லி வருந்துகிறார்கள். இரண்டும் ஒரே விதிக்கு உட்பட்ட நிகழ்ச்சிகள் என்று அறிய மாட்டார்கள்.

பொறுத்து, இன்பத்தைச் செருக்கின்றி அநுபவித்து, செய்ய வேண்டிய கடமைகளைச் செய்து கொண்டு போக வேண்டும். ஆண்டவன் அருளை நாடுவதும் ஒரு உயர்ந்த நற்செயலாகும். அதைச் செய்தால் அதன் பயனையும் அடைவோம். துன்பம் வந்த இடத்துப் பொறுமைக்கும் மனத்தின் நடுநிலைமைக்கும் அடக்கத்துக்கும் சாதனமாக ஊழைப் பற்றிச் சொல்லியிருப்பதை வைத்துக் கொள்ள வேண்டும். ஆன்ம சுதந்திரத்துக்கு விரோதமாக அதை அர்த்தம் பண்ணிக் கொள்ளக் கூடாது. ஆன்மாவுக்குப் பூரண கர்ம சுதந்திரம் உண்டு. அதைப் பயன்படுத்தி வருங்கால நிலையை நாம் வகுத்துக் கொள்ள வேண்டும். இந்தப் பிறப்பில் நாம் செய்யும் செயல்களும் செய்யாது ஒழிக்கும் செய்யாமைகளும் ஆண்டவன் அருள் பெற்றுச் செய்தோமானால் அவை வீண் போகா; பயன் பெறும்.

ஊழ். கர்ம விதி. 'தலையெழுத்து'— இவற்றைப் பற்றிக் குறளிலாவது நம்முடைய மற்ற சாஸ்திரங்களிலாவது சொல்லியிருப்பதைத் தவறாகப் பொருள் கொள்ளலாகாது. இந்து மதம், பௌத்தம், சமணம் எல்லாச் சமயங்களுக்கும் கர்ம விதி பொதுக் கொள்கை. அந்தக் கொள்கையைப் புரிந்து கொள்ளாமல், செயலுக்குப் பயனில்லை என்று அர்த்தம் செய்து கொண்டு, புருஷ யத்தனத்தை விட்டு விடலாகாது. கடமைகளை மறக்கலாகாது. முன் ஜன்மத்தில் செய்த நற்செயல், தீச்செயல் இவற்றின் பயனைத் தவிர்க்க முடியாது என்பது எவ்வளவு நிச்சயமோ அவ்வளவு நிச்சயம் இந்த ஜன்மத்தில் நாம் செய்யும் நற்செயலின் நல்ல பயனும், தீச்செயலின் கெட்ட பயனும். ஆனபடியால் ஊழினால் நாம் அனுபவிக்க வேண்டியதாக வரும் துன்பத்தைப் பார்த்துக் கலக்கம் கொள்ளலாகாது. ஊழின் வலியைப் பற்றி முனிவர் சொல்லியிருப்பதை, முயற்சி செய்வதில் பயனில்லை என்று வைத்துக் கொள்ளலாகாது. ஊழ் இன்னது வகுத்திருக்கிறது என்று நமக்குத் தெரியாது. முயற்சி செய்தும் பயன் பெறாமற் போனால் அது ஊழின் வலி என்று வைத்துக் கொள்ள வேண்டியதே யொழிய, முயலாமல் இருப்பதற்குச் சாக்காக வைத்துக் கொள்ளலாகாது; மனத் தளர்ச்சி அடையலாகாது. சோம்பல் கூடாது. முனிவரே சொல்கிறார் :

ஊழையும் உப்பக்கம்
காண்பர் உலைவுஇன்றித்
தாழாது உஞற்று
பவர்.

[உப்பக்கம் காண்பர்-புறங்காட்டி ஓடுவதைக் காண்பார்; உலைவு இன்றித் தாழாது உஞற்று பவர்-மனத்தில் தளர்வு இன்றி முயல்பவர்]

'தெய்வத்தால் இடுக்கண் வரினும் முயற்சி விடற்பால தன்று' என்று பரிமேலழகர் உரை கூறுகிறார்.

முயற்சிகள் எல்லாம் செய்து, பின்னும் ஒருவினை நிறைவேறாமற் போனால் அந்தத் தோல்வியைப் பொறுமையுடன் அனுபவிக்கவும், வெற்றி பெற்றால் அந்த வெற்றியினால் பெருமிதம் அடையாமல் அடக்கத்தோடு நடந்து கொள்ளவும் உதவும், ஊழைப் பற்றிய சாத்திரம்.


ஏப்ரல்
3உ முதல்
சென்னை மற்றும்
தென்னாடெங்கும்
மாடர்ன் தியேட்டர்ஸ்
வண்ணக்கிளி
சங்கீதம்..K.V.மஹாதேவன் டைரக்ஷன்...T.R.ரகுநாத் வசனம்..ரா.வே.
BALU BROS

காய் கறிகளுடன் பேட்டி!

[நமது அதிசய நிருபரின் அளப்புகள்]

காய்கறி வியாபாரிகள் கடையடைப்பு செய்தாலும் செய்தார்கள், சென்ற நான்கு தினங்களாகச் சென்னை நகரம் 'ருசி'யற்ற நிலைமையை அடைந்து விட்டது. வீடுகளில் அரிவாள்மணைகள் துருப்பிடிக்கத் தொடங்கி விட்டன.

காய்கறிகள் நறுக்குவதில் கைதேர்ந்த கேசவன் நாயர், இப்போது நான்கு தினங்களாக நறுக்குவதற்கு ஒன்றுமில்லாமல் படும் அவதியைப் பார்த்தேன்.

"எதையாவது நான் நறுக்கவேண்டும்! எவ்வளவு நாட்கள் நான் இப்படிக் கத்தியைத் தீட்டி வைத்துக் கொண்டு சும்மா உட்கார்ந்திருப்பது?" என்று அவன் கேட்டதில் அர்த்தமில்லாமல் போகவில்லை.

"எங்கே மறைந்தன காய்கறிகள்?" எங்கும் இந்தக் கேள்விதான். "எவ்வளவு நாட்களுக்குத்தான் மறைந்து இருக்க முடியும்? அழுகி விடாதா?"

கடைத்தெருவுக்குச் சென்று மறைந்து கொண்டிருந்த காய்கறிகள் சிலவற்றைக் காணப் புறப்பட்டேன்.

"குட்மார்னிங், ஸார்!" என்று கூறிற்று ஒரு கூடையிலிருந்து எட்டிப் பார்த்த வெண்டைக்காய்! "வரிவிதிப்பை எதிர்த்துச் சென்னை ராஜ்ய அழுகுப் பொருள் வர்த்தகர்களின் கடையடைப்பை நீ ஆதரிக்கிறாயா, இல்லையா? சொல்லு. வெண்டைக்காயே!" என்று கேட்டேன்.



"ஆதரிக்கவில்லை! சென்னை சர்க்காருக்குத் தான் என் ஆதரவு உண்டு!"

"அரசாங்கத்தின் கொள்கைகள் எல்லாமே, இப்போது வெண்டைக்காய் சம்பந்தப்பட்டிருப்பது எனக்குத் தெரியும். ஆனால் நான் கேட்க விரும்பியது வேறு. அழுகுப் பொருள்களுக்கு விற்பனை வரி விதிப்பது நியாயமா என்பது பற்றித்தான்!"

"நான் எப்போதும் என்னை அழுகுப் பொருளாகவே கருதியதில்லை. நறுக்கி வெய்யிலில் போட்டு விட்டால் நான் ஏன் அழுகப் போகிறேன்?" என்று கூறியது வெண்டைக்காய்.

நான்: (அடுத்தபடியாக பூசணிக்காயைப்பார்த்து) அரசாங்கம் அ. பொருள் விற்பனை வரி விதிப்பதை நீ ஆதரிக்கிறாயா?

பூசணி: ஆதரிக்கவில்லை. இந்த வரிக்கு அவசியமே இல்லை. சர்க்காரின் வரிக் கொள்கையே, பூசணிக்காயைச்சோற்றில் மறைப்பது போலத்தான் இருக்கிறது!

நான்: வரி விதித்தால் அதைப் பொது மக்கள்தானே கொடுக்கப் போகிறார்கள்?

பூசணி: பொது மக்களை ஏதோ சுண்டைக்காய்களாக நினைத்து இஷ்டப்படி வரி விதித்துக்கொண்டு போவது சரியல்ல.

இவற்றை ஒட்டுக் கேட்டுக் கொண்டிருந்த கத்தரிக்காய் கூடையிலிருந்து எட்டிப்பார்த்து, 'வணக்கம் ஸார்!' என்றது.

நான்: வணக்கம், கத்தரிக்காயே! இந்தக் கடையடைப்புகளை நீ ஆதரிக்கிறாயா?

கத்தரி: கடையடைப்பை நான ஆதரிக்கவில்லை. அரசாங்கத்தின் வரிவிதிப்பு முறையையும் நான் ஆதரிக்கவில்லை. இரண்டுமே எனக்குப் பிடிக்கவில்லை. ஒருபுறம் பொது ஜனங்கள் கத்தரிக்காய் கிடைக்காமல் படும் திண்டாட்டங்களைப் பார்த்தால், பரிதாபமாயிருக்கிறது. மற்றொருபுறம் கீரை, பச்சைமிளகாய், கத்தரிக்காய் இம் மாதிரிப் பொருள்களுக்குக்கூட வரி விதிக்கும் நிலைமை ஏற்பட்டு விட்டதே. இனி வரி விதிக்க ஒரு பொருளும் கிடைக்காத நிலைமை வரும்போது என்ன செய்யப் போகிறார்கள் என்பதை நினைத்தால் ஆச்சரியமாயிருக்கிறது!

நான்: அதைப் பற்றி நீ கவலைப்படுவது அதிகப்பிரசங்கித்தனமாகும். அதோ, புடலங்காய் எனக்காகக் காத்துக் கொண்டிருக்கிறது. அதனுடன் இரண்டு வார்த்தைகள் பேச வேண்டும். இல்லாவிட்டால்......

புடலங்காய்: இல்லாவிட்டால் நான் உங்களையெல்லாம் என்ன செய்துவிட முடியும்? பாம்பைப் போல் காலைச் சுற்றிக் கொள்ளத்தான் முடியுமா?

நான்: அரசாங்கத்தின் வரி விதிப்புக் கொள்கை இப்படியே நீடிக்குமானால் வருங்காலத்தில் நல்ல நல்ல காய்கறிகளெல்லாம், விலை அதிகரிப்பால், அகப்படாப் பொருள்களாகி விடுவது நிச்சயம். புடலங்காய்களைக் கண்டால் ஒருவேளை நமது வருங்காலச் சந்ததிகள் பாம்பு என்று பயந்தாலும் பயப்படலாம்.

புடலங்காய்: உங்களுடைய ஊகம் சரியானால், வருங்காலச் சந்ததிகள் "காய்கறிகள் என்றாலே என்ன?" என்றுதான் கேட்க நேருமா?

நான்: ஆமாம்! அந்தமாதிரியும் நேரும்.

புடலங்காய்: ஒருவேளை காய்கறி வியாபாரத்தையும் சர்க்காரே எடுத்துக் கொண்டு, தெருவில் காய்கறிகள் விற்பார்களோ?

நான்: அரசாங்கம் இதற்குள் காய்கறி விற்பனைத் தொழிலில் ஈடுபடுமென்று நான் நினைக்கவில்லை. அதற்கெல்லாம் அலாதி சாமர்த்தியம் வேண்டும். தராசு பிடிப்பதிலேயே தனிப் பயிற்சி வேண்டும்.


புடலங்காய்: உண்மை! உண்மை!

நான்: கடையிலுள்ள எல்லாக் காய்கறிகளுக்கும், அதாவது அழுகும் பொருள்களுக்கெல்லாம் என் வந்தனம்; நீங்கள் என்றும் இப்படியே அழுகும் பொருள்களாக விளங்கி, சீக்கிரமே விற்பனையாகி மக்கள் சாப்பாடுகளில் கலந்து கொள்ள வேண்டும்! எல்லாம் வல்ல அரிவாள் மணைகள் இதற்கு அருள்புரியுமாக!

மதுராந்தகத்தில் அறப்பணி

தெய்வங்களில் மிகக் கண்டிப்பான தெய்வம் ராமசந்திரமூர்த்திதான். 'அறம்' என்று வந்து விட்டால், தந்தை தாய் மனைவி என்று தாட்சிண்யம் பார்க்க மாட்டான். அன்னை சீதாப்பிராட்டியை அக்னிப் பிரவேசம் செய்யச் சொன்னான் அல்லவா?

இவ்வளவு கடுமையான அறக் கடவுளாக இருப்பதால்தானோ என்னவோ ராமபிரானுக்குக் கோயில் எழுப்பிக் கும்பிட பக்தர்கள் கூசுகிறார்கள். அதைவிட அந்தக் கோயில்களுக்குத் திருப்பணி செய்யவும் கூசுகிறார்கள். 'நீ திரட்டிய செல்வம் அறவழியதுதானா?' என்று ராமபிரான் கேட்டு விடுவாரோ என்ற அச்சத்தில் சும்மா இருந்து விட்டார்களோ என்னவோ!



ஆனால் அன்பர் ஸ்ரீஹரி அம்மாதிரியல்ல. லட்சக் கணக்கான கல்கி வாசகர்களுக்கு வைத்திய உதவி யளிக்கும் பெருநோக்குடன் கல்கியில் 'நாட்டு வைத்தியம்' என்ற தலைப்பில் எழுதி வரலானார். அக் கட்டுரைகளுக்குச் சன்மானமாக அளிக்கப்பட்டு வந்த சிறு சிறு தொகைகளைச் சேர்த்து, மதுராந்தகத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ ராமபிரானுக்குத் திருமஞ்சனம் செய்வித்துக் குளிர்விக்கும் கட்டளை ஏற்படுத்த, நிரந்தர வருவாயுள்ளபடி ஒரு கட்டடம் எழுப்பி உதவினார். இக்கட்டடத் திறப்பு விழாவும், அதைக் கோவிலுக்கு ஒப்படைக்கும் வைபவமும் சென்ற 19-ம் தேதி மதுராந்தகத்தில் சிறப்பாக நடைபெற்றன. அறநிலையங்களின் பாதுகாப்பாளராகவுள்ள மந்திரி திரு பக்தவத்சலம் தலைமைவகித்து, ஸ்ரீஹரியின் பணியைப் பாராட்டி "ஒவ்வொரு ஊரிலும் எத்தனையோ குறைகள் இருக்கும். அவற்றை அந்தந்த ஊர் மக்களே நிறைவு செய்து கொள்ள முயல வேண்டும். எல்லாவற்றுக்கும் சர்க்காரையே எதிர்பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது" என்று கூறினார். ஹிந்து பத்திரிகையின் உதவி ஆசிரியர் திரு வி. கே. நரசிம்மன், தினமணி உதவி ஆசிரியர் திரு ஏ. ஜி. வேங்கடாச்சாரியார், மத்திய சர்க்கார் செய்தி ஸ்தாபனத்தைச் சேர்ந்த திரு சௌம்ய நாராயணன் முதலியோர் விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.


ஒவ்வொருவரும் ஸ்ரீஹரியின் சீரிய அறப்பணியை உள்ள நிறைவுடன் பாராட்டிப் பேசினார்கள். ஸ்ரீமான் சௌம்ய நாராயணன், கல்கியில் ஸ்ரீஹரி எழுதி வந்த நாட்டு வைத்தியக் கட்டுரைகளைப் படித்துப் பயன் அடைந்த பல்லாயிரக்கணக்கான வாசகர்களின் சார்பில் பேசுவதாகக் கூறி ஸ்ரீஹரியின் இரண்டு பணிகளையும் மனமாரப் பாராட்டினார்.


இந்த விழாவுக்கு ராஜாஜியிடமிருந்து அரிய வாழ்த்துரை தமிழிலும் ஸ்ரீஹரியின் வைத்திய சாஸ்திர குருவாகிய ஸ்ரீ சங்குண்ணி மேனன் அவர்களிடமிருந்து வடமொழியில் ஒரு வாழ்த்துரையும் வந்திருந்தன. இவை தவிர பல்லாயிரக் கணக்கான அன்பர்களிடமிருந்தும் ஆசிச் செய்திகள் வந்திருந்தன.

நல்ல பணியைத் தொடங்கி, நல்ல முறையில் சம்பாதித்த செல்வத்தை அறப் பணிக்கு உதவிய ஸ்ரீஹரியைக் கண்டு, அன்று மதுராந்தகம் ஸ்ரீராமரும் சீதாபிராட்டியாரும் மனமகிழ்ந்தனர். அவர்கள் அகமும் முகமும் மலர்ந்திருந்த காட்சியை அன்று அங்கு வந்திருந்தவர்கள் கண்டு தரிசித்து விட்டுக் குதூகலமாகச் சென்னைக்குத் திரும்பினர்.

விழாவுக்குத் தலைமைவகித்த மந்திரி திரு பக்தவத்சலமும், ஸ்ரீஹரி எழுப்பி உதவிய கட்டடமும்







வட்டமேஜை

திருவள்ளுவர் திருநாள்

எமது தமிழ் மறைக் கழகம் சென்ற பல ஆண்டுகளாக வைகாசி அனுடத்தைத் திருவள்ளுவர் திருநாளாகத் தமிழ் கூறும் நல்லுலகமெங்கும் கொண்டாடச் செய்து வருகின்றது. தமிழகம், இலங்கை, வட இந்தியா, மலாயா, சிங்கப்பூர், பர்மா, தென்னாப்பிரிக்கா, பீஜித்தீவு, மொரீஷியசு முதலிய பல நாடுகளிலும் வாழும் தமிழர்கள் ஒன்றுபட்டுத் திருவள்ளுவருக்கு வைகாசி அனுடத்தில் விழா எடுக்கிறார்கள். கொழும்பு, சென்னை, திருச்சி, தில்லி, சிங்கப்பூர், பி. பி. சி. (இலண்டன்) முதலிய வானொலி நிலையங்களும் எமது முயற்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் நல்கி வருகின்றன.

ஆண்டுதோறும் திருவள்ளுவர் திருநாளன்று தமிழர்கள் ஒவ்வொருவருடைய வீடும் விழாக் கோலம் கொள்ளல் வேண்டும் என்பதே எமது கழகத்தின் நோக்கமாகும். எனவே, உலகெலாம் வாழும் தமிழர்களை ஆண்டுதோறும் திருவள்ளுவர் திருநாளைத் தத்தம் வீடுகளில் கொண்டாடுமாறு வேண்டிக் கொள்கிறோம். இப்பெருஞ் செயலை நிலைநாட்டுவதற்கு ஆவன செய்தல் தமிழ்கூறும் நல்லுலகெங்கும் உள்ள தமிழ்ச்சங்கங்கள், மன்றங்கள், கல்வி நிலையங்கள் முதலியவற்றின் முதற் கடமையாகும்.

இ. பி. 1969-ல் திருவள்ளுவர் தொடர் ஆண்டின் ஈராயிரம் ஆண்டு நிறைவினை எங்கும் சிறப்பாகக் கொண்டாடுமாறும் கேட்டுக் கொள்ளுகிறோம். திருவள்ளுவர் தொடர் ஆண்டைத் தமிழர்கள் யாவரும் வழக்குக்குக் கொண்டுவருதலும் இன்றியமையாதது.

திருக்குறள் இன்னும் மொழிபெயர்க்கப் படாத மொழிகளில், அவ்வம் மொழி பெயர்ப்பிப்பதற்கு அம்மொழி வழங்கும் நாடுகளில்வாழும் தமிழர்கள் முயலவேண்டுமென்றும் கேட்டுக் கொள்ளுகிறோம்.

உலகம் போற்றும் ஒப்புயர்வற்ற திருக்குறளைச் செய்தருளிய திருவள்ளுவருக்கு உலகெலாம் வாழும் தமிழர் எவ்வித வேறுபாடுமின்றி ஒன்றுபட்டு ஆண்டுதோறும் ஒரு நாளிற் பெருவிழா எடுக்கிறார்கள் என்னும் புகழுரையை நிலைநாட்டுதற்கு உலகெலாம் வாழும் தமிழர்கள் ஒன்றுபடுவோமாக. வாழ்க தமிழ்மறை! வளர்க தமிழினம்! இவ்வாண்டுத் திருவள்ளுவர் திருநாள் மே 22 வெள்ளி (22—5—59).

கொழும்பு
22—3—59

கா. பொ. இரத்தினம்
தலைவர், தமிழ்மறைக் கழகம்

வள்ளுவர் வாசகம்

காகிதத்தில் வரைந்த சித்திரத்தை அழித்து விடலாம். கல்லில் செதுக்கிய சிற்பத்தைக் கூடக் கஷ்டப்பட்டுப் பெயர்த்து எறிந்து விடலாம். ஆனால் தமிழகத்தின் அறிவு விசாலத்துக்கும், கற்பனா சக்திக்கும், தத்துவ ஞானத்துக்கும், சமயப் பற்றுக்கும், ஒழுக்க உபாசனைக்கும், ஓர் எடுத்துக்காட்டாக விளங்கும் ராஜாஜி அவர்கள் கல்கியில் எழுதி வரும் வள்ளுவர் வாசகத்தில் ஒவ்வொரு குறளிலுள்ள கருத்தையும் வாசகர்கள் மனத்திலிருந்துஎன்றும்அகற்றமுடியாது.

அழகர் நாயகன்பட்டி
24—3—59

டி. ஏ. ராஜாத்தி
டி. ஏ. விஜயா

லாரி எப்போதுதான் ஓட்டுவது?

சமீபத்தில் வெளிவந்த ஒரு அறிக்கை லாரிகள் இரவு நேரங்களில் ராஜ்யத்தில் எங்கேயும் ஓடக் கூடாதென்று தடுக்கிறது; மற்றொரு செய்தி சென்னை மவுண்ட்ரோட் பகுதியில் பகல் வேளையில் குறிப்பிட்ட நேரங்களில் லாரிகள் போகக் கூடாதென்று தடை செய்கிறது.

இராக் காலத்தில் ஓடக்கூடாதென்பதற்கு லாரிகளின் வெளிச்சம் கண்ணைப் பறிக்கிறதென்பது காரணமாகச் சொல்லப்படுகிறது. யுத்த காலங்களில் கூட இவ்வாறு முழுதும் தடை விதிக்கப்படவில்லை. வெளிச்சத்தைத் திரையிட்டுக்



"அவங்க வீட்டில் என்ன சமையல்... பேஷா இருந்தது. கத்தரிக்காய் மசாலா, புடலங்காய்க்கூட்டு வெண்டைக் கறி, சேனை வறுவல், உருளைக் கிழங்குக் கறி, வெங்காயம் தக்காளி சாம்பார், எலுமிச்சை ரசம் எல்லாம் பிரமாதம்!"

"இந்தக் கறிகாய்ப் பஞ்சத்திலே இத்தனையும் யார் வீட்டிலே?"

"நம்ம கறிகாய்க் கடைக்காரர் ஷண்முகம் வீட்டிலே!"

குறைத்து ஓட்ட அனுமதித்தனர். இப்போதும் அவ்வாறு செய்யலாம்.

லாரிகளுக்கு இரவுப் பயணம்தான் ஏற்றது. குளிர்ந்த வேளைகளில் லாரிகள் ஓட்டுவதால் டயர் சேதம், என்ஜின் கோளாறு அதிகமாக ஏற்படாது. ஜன நடமாட்டமில்லாத வேளை யாதலால், உற்பாதங்கள் நேர்வதும் குறையும். காய்கறி வகைகள், பழம், வெற்றிலை போன்று சீக்கிரம் அழுகிப் போகும் பண்டங்களைச் சென்னை போன்ற நகரங்களுக்குக் கொண்டு சேர்க்க இரவு நேரங்கள்தான் லாரி போக்குவரத்துக்கு ஏற்றது. இப்படி இரவு எல்லா வகையிலும் ஏற்ற காலம். வியாபாரத்துக்கும் உகந்தது.

சென்னையில் ரஸ்தாக்களில் நெருக்கடி ஏற்படுவது லாரிகளால்தான் என்பதை ஒப்புக்கொள்ள முடியாது. ஆராயப்பட வேண்டிய விஷயம். கைவண்டிகள் இன்னமும் ஏராளமாக நடமாட்டத்தில் இருக்கத்தான் செய்கின்றன. எவ்வளவு மோட்டார்கள் தாறுமாறாக வீதிகளில் மணிக்கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டு வண்டி நடமாட்டத்துக்கு இடையூறு செய்கின்றன என்பதை ஒரு முறை பிரதான வீதிகளில் சென்று பார்த்தால் தெரியும். ரஸ்தாக்கள் ஏற்பட்டிருப்பது ஓடும் வண்டிகளுக்கே தவிர, நிறுத்தி வைக்கப்படும் வண்டிகளுக்கல்ல என்பதை யார் உணருகின்றனர்?

நிலைமை இவ்வாறு இருக்கையில் 'கூடாது கூடாது' என்று தாறுமாறாக உத்தரவுகள் பிறப்பித்து லாரிகளை நிர்ப்பந்தத்துக்குள்ளாக்கும் நமது அரசாங்கம் லாரிகள் எப்போதுதான் ஓடலாம் என்பதைத் தெளிவாகச் சொன்னால் நலம்:

சென்னை
21-3-59

ஆர். சேஷாத்திரி

சர்க்கார் கவனிக்குமா?

சென்னை பி. டபிள்யு. டி. தொழிற்சாலையில் ஜூலை மாதந்தோறும் 'பைப் லைன் பிட்டர்' பரீட்சை (ஒரு நாள் கேள்வி கேட்பது, மறு நாள் வேலை செய்து காட்டுதல்) நடைபெற்று வருகிறது. அதில் கலந்து பரீட்சை எழுதியவர்களுக்கு ஆகஸ்டு மாதம் தேர்வு விடை அறிவிக்கப்படுகிறது. அதில் தேறியவர்களின் எண்கள் மட்டும்தான் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. தேர்வு பெறாதவர்கள் 'நாம் எப்படித் தேர்வு பெறவில்லை' என்பதைத் தெரிந்து கொள்ள மார்க்குகள் அறிவிக்கப்படுவதில்லை. இரண்டு நாள் பரீட்சைகளில் எதில் நாம் பலக் குறைவாக உள்ளோம் என்பதைத் தெரிந்து கொள்ள முடியாமல் அதே பிசகை மறு முறையும் செய்து பல வருஷங்கள் பரீட்சை எழுதும் பரிதாப நிலைமை ஏற்படுகிறது. வெளி இடங்களில் நன்றாக வேலை செய்து பலரிடம் நற்பெயரும் அத்தாட்சிப் பத்திரங்களும் பெற்றும்



"அப்பா! ஒரு வாரத்துக்குவேண்டிய கறிகாய்களெல்லாம் எல்லோரும் ஒரு மூட்டை வாங்கிட்டாங்க! இன்னும் ஒரு வாரத்துக்குத் தெருத்தெருவா அலைய வேண்டாம்!"

பரீட்சைகளில் சென்ற ஆண்டுகளில் செய்த தவறே மறு வருஷமும் ஏற்படுவதால் சர்க்கார் இதனைக் கவனித்து மார்க் லிஸ்டுகளைக் கெஜட்டில் பிரசுரிக்க வேண்டுகிறேன்.

கருத்தட்டான்குடி
25-3-59

எஸ். கிருஷ்ணமூர்த்தி

மின்சாரச் செலவு

எங்கள் கிராமத்தில் இன்னும் சில நாட்களில் மின்சார மோட்டார் இயங்கப் போகிறது.

ஒரு ஹார்ஸ் பவருக்கு ரூ. 50 வீதம் ஐந்து குதிரை பவருள்ள சிறு என்ஜின் வைத்துள்ளவன் வருஷத்தில் 250 ரூ. கட்டினால் அந்த விவசாயி என்ன ஆவது? மேலும் மிட்டாவை ஒழித்து விட்டதனால் விவசாயிகள் கண்ட பலன் என்னவெனில் நிலங்களுக்கு அதிக வரி விதிக்கப்பட்டுக் கஷ்டத்துக்கு உள்ளாவதுதான். மின்சாரத்தினால் இயங்கும் மோட்டார்களுக்கு மின்சாரசக்தி எவ்வளவு செலவாகிறதோ அதற்கு யூனிட் வீதம் நியாயம் வசூலித்தால் அரசாங்கத்துக்கு மிகவும் நன்றியுள்ளவர்களாக இருப்போம்.

காட்டம்பட்டி
25-3-59

வி. கே. ராமசாமி

"இயக்கம் ஒன்று வேண்டும்"

இந்த வாரத்தின் கல்கி இதழைக் கண்டு மிகவும் பெருமைப்படுகிறேன். அதிலே ராஜாஜி அவர்களின் 'இயக்கம் ஒன்று வேண்டும்' என்ற தலையங்கக் கட்டுரை ஒன்றே இதழின் பெருமைக்குப் போதுமானதாகக் கருதுகிறேன்.

ஒரு தாய் தன்னுடைய புதல்வன், மற்ற தன் நண்பர்களின் போக்கைக் கடைப்பிடித்துத் தீயவழியிலோ அல்லது தவறான வழியிலோ சென்றால் தன் மகனைக் கடிந்து கொண்டு நறுக்க மிரட்டிப் பார்ப்பாள். அல்லது தன் மனத் துயரத்தையாவது வெளிப்படுத்தித் தன் மகனை நல்லோனுக்கவே முயல்வாள். அது போலவே இருக்கிறது, நம் ஒப்பற்ற தலைவரும் தீர்க்கதரிசியுமான ஸ்ரீ ராஜாஜி அவர்களின் அறவுரையும் தேசப்பற்றும்.

காரைக்குடி
26-3-59

பி. ஆர். பாலசுப்பிரமணியன்

❀ பாகவதமாதிய ❀

பக்தி வயல்

பௌராணிகர்

31. ஹரிச்சந்திரனும் சுனஸ்சேபனும்

சூரிய வம்சத்தில் பிறந்த அரசர்களிடையே ஹரிச்சந்திரன் யாவராலும் புகழப்பட்டு நாட்டை ஆண்டு வந்தான். தான் நடத்திய ராஜஸூய யாகத்துக்கு தக்ஷிணையாக இவ்வரசனை விசுவாமித்திர முனி பல விதத்தில் துன்புறுத்திப் பொருளையெல்லாம் அபகரித்துக் கொண்டதும், தீராத துன்பத்திலும் ஹரிச்சந்திரன் தன்னெறி தவறாது நின்றதும் இதை அறிந்த வசிஷ்டர் விசுவாமித்திரரைச் சபித்ததும், எதிராக விசுவாமித்திரர் வசிஷ்டரைச் சபித்ததும், இச்சாபத்தின் பயனாக இரு முனிவர்களும் சில காலம் பறவைகளாய் வாழ்ந்ததும் அனைவரும் அறிந்த கதை.

மக்கட் பேறின்றி வருந்திய ஹரிச்சந்திரன் . நாரதர் உபதேசத்தின்படி வருணனை அடைந்தான். "எனக்கு மகன் பிறக்கட்டும். அவனை உனக்கே அர்ப்பணம் செய்கிறேன்" என்றான். வருணன் அரசனுக்கு மகன் பிறக்குமாறு வரம் அளித்தான். மகனும் பிறந்தான். 'மகனைக் கொடு' என்று வருணன் வந்து கேட்டான். "பிறந்து பத்து நாட்களுக்கு முன் ஒரு பலியைக் கொடுக்கலாகாது" என்றான் அரசன். பத்து நாட்கள் கழித்து வருணன் வந்தான். "வாயில் பல் தோன்றுவதற்கு முன்பு பலியைக் கொடுக்கலாகாது" என்றான் அரசன். குழந்தைக்குப் பல் தோன்றியதும் வருணன் வந்தான். "முதல் பல் விழட்டும்" என்றான் ஹரிச்சந்திரன். பல் விழுந்ததும் வருணன் தோன்றினான். "இரண்டாவது பல் முளைக்கட்டும்" என்றான் வேந்தன். பல் முளைத்தது. "இப்பொழுதாவது சிசுவைக் கொடு" என்றான் வருணன். "க்ஷத்திரியனுக்குக் கவசம் அணிவதுதான் பிறப்புக்குப் பயன். அவ்வயது வரட்டும்" என்றான் ஹரிச்சந்திரன். இவ்வாறு மைந்தன்மீது வைத்த ஆசையினால் அரசன் பலி கொடுக்கும் நாளைத் தள்ளிக் கொண்டே வந்தான்.

தன்னை வருணனுக்குப் பலியாகக் கொடுக்கத் தன் தந்தை தீர்மானித்திருப்பதைக் கேட்ட ரோஹிதன் வில் ஏந்திக் காடு சென்று விட்டான். ஆனால் வருணனுடைய சாபத்தினால் ஹரிச்சந்திரனுக்கு மகோதரம் என்ற வயிற்று நீர் நோய் கண்டு விட்டது. இதைக் கேட்ட ரோஹிதன் நகரத்துக்குத் திரும்புவோம் என்று தீர்மானித்தான். ஆனால் இந்திரன் அவனைத் தடுத்தான். வருண சாபத்தை மாற்றுவதற்கு ஓராண்டு புண்ணிய ஸ்தலங்களில் சென்று நீராடிப் பூஜை செய்யும்படி சொன்னான். இவ்வாறு ஒவ்வொரு ஆண்டு இறுதியிலும் இந்திரன் தோன்றி ரோஹிதனை நகரம் செல்லாமல் தடுத்து வந்தான். ஆறாவது ஆண்டு தனக்குப் பதிலாக வருணனுக்குப் பலி கொடுப்பதற்கு 'சுனஸ்சேபன்' என்ற ஒரு அந்தணக் குமாரனை வாங்கி வந்து தந்தையிடம் சமர்ப்பித்தான். ஹரிச்சந்திரன் சுனஸ்சேபனைப் பலி கொடுப்பதற்கு வேண்டிய முயற்சிகளை ஆரம்பித்தான்.

ஆனால் சுனஸ்சேபன் பலியாகவில்லை. அந்தச் சடங்கில் கலந்து கொண்ட விசுவாமித்திரர் அவனிடம் இரக்கம் கொண்டு தேவரைத் துதித்துத் தம்மை விடுவித்துக் கொள்ளும் மந்திரங்களை அவனுக்கு உபதேசம் செய்தார். அவனும் அவ்வாறே தேவரைத் துதித்து விடுதலை அடைந்தான். விசுவாமித்திரருக்கு அவனிடம் மிகுந்த அன்பு வளர்ந்து, அவனைத் தம் மகனாகவே ஏற்றுக் கொண்டார்.

பகீரதன் தருவித்த பாகீரதி

சூரிய வம்சத்தில் உதித்த அரசர்களுள் சகரன் என்பவன் ஒருவன். சகரனுடைய தந்தை பாகுகர் தமது நாட்டை எதிரிகளுக்கு இழந்து தம் மனைவியுடன் காட்டுக்குச் சென்று விட்டார். அங்கே உயிர் துறந்தார். அவருடைய மனைவியும் அவரோடு உடன் கட்டை ஏறத் தீர்மானித்தாள். அவள் கருத் தரித்திருப்பதைஅறிந்த ஔர்வர் என்ற ரிஷி அவளை இறக்காது தடுத்தார். இதைக் கேட்டுப் பொறாமை கொண்ட வேறு மனைவிமார் அவளுக்கு உணவில் நஞ்சைக் கலந்து கொடுத்தார்கள். ஆனால் அது அவளைப் பீடிக்கவில்லை. நஞ்சோடு நல் மகன் பிறந்தான். ஆகையால் அவனுக்குச் *சகரன் என்ற பெயர் பொருந்தியது.

குறிப்பு: வடமொழியில் "கரம்" என்றால் நஞ்சு. சகரன் என்றால் நஞ்சுடன் பிறந்தவன் என்று பொருள்.

சகரன் புவிச் சக்கரவர்த்தியாகச் சிறப்புடன் ஆட்சி நடத்தினான். அவனுடைய மைந்தர்கள் கடலையே குழித்தனர். பல நாட்டவரைப் போரில் வென்றான். அசுவமேத யாகம் பல நடத்தினான். அப்பொழுது இந்திரன் யாகக் குதிரையைத் திருடிச் சென்றான். சுமதி என்ற மனைவியிடம் சகரனுக்கு அறுபதினாயிரம் மைந்தர்கள் பிறந்திருந்தார்கள். தந்தை சொல் முன்னிட்டு அவர்கள் அனைவரும் குதிரையைப் பூ மண்டலமெல்லாம் தேடிக் காணாமல் பூமியைத் தோண்டத் தொடங்கினர். கடல் தரை மட்டத்துக் குப்பள்ளம் பறித்தார்கள். இவ்வாறு கீழ் நோக்கி வெகுதூரம் தோண்டிய பிறகு வட கிழக்கு பாகத்தில் ஓரிடத்தில் கபிலர் என்ற முனிவர் அருகாமையில் குதிரையைக் கண்டனர். "இதோ, இவன்தான் குதிரையைத் திருடினவன், கண் மூடிப் பாசாங்கு செய்கிறான். இப்பொழுதே இவனைக் கொன்றுவிடுவோம்" என்று கூக்குரல் இட்டுக் கொண்டு அவரை முன்னோக்கிப் பாய்ந்தனர். அச்சமயம் முனிவர் கண் திறந்தார். முன்னமேயே இந்திரனால் சபிக்கப்பட்டு, முனிவரையும் அவமதித்த அரசகுமாரர்கள் தங்களுடைய உடலிலிருந்த நெருப்பினாலேயே சாம்பலாகி நசித்துப் போனார்கள். கபிலர் கோபங் கொண்டு அவர்களை எரித்தார் என்பது தவறு. வானத்துக்குப் புழுதியுடன் தொடர்பு ஏது? தமோ குணத்தைத் தவிர்த்து முற்றிலும் சத்துவமாய்த் துலங்கும் முனிவருக்குச் சினமென்பது ஏது?

சகரனுக்குக் கேசினி என்ற மற்றொரு மனைவியினிடம் அஸமஞ்சன் (அதாவது அத்தனையும் அசடு) என்று ஒரு புதல்வன் உண்டு. ஆனால் அவன் உண்மையில் விவேகி. தோற்றம் மட்டும் தான் பித்து. முன் ஜன்மத்தில் பல யோக சித்திகளை அடைந்திருந்தும் தீயவருடன் பழகி நல்வழியை விட்டு விலகினான். ஆகவே இப் பிறவியில் தோற்றம் மட்டும் மதியற்றவனைப் போல் இருந்தும் மனம் மாசற்று இருந்தது. சுற்றத்தாருக்கும் பொது மக்களுக்கும் வெறுப்பான வழியில் நடந்து கொள்வான். விளையாடும் குழந்தைகளைத் தூக்கிச் சரயூநதியில் எறிந்துவிடுவான். ஆனால் தன்னுடைய சக்தியினால் அவர்கள் ஆற்றோடு போகாமல் உயிர்ப்பித்துக் காண்பிப்பான். இவ்விதம் சிலகாலம் கழித்து விட்டு அஸமஞ்சன் காட்டுக்குச் சென்று விட்டான்.

அஸமஞ்சன் மகன் அம்சுமான். சகரன் அவனை அழைத்து வெகுநாட்களுக்குமுன் காணாமற்போன குதிரையைத் தேடிப் பிடித்து வரும்படி கட்டளை இட்டான். அரசகுமாரனும் தனது மாமன்மார்கள் குறித்த பாதையைப் பின்பற்றிச் சென்றான். சாம்பல் குவியலுக்கு அருகில் குதிரை நிற்பதைக் கண்டான். தவம் இருக்கும் கபிலரையும் கண்ணுற்றான். அப்பெரியாரைப் பலவாறு தோத்திரம் செய்தான். அம்சுமானுடைய மனப் பான்மையைத் தெரிந்த கபிலர் களிப்படைந்தார். அவனிடம் பேசலுற்றார்:

"குழந்தாய்! உன் பாட்டனார் ஆரம்பித்த அசுவமேதயாகத்துக்குரிய இந்தக் குதிரையை இழுத்துச் செல்வாய். இங்கு சாம்பலாய்க் கிடக்கும் உனது மாமன்மார்கள் கங்கையின் நீர் பட்டால் உயிர்



"பெற்று எழுவார்கள்" என்றார். அம்சுமான் அவரை வலம் வந்து தலைவணங்கிக் குதிரையைத் திரும்பவும் மீட்டு வந்தான். இத்தனை நாளும் பூர்த்தியாகாது நின்றுவிட்ட யாகத்தைச் சகரன் முடித்தான். நாட்டை அம்சுமானிடம் ஒப்புவித்து விட்டு இவ்வுடல் என்ற மாயத்தை விட்டு மேலேறினான்.

கங்கையைப் புவிமீது கொண்டு வருவதற்கு அம்சுமான் பலநாட்கள் தபசிருந்தான். ஆனால் அவனுடைய முயற்சி பயனற்றுப் போயிற்று. அவனும் நாளடைவில் இறந்து போனான். அவன் மகன் திலீபன்; திலீபனுடைய மகன் பகீரதன்.

பகீரதன் கங்கையைக் குறித்துக் கடும் தவம் புரிந்தான். அவனுடைய ஊக்கத்தை மெச்சின கங்கா தேவி அவன் முன் தோன்றினாள். "வேண்டிய வரத்தைத் தருவேன்" என மொழிந்தான். விண்ணுலகை விட்டு மண்ணுலகை அடைய வேண்டும் என்று தேவியைப் பகீரதன் கோரினான். "சரியே, ஆனால் என்னுடைய வீழ்ச்சியை யார் தாங்குவார்? நான் விழும் வேகத்தில் பூமியைத் துளைத்துக் கொண்டு ரஸாதலம் சென்று விடுவேன்" என்று தயங்கினாள் தேவி. மற்றுமொரு ஐயமும் அவள் உள்ளத்தில் குடிகொண்டிருந்தது. "பூமிக்கு நான் வந்தால் பாபம் செய்தவர்கள் தங்களுடைய பாபங்களை என்னிடம் கொண்டு கரைப்பார்கள். அப்பாபங்களை ஏற்றுக் கொண்டு நான் அவைகளை எங்கு சென்று தீர்ப்பேன்?" என்று கேட்டாள்.

"மாசில்லா மனத்தோடு வாழ்பவர் பலர் உளர். அவர்கள் பிரமத்தை அறிந்தவர்கள். பற்றை விட்டவர்கள். அவர்களுடைய சேர்க்கையினால் ஹரியினுடைய சேர்க்கையே ஏற்பட்டதாகும். அச்சமயம் பாபங்கள் அழிந்து போகும். வேகத்துடன் விழும் உன்னைத் தாங்கச் சிவனைத் தவிர வேறு யாரால் இயலும்? அவரைச் சரண் புகுந்து கங்கையைச் சடையில் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகிறேன்" என்றான் பகீரதன்.

கங்கையும் சம்மதித்தனள். சிவனும் பகீரதன் செய்த பூஜையால் மனமுருகித் தம் தலை மீது கங்கையைத் தாங்கினார். சிவனுடைய சடையினின்று தரை மீது வீழ்ந்த கங்கையைப் பகீரதன் தனது முன்னோர் சாம்பலாய்க் கிடக்கும் இடத்துக்கு அழைத்துச் சென்றான். கங்கா ஜலம் தங்கள்மீது பட்டதுமே சகரனுடைய மைந்தர்கள் அனைவரும் பாபம் நீங்கி சுவர்க்கலோகம் சென்றனர். தினந்தோறும் விரதத்துடன் கங்கையில் நீராடுபவர்கள் புண்ணியர் என்பதற்கு வேறு சான்று வேண்டுமோ?

ராமாவதாரச் சுருக்கம்

சூரிய வம்சப் பரம்பரையில் தோன்றிய மன்னருள் ரகு என்பவன் நிகரில்லாப் புகழுடன் விளங்கினான். ரகுவின் மைந்தன் அஜன்; அஜன் மகன் தசரதன். தசரதனுக்கு ஹரியே நான்கு மைந்தராகப் பிறந்தார்; ராமன் என்று தானும், பரதன், லக்ஷ்மணன், சத்ருக்னன் என்று விஷ்ணுவின் அம்சங்களுமாய்ப் பிறந்தார்கள்.

ராமர் கதையைப் பரீக்ஷித்துக்கு எடுத்துரைப்பதற்கு முன் சுகர், ஓர் அழகிய செய்யுளால் ராமரை வணங்குகிறார்.

தந்தைசொற் சிரமேற்கொண்டு
கானகம் பலவும் சுற்றி
நொந்த பூப்பாதம் சீதை
அவள் விரல் தொட்டும் நோக
அந்தமாய்ப் பின்னவன் கூட
அனுமனும் உடல்நோய் தீர்க்க(ச்)
சிந்தையில் சினமும் துயரும்
மங்கையின் பிரிவால் ஏகி
மன்னவன் பதறித் தந்த
ஆழிமேல் பாலம் கட்டி
அன்னையை அபகரித்த
அரக்கனை அம்பால் கொன்று
சின்னதோர் விளையாட்டாக
மற்றவர் உயிரை வாங்கி
உன்னதத் தோற்றம் பூண்ட
எம்பிரான் எம்மைக் காக்க

பிறகு ராமாயணக் கதையை சுகர் சொன்னார். கௌசிகன் வேள்வியைத் தனிமையில் காத்ததும்; முந்நூறு மனிதர்கள் முயற்சியோடு கொண்டுவந்த முக்கண்ணன் வில்லினை இளம் கரி விளையாட்டாகக் கரும்பை முறிப்பதுபோல் நாணேற்றி முறித்ததும்; சீலத்திலும் வயதிலும் அழகிலும் தனக்கு நிகரான சீதேவியை மணந்ததும்; பரசுராமன் செருக்கைச் சிதறடித்ததும்; தந்தையின் ஆணையை அனுசரித்துச் செல்வத்தையும் சுற்றத்தாரையும் விட்டகன்று பற்றறுத்த முனிவெனக் கானகம் சென்றதும்; சூர்ப்பணகையின் மூக்கறுத்துக் கரதூஷணர்களை வதைத்ததும்; தங்கையின் சொல் கேட்டுக் காம வெறி கொண்ட ராவணன் சீதையின் மதியை மயக்கவே மாரீசனைப் பொன்மான் வேடத்துடன் அனுப்பியதும்; அன்னவனை ராமன் கொன்றதும்; தேவியை ராவணன் தூக்கிச் சென்றதும்; மனைவியின்மீது ஆசை வைத்தவர் பாடு என்ன வென்று காட்டவே ராமனும் தனிமையில் புலம்பித் திரிந்ததும்; ராவணனோடு போர் புரிந்த

ஜடாயுவுக்கு ஈமக் கடன் ராமனே செய்ததும்; கபந்தனைக் கொன்றதும்; சுக்ரீவனோடும் அனுமனோடும் நட்புக் கொண்டதும்; வாலியை வதம் செய்ததும்; வானரச் சேனையோடு கடற்கரை சென்றதும்; ஆழியின் நீரே வற்றிவிடுமோ என்றஞ்சிக் கடலரசன் தோன்றித் துதித்ததும்; கல்லாலும் மரத்தாலும் வானரர் உதவியால் கடல்மீது பாலம் கட்டியதும்; இலங்கையைத் துகளாக்கி மதம் கொண்ட கரி இனம் கலக்கிய ஆறெனச் செய்ததும்; அரக்கர் இனத்தை அழித்ததும்; அம்பால் ராவணன் மார்பைப் பிளந்ததும்; தனிமையில் சிறையிலிருந்து வாடின வடிவொடு வந்த தேவியைக் கண்ணுற்றதும்; இலங்கையை விபீஷணனுக்கு அளித்ததும்; புஷ்பக விமானத்தில் ஏறிக் கோசலை திரும்பியதும்; பாதுகையைப் பூஜித்து வந்த பரதனால் பரிவாரத்தோடு எதிர்கொண்டு அழைக்கப் பெற்றதும்; வசிஷ்டரால் அபிஷேகம் செய்யப்பட்டு மன்னனாய் வாழ்ந்ததும்; துயரின்றிக் குடிகளைக் காத்ததும்; அனைத்தையும் கங்கையின் கரையிலே உயிர் துறக்கச் சித்தமாய்க் காத்திருந்த பரீக்ஷித்து மன்னனுக்கு சுகர் சுருக்கமாய் எடுத்துரைத்தார்.

ராமபிரான் புவிமீது மானிட மன்னரைப் போல் பல்லாண்டு ஆட்சி செலுத்தினார். விஷ்ணுவான தன்னையே மகிழச் செய்யும் வேள்விகளை நடத்தினார். ஓரிரவு மாறுவேடம் பூண்டு நகர சோதனை செய்யும் சமயம் ஒருவன் தம்மைப் பற்றிப் பேசுவதைச் செவியுற்றார். "மற்றவன் வீட்டிலே வாழ்ந்த உன்னை ஒரு நாளும் ஏற்றுக் கொள்ளேன். ராமன் வேண்டுமானால் மனைவியிடம் மயங்கி அவ்வாறு செய்திருக்கலாம்" என்று தன் பத்னியை ஒரு புருஷன் வைது கொண்டிருந்தான். ராமன் பொது வார்த்தைக்கு அஞ்சினான். சீதாப் பிராட்டியை வால்மீகி ஆசிரமத்துக்கு அனுப்பி விட்டார். கருத்தரித்திருந்த சீதாதேவி ஆசிரமத்தில் லவ குசர்களைப் பெற்றாள். பதியை விட்டுப் பிரிந்திருக்கப் பிரியம் இல்லாத சீதை தன்னை ஈன்றெடுத்த பூதேவியைத் துதித்துப் பூமிக்குள் மறைந்தாள். முயன்றும் முடியாது இச் செய்தியைக் கேட்ட ராமபிரான் மனம் கலைந்தார். பதின்மூன்றாயிரம் ஆண்டு யாகம் செய்தே கழித்தார். பின்பு தம் திருத்தாளின் எண்ணத்தை மாந்தர் மனத்தில் பதித்து விட்டு வைகுண்டம் ஏகினார்.



ஒரே வழி

காந்தன்

ஒரே சமயத்தில் எல்லோருடைய அன்பையும் கவருவது எந்தப் பெரிய மனிதருக்கும் சாத்தியமல்ல. அது போல் எல்லோருடைய மதிப்பைப் பெறுவதும் சாத்தியமல்ல. எல்லோருடைய அநுதாபத்தையும் ஒரே சமயத்தில் பெற்றுவிடுவது எல்லாவற்றையும் விட மிகவும் சிரமமான காரியம்.

அன்பையும் மதிப்பையும் என்னால் அதிகமாகச் சம்பாதிக்க முடியாவிட்டாலும், நண்பர்களின் அநுதாபத்தை ஒரே சமயத்தில் பெற முடிந்ததை மிகவும் பாக்கியமாகத்தான் கருத வேண்டும். அவ்வளவு பேர்களுடைய அநுதாபத்தையும் பெறுவதற்குத் தமிழ்ப் படங்களைத்தான் காரணமாகக் கூற வேண்டும்.

"எப்படி ஸார், உங்களால் இத்தனை தமிழ்ப் படங்கள் பார்க்க முடிகிறது?" என்று கேட்டு என்னுடைய நண்பர்கள் எத்தனையோ பேர்கள் என்னிடம் அநுதாபம் தெரிவித்துக் கொண்டிருக்கின்றனர்.

சமீபத்தில் ஒரு தமிழ்ப் படம் பார்த்து விட்டு நான் அடைந்த வேதனையைச் சொல்லி முடியாது. அதுதான் விக்ரம் புரொடக்ஷன்ஸாரின் தயாரிப்பான "ராஜா மலைய சிம்மன்." அந்தப் படம் முழுவதும் அந்தகாரம் சூழ்ந்து கொண்டிருந்தது. பேச்சு, பாட்டு சரியாய்க் கேட்கவில்லை. கதையின் தொடர்புகள் சரியாய்க் காட்டப்படவில்லை. மலாய் நாட்டுக்கும் பாரத நாட்டுக்கும் இடையே உள்ள பல நூறு மைல்கள் அலட்சியமாக விழுங்கப்பட்டு விட்டன. 'கதைக்குக் கால் இல்லை' என்று சொல்லுவார்கள். அதை ஓரளவு ஒப்புக் கொள்ள வேண்டியதுதான். ஆனால் கதைக்கு உயிரேயில்லை என்றால் அதை எப்படி ஒப்புக் கொள்ள முடியும்?

சமீபத்தில் வெளிவந்த நாலைந்து படங்களில் நல்ல படம் எது என்று சிந்தித்துப் பார்த்தேன். வாகு பிலிம்ஸாரின் தயாரிப்பான "ஒரே வழி"யை ஓரளவு நல்ல படம் என்று சொல்லலாம்.

திரைக்கதை, எதிர்பார்க்கும் அளவுக்கு 'சஸ்பென்ஸ்'களுடன் செல்லுகிறது.

வேலாயுதம் பிள்ளை தம் குடும்பச் சொத்தை விற்றுத் தம் தம்பி மோகனை வக்கீல் ஆக்குகிறார். வக்கீல் மோகனுக்குச் சுலபமாக நீதிபதியின் மகள் பாமா பத்தினியாகிறாள். மோகனின் உதவியால் அவன் தங்கை லட்சுமியைத் தர்மலிங்கத்தின் மகன் பங்காருவுக்கு மணம் செய்து கொடுக்க நிச்சயம் செய்யப்படுகிறது. எதிர்பாராதவிதமாகப் பணமும் கிடைக்காமல், மோகனும் வராமல் போகவே, தாலி கட்டியபின் லட்சுமியின் வாழ்வு பாழாகிறது. வேலாயுதம் மனம் உடைந்து ஊரைவிட்டே வெளியேறுகிறார்.

சாதாரண நாவல்களும் சரி, சினிமாப் படங்களும் சரி கதாநாயகன், கதாநாயகி இவர்களின் சிறப்பைக் கொண்டுதான் வெற்றி, தோல்வி அடைவது வழக்கம்.

ஆனால் இந்தப் படத்தில் அப்படியில்லை; வேறு இரண்டு பாத்திரங்கள் அந்த வேலையை மேற்கொண்டு விடுகின்றன.

மோகனின் சகோதரர் வேலாயுதமும் பங்காருவின் தந்தை தர்மலிங்கமும் கதையின் உணர்ச்சி மிகுந்த பாகங்களை ஆக்கிரமித்துக் கொண்டு விடுகின்றனர்.

எஸ். வி. சுப்பையாவைப் படத்தில் வேலாயுதமாகப் பார்த்ததும் என் மனத்தில் நம்பிக்கை பிறந்து விட்டது. தம்பியின் படிப்புக்காக அவர் பட்ட கஷ்டங்கள், அவன் படிப்பில் முன்னேறி வருவதைக் கண்டு அவர் அடைந்த குதூகலம், தம்பிக்குப் பெரிய இடத்திலிருந்து பெண் வருவதைக் கண்டு அவர் கொண்ட பெருமிதம், எதிர்பாராதவிதமாகத் தம்பி வர முடியாமல் போய்ப் பணமும் கிட்டாமற் போனதனால் மனமுறிந்து அவமானம் தாங்காமல் அவர் துடித்த துடிப்பு—

ஆகியவையெல்லாம் சேர்ந்து படத்துக்குத் தனிக் களை கொடுத்து விடுகின்றன.

வேலாயுதத்தின் வாழ்க்கைத் துணைவியாக வரும் ஸ்ரீரஞ்சனி அவருடைய அபாரம் மிகுந்த சந்தர்ப்பங்களிலும் துணை நின்று படத்துக்குப் புகழ் தேடித் தருகிறார்.

தர்மலிங்கமாக வரும் பாலையா, முதலில் பணக்காரனின் பரம பாசவதனாக வாழ்க்கையை ஆரம்பிக்கிறார். அப்படியே, படத்தின் ஹாஸ்யப் பகுதியையும் பாராட்டத்தக்க முறையில் ஆரம்பித்து வைத்து விடுகிறார். அவருடைய இயற்கையான நடிப்பு படத்தில் நன்கு சோபிக்கிறது. ஆரம்பத்தில் இரக்கமற்ற பாவியாகவும் பிற்பகுதியில் மனித இதயங் கொண்டவனாகவும் நடித்து டி. எஸ். பாலையா அமர்க்களப்படுத்துகிறார்.

லட்சுமியின் பாகத்தை ஏற்றுத் தாம்பரம் லலிதா இயல்பாக நடிக்கிறார். ஆனால் 'குளோஸ் அப்' காட்சிகளில் அவர் முக பாவம் சுகப்படவில்லை.

மோசனாக வரும் பிரேம் நசீர் இந்தப் படத்தில் அதிகம் சிரமப்படவில்லை. விமான விபத்துக்குப் பிறகு அவருக்கு நிறைய ஓய்வு கிடைக்கிறது!

பாமாவாக வரும் எம். என். ராஜத்துக்கு ஏற்கனவே பழகிப் போன பாகந்தான். ஆகவே அவர் நன்றாய் நடிப்பதற்குக் கேட்பானேன்!

சில குறைகள்: தர்மலிங்கத்தின் மகன் பங்காருவின் பாகம் ஏனோ ஆரம்பத்திலேயே அசடு தட்டி விடுகிறது. தந்தையை விட்டு வெளியேறிய பங்காரு, 'ஸ்ரீமான் குறுக்கு வழி'யாக மாறி அரு மணி நேரம் சொற்பொழிவு ஆற்றுவதாகவும், அதைக் கேட்க மக்கள் ஏராளமாகக் குழுமிவிடுவதாகவும் காட்டியிருப்பது டைரக்டர் படத்தின் வெற்றிக்குக் குறுக்கு வழி தேடினதாகக் காண்கிறது! இந்த அசட்டுத்தனம் போதாத குறைக்கு 'ஸ்ரீமான் குறுக்கு வழி'யைப் பல படாதிபதிகள் தங்கள் படத்தில் பிடித்துப் போட முயன்றதாகக் காட்டுகிறார்கள். அசட்டுத்தனத்துக்கு மேல் அசட்டுத்தனம்! அவ்வளவுதான்.

பாமா தன் கணவனைப் பிரிந்து துக்கத்தில் ஏங்கும்போது சிதம்பரம் ஜெயராமனின் பின்னணிப் பாடல் ஒலிக்கிறது. அந்த அர்த்தமற்ற பாட்டுக்கு இடையே காந்திஜி, பட்டேல், நேருஜி, அண்ணாத்துரை ஆகியவர்களின் உருவப் படங்கள் வருகின்றன. அவை ஏன் வருகின்றன என்பதற்கு டைரக்டர் தான் விளக்கம் தரவேண்டும்!


"பக்த ராவண"வுக்குப் பின் டைரக்டர் கே. சங்கர் டைரக்ட் செய்துள்ள முதல் தமிழ்ப் படம் இது. பல குறைகள் இருந்தாலும், அசம்பாவிதம் எதுவும் இல்லாமல் நேர் வழியில் செல்லும் படம் ஒரே வழி!

படத்தின் கௌரவ நடிகரான எஸ். வி. சகஸ்ரநாமம் நீதிபதியாக வந்து மேல்நாடு சென்று கௌரவமாகவேபோய்விடுகிறார்.

இந்தப் படத்தில் முக்கியமாகக் குறிப்பிட வேண்டிய நடிகர் ராமராவ். நீதிபதியின் வீட்டுக் குமாஸ்தா அப்பளாச்சாரியாக வந்து பேச்சுக்குப் பேச்சு 'பமர் பமர்' என்று ஹாஸ்ய வெடியைத் தீர்த்து அற்புதமாக நடிக்கிறார்.

"ஒரே வழி"யின் கதை, வசனம் எழுதியவர் ஜாவர் சீதாராமன்.

படத்தின் வெற்றிக்கு ஒளிப்பதிவு டைரக்டர் தம்புவைக் குறிப்பிட வேண்டும். அவரது கைவண்ணத்தால் இந்தப் படம் தமிழ்ப் படங்களுக்குள்ளேயே ஒரு தனிச் சிறப்பை அடைந்திருக்கிறது.



தனிப்பெருந்தலைவன்

காட்சி 4

[அரசகுமாரி, ஷிமேனு, லேயனோரா, சேவகன்]

அர : சேவகா! ரோடரிகோ எங்கிருக்கிருனென்று பார்த்து இங்கே அழைத்துக் கொண்டு வா.

சே : கோமேசு பிரபுவும் அவரும்......

ஷி : ஆ! என் மனம் பதைபதைக்கிறதே.

அர : மேலே சொல்லு.

சே : இரண்டு பேரும் அரண்மனையிலிருந்து சேர்ந்து வெளியே போனுர்கள்.

ஷி : அவ்விருவர் மட்டுமா?

சே : ஆமாம்! அவர்கள் பேசிக்கொண்டுபோன திணுசைப் பார்த்தால் தாழ்ந்த குரலில் சண்டை போடுவது போல் இருந்தது.

ஷி : ஐயோ! அப்படியானுல் கைகலப்பு வரை போயிருக்கும், சந்தேகமில்லை. நான் இனிமேல் பேசிக்கொண்டு நிற்பது உசிதமில்லை. மன்னியுங்கள், நான் அங்கு உடனே போயாக வேண்டும்.

காட்சி 5.

[அரசகுமாரி, லேயனோரா]

அர : என் மனத்தில் மறுபடியும் சஞ்சலம், அவனுடைய துக்கத்துக்காக வருந்துகிறேன், ஆனுல் அவன் காதலன் எனக்கு உகந்தவனுகவே இருக்கிருன். என் நிம்மதி கலைகிறது; என் காதல் புத்துயிர் பெறுகிறது. ஷிமேனுவும் ரோடரிகோவும் பிரிவது எனக்கு ஒரு பக்கம் துன்பமாயிருந்தாலும், மற்ருெரு பக்கம் நம்பிக்கையை எழுப்பி அந்தரங்கமான உவகையையும் கொடுக்கிறது.

லே : உங்களிடம் உன்னதமாய்க் குடிகொண்டிருந்த மனுேதிடம் இவ்வளவு சீக்கிரத்தில் இந்த இழிவான காதலுக்கு மறுபடியும் இடம் கொடுத்து விட்டதா?

அர : இதை இழிவென்று சொல்லாதே. ஆடம்பரமாயும் வெற்றிகரமாயும் இதுவே இப்பொழுது எனக்குச் சட்டமிடுகிறது. இவ்வளவு அருமையாயிருப்பதால் இதற்கு நீயும் மரியாதை கொடு. நான் என் ஆசையோடு போராடவே செய்கிறேன். ஆனுலும் என்னை மீறி ஆசை வென்று நிற்கவே செய்கிறது. அந்தப் பைத்தியக்கார ஆசையை விடச் சக்தியில்லாமல் என்னுடைய மனம் ஷிமேனு இழந்து விட்ட காதலனையே பற்றிக்கொண்டு ஓட்த் துடிக்கிறது.

லே : உங்கள் அற்புதமான தைரியத்தை இப்படித் தடுமாற விடுவதா? விவேகத்தை முற்றிலும் மறந்து விடுவதா?

அர : சுவையான ஒரு செய்தி மனத்துக்குக் கிடைத்த பின் மனம் விவேகத்தைப் பற்றி எங்கே கவலைப்படுகிறது? நோயாளி நோயையே விரும்பி விட்டால் பரிகாரத்தைப் பற்றி என்ன அக்கறை?

லே : உங்கள் ஆசை உங்களைச் சதி செய்கிறது; உங்கள் கெடுதி உங்களுக்குக் குணமாய்ப்படுகிறது. இந்த ரோடரிகோ உங்களுக்குச் சற்றும் தகுதியுள்ளவனில்லை.

அர : அது எனக்குத் தெரியாதா என்ன? ஆனுல் நான் தைரியத்தைக் கைவிட்டால் என் காதல் மனத்துக்கு எப்படிச் சமாதானம் சொல்லிக் கொடுக்கும் தெரியுமா? ரோடரிகோ மற்றப் பெரும் வீரனை வென்றுனுல் அதையே மூகாந்தரமாய் வைத்து நான் அவனைத் தயக்கமின்றிக் காதலிக்கலாமே. கோமேசையே வென்று விட்டால் அவனுக்கு எதுதான் சாத்தியமில்லாதது? தன் பராக்கிரமத்தால் இராஜ்யத்துக்கு மேல் இராஜ்யத்தை விளையாட்டாகவே உரிமைப்படுத்திக் கொள்வான் என்று சொல்லத் துணிவேன். காதலால் தூண்டப்பட்ட என் மனக்கண்முன் எப்படிச் சித்திரங்கள் தோன்றுகின்றன தெரியுமா? அவன் க்ரனடா தேச அரியணையில் வீற்றிருக்கிருன். மோரார்கள் அடங்கி ஒடுங்கி அவனைப் பணிந்து வழிபடுகிருர்கள். போர்த்துக்கல் தேசம் அடிமைப்படுகிறது. கடல் தாவிச் சென்று ஆப்பிரிக்கர்களின் இரத்தத்தினுல் கனகத வெற்றி மாலைகளை இன்னும் சிவப்பாக்கிக் கொள்கிருன். கர்ண பரம்பரை வீரர்கள் என்னென்ன செய்தார்களோ, அவற்றையெல்லாம் அவன் செய்வான் என்று எதிர்பார்க்கிறேன். அவனைக் காதலிப்பது எனக்கே பெருமையைத் தரும்.

லே : ஆனுல், அம்மணி! சண்டை நடப்பதே சந்தேகமாயிருக்கும்போது அவன் புகழை இவ்வளவு தூரம் உயர்த்திக் கொண்டு விட்டீர்களே!

அர : அவமானம் அடைந்தவன் ரோடரிகோ; செய்தவன் கோமேசு; இருவரும் சேர்ந்து ஒன்ருகச் சென்றிருக்கிருர்கள்; அதற்குமேல் சந்தேகமென்ன?

லே : சரி, நீங்கள் தீர்மானித்து விட்டபடி இருவருக்கும் சண்டையே நடப்பதாக வைத்துக் கொள்வோம். ஆனுல் உங்கள் மனம் செல்லும் இறுதி எண்ணம் வரை அவர் மனமும் செல்லும் என்பது என்ன நிச்சயமோ?

அர: ஆம், அதையும் யோசிக்க வேண்டுமில்லையா? எனக்கு என்னமோ பைத்தியம்தான். என் மனம் இப்படி நிலைகுலைந்திருப்பதிலிருந்தே இந்தக் காதல் பைத்தியம் என்னை என்ன என்ன விபரீதங்களுக்கு உள்ளாக்குகிறதென்று தெரிகிற

எம்.வி.சுப்பிரமணியம் ஐ.ஸி.எஸ்(ரிடையர்டு)


தல்லவா? சரி! என் அந்தப்புரத்துக்குப் போவோம். எனக்குத் தேறுதல் சொல். இந்தத் துன்பம் நிறைந்த நேரத்தில் நீ என்னை ஒரு கணமும் நீங்காமல் இரு.

காட்சி 6

[அரசர் பெர்ணுந்தோ, அரியாசேனா, சாஞ்சோ]

பெர்: கோமேசுக்கென்ன அவ்வளவு கர்வமா, அவ்வளவு விவேகக் குறைவா, தன் குற்றம் மன்னிக்கக் கூடியது என்று எண்ணுவதற்கு அவன் எப்படித் துணிந்துவிட்டான்!

அரி: உங்கள் உத்தரவைப் பற்றி அவருக்கு வெகு நேரம் எடுத்துரைத்தேன் என்னால் இயன்றது அவ்வளவும் செய்தேன். ஆனால் பயனில்லை.



பெர்: என்ன அக்கிரமம்? என்னைத் திருப்தி செய்வதில் இவ்வளவு மரியாதைக் குறைவும் அலட்சியமும் காட்டி, ஒரு மனிதன் திமிர் பிடித்து நிற்பதா? திபேகோவை அவமதித்ததுமன்றி அரசரையும் கேவலமாய் நினைக்கிறாரா? சபை நடுவில் எனக்குச் சட்டம் கற்பிக்கிறீரா? அதி வீரராயிருக்கட்டும், மகாசேனாபதியாயிருக்கட்டும். ஆனால் இந்தக் கொழுப்பை அடக்க எனக்குத் தெரியும். பராக்கிரமத்தின் உருவாகவே இருக்கட்டும், போரில் பெரிய தேவதையாகவே இருக்கட்டும், அரசனின் ஆணையை அவமானம் செய்வதன் பலன் என்னவென்பதை அவர் விரைவில் தெரிந்து கொள்வார். அவர் செய்த அபராதம் பெரிதாயிருந்தும், முதலில் தாட்சண்யம் கொண்டேன். ஆனால் அவர் பதிமீறி நிற்பதால் நீங்கள் இப்பொழுதே போய், அவர் எதிர்த்தாலும் சரி, தப்பாமல் கைது செய்துகொண்டு வாருங்கள்.


சாஞ்: கொஞ்சம் சாவகாசம் கொடுத்தால் ஒருவேளை அவர் கலகபுத்தி மாறலாம், பிரபோ! அவர் பேசும் போது சண்டையில் ஏற்பட்ட கொதிப்பு ஆறாமல் பேசுகிறார். தீரமும் சுய கௌரவம் உள்ள அவர் போன்ற பிறவிகளுக்கு முதல் எடுப்பிலேயே விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை இராது. குற்றம் தம்முடையதுதான் என்று தெரிந்தே இருப்பார்; ஆனால் உடனே அதை ஒப்புக் கொள்வதற்கு யோசனையாயிருக்கும்.

பெர்: சாஞ்சோ! பேச்சை நிறுத்துங்கள். அவர் பக்கம் பரிந்து பேசுபவரும் குற்றவாளிகளாவார்கள் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.

சாஞ்: உங்கள் 'உத்தரவுப்படியே மௌனமாகிறேன்: ஆனால் உங்கள் அனுமதி யிருந்தால் அவருக்காக இன்னும் இரண்டொரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

பெர்: அப்படிச் சொல்ல என்ன இருக்கிறது? சொல்லுங்கள், பார்ப்போம்.

சாஞ்: பெருஞ் செய்கைகளையே புரியுமாறு வழக்கமுள்ளவருக்குப் பணிதல் என்னும் குறைவு மனம் தாங்காது. தங்களுக்கு அவமானமின்றி அதைச் செய்யலாம் என்று அவர்களுக்குத் தோன்றுவதில்லை. அந்தப் பணிவு என்ற சொல்லே அவரை எதிர்ப்புக்குத் தூண்டி யிருக்கிறது. உங்கள் ஏவல்சற்றுக் கடினமாகவே பட்டிருக்கிறது: அவர் தம் மதிப்புக் குறைவாயிருந்தால்தான் அதை ஒப்புக் காக்க வேண்டும். நீங்கள் கூறும் காரணம் எனக்குக் காரணமாகாது. நீங்கள் பட்டாளத்தான் போல் பேசுகிறீர்கள்; நான் அரசர் போல் நடிக்க வேண்டியவனாயிருக்கிறேன். யார் என்ன தான் சொல்லட்டும். கோமேசின் துணிவு எப்படித்தான் இருக்கட்டும். என் சொல் கேட்பதில் அவர் புகழுக்கு ஒரு குறைவும் இல்லை. தவிரவும் அவர் செய்த குற்றம் என்னையே தாக்கியவனாயும் இருக்கிறது. அவர் அவமானப்படுத்தியது என் குமாரனுக்கு ஆசிரியராய் நான் தேர்ந்தெடுத்தவரை, என் தேர்தலையே அவர் நிந்தித்திருக்கிறார்: என் சர்வாதிகாரத்தின் அடிப்படையே வெட்டினாற் போலாகிறது. சரி, அதெல்லாம் ஒருபுறம் இருக்கட்டும். நம் பழைய விரோதிகளின் கொடி பறக்கும்



கொள்ளக் கூடியவராவர். யுத்தத்திலேயே தழும்பேறிய அவருக்கு, யுத்தத்தின் மூலமாகவே அவர் அபராதத்தைத் தீர்க்க வேண்டும் என்று உத்தரவிடுங்கள்: அது தகுதி. அதை அவர் ஒப்புக் கொள்வார்: யார் எதிரியாயினும் சரி. அதற்காக அவர் வரும்வரையில் அவருக்காக நான் இதன் மேல் ஆணையிடுகிறேன்.

[வாளைத் தொடுகிறார்.]

பெர்: நீங்கள் மரியாதையிலிருந்து தவறுகிறீர்கள்: ஆனால் உங்கள் ஆற்றலையும் இளமையையும் உத்தேசித்து உங்களை மன்னிக்கிறேன். அரசர் கவனத்துக்குரியன எவ்வளவோ நல்ல துறைகளில் இருக்கின்றன: மக்களின் இரத்தத்தை அநாவசியமாய் நீர் கூறியவாறு பெருக விடமாட்டார் அவர். தலை உடலிலுள்ள மற்ற உறுப்புக்களைக் கவனிப்பது போல் நான் என் பிரஜைகளின் நன்மையில் ஜாக்கிரதையாயிருந்து அவர்களைப் பாது பத்துக் '''கப்பல்கள் காணப்பட்டதாகச் செய்தி கிடைத்திருக்கிறது. அவர்கள் ஆற்றுமுகம் வரையில் வரத்துணிந்திருக்கிறார்களாம்.

அரி: இருக்காது, பிரபு! அந்த மோரர்கள் உங்கள் பலத்தை நன்கு அறிந்தவர்கள். எவ்வளவோ முறை உங்களிடம் அடி பட்டவர்கள். படைவலிமை உள்ளவராகிய உங்களை மறுபடியும் எதிர்க்க அவர்களுக்குத் தைரியம் வராது.

பெர்: இந்தப் பிராந்தியத்தில் நான் செங்கோல் செலுத்துவது அவர்கள்

மனத்தை எப்பொழுதும் உறுத்திக் கொண்டே இருக்கிறது. அழகான பிரதேசம், அவர்கள் முன் ஆண்டுவந்த இடம். அதன்மேல் இன்னும் ஆசை வைத்தே இருக்கிறார்கள். பத்து வருஷங்களாய்க் காஸ்தில் தேசத்துக்குத் தலைநகராய் இந்த ஸெவில் பட்டணத்தை நிறுவி நான் இங்கு இருப்பதற்கும் அதுவேதான் காரணம். அண்டையிலிருந்தே அவர்களைக் கண்காணித்து வரவேண்டும்: அவர்கள் புது முயற்சியெடுத்தால் வெட்டெனத் தரிக்க வேண்டும்.

அரி: எண்ணிறந்த தலைவர்களின் தலை உருள நிகழ்ந்த இதெல்லாம் அவர்களுக்கு ஏற்கனவே தெரியுமே. உங்கள் வெற்றியை நிலைநிறுத்துவதற்கு நீங்கள் இங்கு இருப்பது ஒன்றே போதுமே; கவலைப்படுவதற்கு ஒன்றுமே இல்லை.

பெர்: ஆனால் அலட்சியம் செய்வதற்கும் இல்லை. அதிக மெத்தனமே ஆபத்துக்கு அழைப்பு. கடலிலிருந்து ஒரு அலையே அவர்களைச் சிரமமின்றி இங்கு கொண்டு சேர்க்கும் என்பது உங்களுக்குத் தெரியும். ஆனாலும் செய்தி நிச்சயமாக இல்லாததால் மக்களுக்கிடையில் வீண் கலகத்தை ஏற்படுத்துவதும் பிசகாகும்; அநாவசியமான பீதி ஏற்பட்டு ஊரெல்லாம் அல்லோலகல்லோலப் பட்டுவிடும். மதில்மேலும் துறைமுகத்திலும் காவல் ஏற்பாடுகளையெல்லாம் இரண்டு மடங்காகச் செய்யுங்கள். இன்று மாலைக்கு அதுவே போதும்.

காட்சி 7

[அரசர் பெர்னாந்தோ, சாஞ்சோ, அலான்சோ]

அலா: பிரபோ! கோமெஸ் இறந்து போய்விட்டார்; தியேகோ தம் குமாரன் மூலம் பழி வாங்கிக் கொண்டுவிட்டார்.

பெர்: பழியைப் பற்றிக் கேட்டதுமே பழி வாங்கலையும் எதிர்பார்த்தேன்; அதைத் தடுப்பதற்கே இப்போது முயற்சியும் செய்தேன்.

அலா: உங்கள் பாதத்தில் தன் துயரத்தை வடித்து உங்களிடம் நீதி கோருவதற்காகக் கண்ணீர் ஆறாய்ப் பெருக ஷிமேனா ஓடி வந்து கொண்டிருக்கிறாள்.

பெர்: அவள் கஷ்டத்தில் எனக்கு அனுதாபம்தான்; ஆனால் கோமெஸ் செய்த திமிரான காரியத்துக்குக் கிடைத்த தண்டனை சரியானதென்றே தோன்றுகிறது. ஆனால் தண்டனை எவ்வளவு நியாயமாயிருந்தாலும் ஓர் பெரிய சேனாபதியை இழந்ததில் எனக்கு வருத்தம் இல்லாமல் இருக்குமா? தேசத்துக்கு எவ்வளவு நீண்டகால சேவை! எத்தனை ஆயிரம் சந்தர்ப்பங்களில் எனக்காக அவர் உதிரத்தைப் பெருக்கியிருக்கிறார்! அவர் கர்வத்தையும், அதன் பலனை அனுபவித்தார் என்பதையும் மறந்து, அவர் போனதால் என் பலம் குன்றிவிட்டதை நினைக்கிறேன்; அவர் மரணத்தால் வேதனைப் படுகிறேன்.

காட்சி 8

[அரசர் பெர்னாந்தோ, தியேகோ, ஷிமேனா, சாஞ்சோ, அரியஸ், அலான்சோ]

ஷிமே: பிரபோ! பிரபோ! நீதி கோருகிறேன்.

தியே: பிரபோ! எங்களுக்கும் செவி சாயுங்கள்.

ஷி: நீதி உரிமையைக் கேட்கிறேன்.

தியே: என் சமாதானத்தையும் கேட்க வேண்டும்.

ஷி: துணிந்த இளைஞனின் துடுக்குத் தனத்துக்குத் தண்டனை கொடுங்கள். உங்கள் செங்கோலின் காவலை முறித்து, என் தந்தையைக் கொன்று விட்டார்.

தியே: தன் தந்தைக்காகப் பழி வாங்கும் நியாயமான காரியத்தைத்தானே அவன் செய்தான்?

ஷி: கொலைக்குத் தண்டனை விதிப்பது அரசர் கடமை.

தியே: நியாயமான பழி வாங்கலுக்குத் தண்டனை கிடையாது.

பெர்: இருவரும் எழுந்திருங்கள். சாவதானமாய்ப் பேசுங்கள். ஷிமேனா! உன் துக்கத்தில் எனக்கு அனுதாபம் உண்டு; சமானமான துயரம் என் உள்ளத்திலும் புகுந்திருக்கிறது. (தியேகோவைப் பார்த்து) நீங்கள் பிற்பாடு பேசலாம்; அவள் முறையீட்டில் குறுக்கிடாதீர்கள்.

ஷி: பிரபோ! என் தந்தை உயிர் துறந்தார். அவருடைய அகன்ற மார்பிலிருந்து இரத்தம் பிரவகித்து ஓடுவதை இந்தக் கண்களால் பார்த்தேன். உங்கள் மதில்களுக்குக் காப்புக் கொடுத்த இரத்தம், எண்ணிறந்த போர்களில் உங்களுக்கு வெற்றி வழங்கிய இரத்தம், உங்களுக்காக அல்லாமல் வேறொருவருக்காகச் சிந்தினேனே என்னும் கோபத்தால், வெளியேறியும் கொதிக்கும் இரத்தம், மாபெரும் யுத்தங்களிலும் எவரும் சிந்தச் செய்ய இயலாத அந்த இரத்தத்தை உங்கள் ஆட்சி பூமியில் நிலம் முழுதும் பரவ விட்டிருக்கிறான் ரோட்ரிகோ. நிலை குலைந்து, நிறம் வெளிறிப் பறந்தோடி அவ்விடத்தைச் சேர்ந்தேன்; உயிருடன் காணவில்லை என் தந்தையை. மன்னிக்க வேண்டும் பிரபோ! துக்கம் தொண்டையை அடைக்கிறது; என் கண்ணீரும் பெருமூச்சும்தான் இனிமேல் வரலாற்றைப் பூர்த்தி செய்ய வேண்டும்.

பெர்: உன்னைத் தேற்றிக்கொள், குழந்தாய்; என்னை உன் தந்தையைப் போலவே நினைத்துக் கொள்.

ஷி: அது எனக்கு மிகப் பெரிய கௌரவம்தான், பிரபோ! உயிரற்ற தந்தையின் மார்பு பிளந்திருந்தது. புழுதியில் வடிந்திருந்த இரத்தம் என் கடமையை எழுதிக் காட்டுவது போலிருந்தது. புண்ணின் வாய் அதை வற்புறுத்திப் பேசுவதுபோல் இருந்தது. அதுவே என் ஏழைக் குரலைக் கடன் வாங்கி நீதிமானான உங்களிடம் முறையிடுகிறது. உங்கள் கண்ணெதிரே அக்கிரமம் பெருக அனுமதியாதீர்கள்.

இழந்த வீரனுக்கு நீங்கள் பழி வாங்கா விட்டால் உங்கள் சேவையில் ஆர்வமே அழிந்துவிடும். ஆகையால் என் தந்தை இறந்ததற்கு மட்டுமல்ல, உங்கள் நலத்தையும் உத்தேசித்தே, பழி வாங்கல் வேண்டுமென்று கோருகிறேன்.

பெர்: இயேகோ! இப்போது உங்கள் கட்சியை நீங்கள் சொல்லுங்கள்:

இயே: எனக்கு வயதாயிற்று. வேலை முடிந்தது என்ற பிறகு, துர்ப்பாக்கியம் ஒன்றும் ஏற்படாதபடி, பலம் குன்றினதும் மரணம் என்று விதித்திருந்தால் எவ்வளவு அழகாயிருக்கும்? நீண்ட சேவை செய்து புகழ்பெற்ற நான், சென்ற இடமெல்லாம் வெற்றியே அடைந்து வந்த நான், அதிக காலம் வாழ்ந்து விட்டதாலேயே அல்லவா இன்று அவமானமடைந்தும் உயிர் தரித்து நிற்கிறேன். யுத்தமோ, முற்றுகையோ, அதிர்ச்சியான தாக்குதலோ, அரகான் தேசமும் க்ரனடா தேசமும் ஒன்று திரண்டோ, உங்கள் பகைவர்களும் என்மேல் துவேஷிகளும் ஒன்று கூடியோ — இவை எவற்றாலும் ஏற்படாத அனுபவம் எனக்கு இப்பொழுது உங்கள் அரண்மனை முன்பு வாய்த்தது. ஏன்? உங்கள் கண்ணெதிரே வாய்த்ததென்றே கூறலாம். கோமேசுக்குத் தூண்டுதல் நீங்கள் செய்த உத்தியோக நியமனம், அவருக்குத் தைரியம் எங்கள் வயது வித்தியாசத்தின் அனுகூலம்! உழைப்பிலே நரைத்த இந்தத்தலை, உங்களுக்காக எத்தனை தரமோ சிதறின இந்த இரத்தம், பகைப் படைகள் கண்டு கலங்கும் இந்தத் தோள் - இவையெல்லாம் அவமானம் சுமந்தே சமாதிக்குள் இறங்கி இருக்க வேண்டும். இறங்காதது, எனக்கும், தேசத்துக்கும், அரசருக்கும் ஒருங்கே தகுதியுள்ளவனும் எனக்கு ஒரு புத்திரன் இருந்ததன் பாக்கியமே. அவன் எனக்குக் கைகொடுத்தான், கோமேசைக் கொன்றான். என் கௌரவத்தைத் திருப்பி அளித்தான், என் அவமானத்தைத் துடைத்தான். என்னைத் தாக்கினதற்குப் பழி வாங்குவதில் தைரியமும் ஆத்திரமும் காட்டியதற்குத் தண்டனை யுண்டானால், அந்த இடி என் தலையில் விழட்டும். கை தவறு செய்தாலும் தலைக்குத்தான் தண்டனை. பிரஸ்தாப விஷயம் குற்றமாயிருப்பினும் சரி இல்லாவிடினும் சரி, அதில் நானே தலை, அவன் கைதான். எனக்குச் சக்தியிருந்தால் நானே அதைச் செய்திருப்பேன்; அப்பொழுது ஷிமேனாவின் தந்தையைக் கொன்ற குற்றச்சாட்டு அவன்மேல் ஏறியிராது. ஆகையால், பிரபோ, வயதினாலேயே இறுதியைக் காத்து நிற்கும் இந்தத் தலையைப் பலியெடுத்துக் கொள்ளுங்கள்; உங்களுக்கே சேவை செய்யக் கூடிய என் மகனின் இந்தக் கையைச் சேமியுங்கள். என்னைக் கொன்று ஷிமேனாவைத் திருப்தி செய்யுங்கள். அதை எதிர்க்கவில்லை; அந்தத் தண்டனைக்குச் சம்மதிக்கவே செய்கிறேன்; அவமானம் நீங்கி இறப்பதால் வருத்தமின்றியே இறப்பேன். (தொடரும்)



சிரிக்காதே!



"பேசிண்டே வேலை செய்பவன் அவன் தொழிலில் முன்னுக்கு வர முடியாது."

"வக்கீல் விஷயம் எப்படி?"

❁

"ஞாபகமறதிக்கு டாக்டர் என்ன கொடுத்தார்?"

"மாத்திரைகள் கொடுத்தார்."

"சாப்பிட்டதில் சௌகர்யமாச்சா?"

"சாப்பிட மறந்து விட்டேன்!"

❁

பருமனாக இருக்கும் ஒருவர் சின்னப் பையனிடம்: "நான் சொல்லுகிறபடி நீ வளர்ந்து வந்தால் பெரியவனானவுடனே என் மாதிரி ஆகிவிடலாம்!"

பக்கத்திலிருந்தவர்: "குழந்தைகளைப் போய் அப்படியெல்லாம் மிரட்டிப் பயமுறுத்தாதீர்கள்!"

❁

காதலன்: என்னைத் தவிர உன் மனத்தில் வேறு யாரேனும் இருக்கிறார்களா?

காதலி: விந்தையாக இருக்கிறது! எந்த ஆண்மகனைப் பார்த்தாலும் இதே அசட்டுக் கேள்வியேதான் என்னைக் கேட்கிறான்!

❁

அம்பி (கதவைத் தட்டிக் கொண்டே): சேகர்! சேகர்!

வீட்டுக்காரர்: சேகர் இல்லை. வெளியே போய்விட்டான்.

அம்பி: ரமேஷ் இருக்கானா?

வீ: இல்லை. அவனும் பள்ளிக்கூடம் போயிட்டான்.

அம்பி: கமலா இருக்காளா?

வீ: இல்லை, அவளும் வெளியே போய் விட்டாள்.

அம்பி: பரவாயில்லை. அப்ப நீங்களேதான் வாங்களேன், விளையாட!

❁

டெலிபோனில்: "ஹலோ! ராமண்ணாவா பேசறது?"

"ஆமாம்! என்ன வேண்டும்!"

"அவசரமா ஒரு ஐம்பது ரூபாய் பணம் வேணும். அனுப்புகிறீர்களா?"

"அவர் வந்தால் அவசியம் நீங்க கேட்டதாகச் சொல்கிறேன்."

❁

"என்ன, ஐயா. இது! ஒரு பெரிய பட்டணம் என்கிறீர்கள்? எனக்கு வேண்டியது ஒன்றும் இங்கே கிடைக்க மாட்டேங்கறதே?"

"என்ன வேண்டும் உமக்கு?"

"கடன்!"

கண்ணம்மா — என் காதலி

"நீயாகவே செய்து பழகு. படித்துப் பட்டம்பெற்ற பெண் எவளையாவது கல்யாணம் பண்ணிக்கொள்ளப் போகிறவன் இப்போதே பழகவேண்டாமா? இதோ, இந்தக் காலத்துப் பெண்களுக்குத்தான் விரல் அசைகிறதா பார்!" என்று முணுமுணுத்தாள் பாட்டி. என் கிழிசல் சட்டையை இன்று நானே — அதுவும் வெளியே போகும் அவசரத்தில் — தைத்துக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம்; வீட்டுப் பெண்மணிகளுக்கெல்லாம் கைக்காரியம், அதாவது, கைக்கு மருதாணி அரைத்து இட்டுக்கொள்ளும் காரியம்!

"ஊசியால் குத்திக்கொண்டு விட்டாற்போலிருக்கிறதே உங்கண்ணு. இரத்தம் வருகிறது மீனு!" என்றாள் என் அத்தை மகள் கண்ணம்மா. தனது பி.ஏ. பரீட்சையை முடித்துக்கொண்டு சென்னையிலிருந்து இன்று காலைதான் வந்து சேர்ந்திருக்கிறாள் அவள்.

"கை சிவந்துவிட்டதாமே மருதாணி இடாமலேயே!" என்றாள் மீனு; உடனே கலீரென்று சிரிப்பொலி; எனக்கோ கைவலி.

"கட்டுப் போடுங்களேன் விரலுக்கு. கந்தலுக்கா பஞ்சம் இந்த வீட்டில்"

"இருக்கவே இருக்கிறது மீனுவின் பழம்புடவை!" மீண்டும் கும்மாளம்!

இதைத் தொடர்ந்து புடவைகளைப்பற்றிய பேச்சு: இரண்டு வருஷங்களுக்கு முன்பு ஜோடியாக எடுத்த ஒரே மாதிரியான புடவைகளில் மீனுவுக்கு ஒன்றும் கண்ணம்மாவுக்கு ஒன்றுமாகக் கொடுத்தார்களாம்; மீனுவின் புடவை மட்டும் சில மாதகாலத்தில் கட்டுப் போடுவதற்கும் குடுகுடுப்பாண்டிக்கும் போய்விட, கண்ணம்மாவின் புடவை மட்டும் இன்றும் அவள் உடம்போடு இருந்து வருவதைக் கண்டு வியந்தனர்.



"நீயும் மருதாணி இட்டுக்கொள், கண்ணம்மா" என்று உபசரித்தாள் மீனு. "இல்லே, மீனு, அப்புறம் . . ." என்று தயங்கினாள் கண்ணம்மா.

நறுக்கென்று இடைவெட்டினாள் பாட்டி. "பி.ஏ. படிக்கிறவள்கிட்ட என்னடி உபசாரம் உன் பழங்காலத்து மருதாணியை?"

L 202A-50 TM



உடனே கண்ணம்மா சொன்னாள்: "மருதாணி எனக்கும் பிடிக்கும், பாட்டி. ஆனால்... இப்போதே இட்டுக் கொண்டுவிட்டால்... வந்து..."

"இட்டுக்கொண்டால் என்ன..."

"ஒன்றுமில்லை... அழுக்குத் துணிகளை இன்றைக்கே துவைத்துக்கொள்ள முடியாமல் போய்விடுமோ என்று யோசித்தேன்."

கண்ணம்மா துணி துவைப்பதாகக் கூறியது எல்லோருக்கும் தூக்கிவாரிப் போட்டது. "வேடிக்கைதான், சலவை செய்வதற்கு நாங்களே வெளியே அனுப்புகிறோம் துணிகளை... இதைக் கேளண்ணா... இவள் சொல்கிறாள்..." என்று என்னைக் கூப்பிட்டாள் மீனு. வெளியே கிளம்பும் அவசரத்தில் இவர்கள் வம்புப் பேச்சைக் கேட்க எனக்கேது நேரம்?

அப்புறம் விளக்கு வைக்கும்போதுதான் வீடு திரும்பினேன். வந்தவுடனே அந்தத் தையல்காரன் 'பில்'லைத் தேடும்படி நேரிட்டது. "அந்த சட்டைப் பையிலே வைத்திருந்தேன், எங்கே அந்தப் பழைய சட்டை? அழுக்குத் துணிகளோடு அனுப்பிவிட்டீர்களா? அடாடாடா!" என்று கூச்சலிட்டேன். அந்த 'பில்'லை கண்ணம்மாவே கொணர்ந்து கொடுத்ததும் எனக்குப் புரிபடவில்லை.

"எங்கே ஓடிவிடப்போகிறது உன் சட்டை, பார் இதோ" என்று அம்மா, மேஜைமீது அடுக்கி வைத்திருந்த துணிவரிசையைக் காண்பித்தாள். வெள்ளை வெளேரென்று கண்ணைப் பறித்த அவற்றைப் பார்த்து பிரமித்துவிட்டேன்.

"தன் கையினாலேயே கண்ணம்மா இவ்வளவையும் துவைத்திருக்கிறாள். படித்தும் கர்வமில்லாத பெண்!" என்றாள் அம்மா. தும்பைப் பூவைப்போல பளிச்சிட்ட அந்தச் சட்டையை உடுத்தியதும் புதியதோர் பொலிவை உணரலானேன்; அதே சமயம் அத் துணிகளையெல்லாம் துவைத்தவள் மீது பச்சாத்தாபமும் உண்டாயிற்று. "இவ்வளவு துணிகளையுமா துவைக்கும்படி விட்டீர்கள், சிரமப்பட்டிருப்பாளே, பாவம்!" என்றேன்.

இதைக் கேட்டுவிட்ட கண்ணம்மா சொன்னாள்: "இதில் சிரமம் என்ன அத்தான். ஸன்லைட் சோப் உபயோகித்தால் இருக்காதே! ஏன் தெரியுமா?" சுத்தம் வாய்ந்த சோப்பாதலால் ஸன்லைட், சக்திவாய்ந்த நுரை கொழிக்கிறதென்றும், அடித்துத் துவைக்காமலேயே அந்த நுரை, அழுக்கை அறவே அகற்றிவிடக் கூடியது என்றும் விளக்கினாள் கண்ணம்மா.



"அவள் சொல்வதும் சரிதானே. அடித்துத் துவைத்துக் கிழிக்கவும் வேண்டாம்; அப்புறம் கிழிசல் தைக்கிறேன் என்று ஊசியால் குத்திக்கொள்ளவும் வேண்டாம்!" என்றாள் பாட்டி குத்தலாக.



"முன்னாலே தெரியாமல் போச்சு, கிழியாமல் பளிச்சென்று வெகுகாலம் வைத்துக் கொண்டிருக்கலாம்" என்று சொல்லிக் கொண்டாள் மீனு.

பாட்டிக்கோ பரம சந்தோஷம்; தன் பேத்தியின் கரங்களைப் பற்றியபடி வாழ்த்தினாள்: "என் கண்ணம்மாவின் கைக்கு மருதாணிதான் இடவேண்டும். இவளைக் கொத்திக்கொண்டு போகிறவன் கொடுத்து வைத்தவன்!" அப்போது பார்க்க வேண்டும் கண்ணம்மாவின் கன்னத்தில் ஏறிய சிவப்பை!

ஹிந்துஸ்தான் லீவர் லிமிடெட் தயாரிப்பு S. 262B-50 TM

நாட்டு வைத்தியம்

ஸ்ரீ ஹரி

97. அனுபவசித்தம்......

1. பிரதி தினமும் காலையில் ஒரு டோஸ் ஸுதர்சன சூர்ணம் என்ற மருந்தைக் கொஞ்சம் வெந்நீர் அனுபானத்தில் கொடுப்பது. இது இரண்டு சிட்டிகையளவு முதல் அரை டீஸ்பூன் அளவு வரை வயதுக்குத் தக்கபடி நிச்சயிக்க வேண்டியது. கொஞ்சம் ஏறத்தாழ ஆவதனால் யாதொரு ஆபத்தும் இல்லை.

2. இரவு படுக்கப் போகும்முன்பு ஒரு டோஸ் மேற்சொன்ன அளவில் முன் சொன்ன கோமூத்திர ஹரீதகீ என்ற மருந்தை வெந்நீர் அனுபானத்தில் கொடுப்பது.

இப்படி ஒரு வாரம். பிறகு.

3. மஹாராஸ்னாதி கஷாயம் என்பதின் மருந்துகளை ஒரு கூட்டாகப் பெருந்தூளாக இடித்து வைத்துக் கொண்டு அதில் 1–2 பலத்தை ஒவ்வொரு தினமும் கஷாயம் வைத்துக் குடிக்க உபயோகிக்க வேண்டும். கஷாயத்துக்கு வேண்டிய மருந்தை எடுத்து ஒரு சட்டியிலிட்டு 2 டம்ளர் (சுமார் 16 அவுன்ஸ்) கொதிக்கும் தண்ணீரையும் அதில் ஊற்றி, ஓரிரவு மூடி வைக்கவும். மறுநாள் காலையில் இதை நிழல் தீயிட்டு நிதானமாகப் புகையில்லாத நெருப்பில் காய்ச்சி அரை டம்ளர் (சுமார் 4 அவுன்ஸ்) அளவுக்குக் குறையும் வகையில் காய்ச்சி இறக்கி வைத்துக் கொள்ளவும். பிறகு கஷாயம் சிறிது ஆறியதும், மருந்தை நன்றாய்க் கசக்கிச் சத்தெல்லாம் கஷாயத்தில் இறங்கிய பிறகு, கஷாயத்தை வடிகட்டி ஒரு பகுதி (சுமார் 2 அவுன்ஸ்) யைக் காலையிலும் ஒரு பகுதியை மாலையிலும் குடிக்க வேண்டியது. மறுநாளைக்குத் திரும்பவும் இதே மாதிரிதான் மற்றொரு தரம் கஷாயம் வைத்து உபயோகிக்க வேண்டும். இப்படி ஒரு வாரம்.

4. இப்படி இரண்டு வாரங்களான பிறகு பதினைந்தாம் நாள் அவரவர் வயது சரீர நிலை ஆகியவற்றுக்குத் தக்கபடி ஹிங்கு திரிகுண தைலம் என்ற மருந்தில் அரை அல்லது ஒரு அவுன்ஸ் அளவை எடுத்து 2-4 அவுன்ஸ் பசு மூத்திரத்துடன் கலந்து காலையில் எழுந்தவுடன் குடிக்க வேணும். 3-4 தரம் நன்றாகப் பேதியாகும். (பசு மூத்திரத்தை 3, 4 தரம் வடிகட்டிய பிறகுதான் கொடுப்பது வழக்கம்.)

இவ்விதமாகத்தான் மாறி மாறிச் செய்துகொண்டு போக வேணும்.

இக்காலத்தில் தலைக்குப் பச்சையாக நல்லெண்ணெயை உபயோகிக்கக் கூடாது. ஸுராஸாதி தைலம் அல்லது பீனஸாந்தக தைலம் அல்லது அஸன வில்வாதி தைலம், ஒன்றுமில்லாதபட்சம் ஒரு வில்வ தளத்தையோ, சில தும்பை மலர்களையோ இட்டுக் காய்ச்சிய தைலத்தைத் தினசரி சேவித்துக்கொள்ள உபயோகிக்க வேண்டும். எண்ணெய்க் குளிக்காகவும் இதே தைலத்தைத்தான் தலைக்கு உபயோகிக்க வேண்டும்.

குடிப்பது, குளிப்பது யாவுமே வெந்நீராக இருக்க வேணும். ஆகாராதிகள் யாவும் சூடுள்ளபோது ஏற்றல் அவசியம்.

5. பிண்ட தைலத்தையும்,

6. ஸுரதாரு லேபத்தையும் முன் தெரிவித்த விதத்திலேயே அந்தந்தச் சந்தர்ப்பங்களில் உபயோகிப்பது நல்லதுதான்.

7. சதகுப்பை என்னும் விதையை இடித்துச் சலித்த சூர்ணத்தைக் கொஞ்சம் நல்லெண்ணெயும் எலுமிச்சம் ரஸமும் சேர்த்துக் குழைத்துப் பிண்ட தைலத்தை உபயோகிக்கும் இடத்தில் உபயோகிக்கலாம். முக்கியமாக, கவட்டியில் நெறி கட்டி வீங்கிப் புடைத்து வேதனை தரும் நிலையில் அங்கு இதைப் பற்றிடுவது மிகவும் நல்லது.

குடூச்யாதி கஷாயம்:—சீந்தில் கொடி, செம்மரம், தோல் நீக்கி வெள்ளிக் கம்பி போல் செய்த வேப்பன் ஈர்க்கு, தனியா, செஞ்சந்தனக் கட்டை இவற்றினால் தயாரித்த கஷாயத்தைத் தினம் 2, 3 வேளை 1,2 அவுன்ஸ் விதம்—ஜுரமும் வாந்தியும் உள்ள சமயத்தில் 2-3 தினங்கள் வரையில் கொடுப்பதும்; ஜம்பீராதி பானகம் அல்லது ஜாதி ஜம்பீரக் குழம்பு இவற்றில் ஒன்றில் கடுகளவாக அவ்வப்போது நாவில் தடவிக்கொண்டே இருப்பதும் யானைக்கால் ஜுரம் வந்துள்ள போது, ஜுரத்தைக் குறைக்கும், குடங்குடமாக எடுக்கும் வாந்தி நிற்கும். ஆகவே, அதிகமாக வாந்தி எடுப்பதால் ஏற்படும் களைப்பு, விலாப் பக்கங்களில் கொக்கி போட்டது போன்ற வலி, தொண்டையில் வலி, மயக்கம் ஆகியவை ஏற்படாது.

மேலே தெரிவித்த 1,2,3,4களில் சொன்ன சிகிச்சைகளை ஒன்றிரண்டு மாத காலம் உபயோகித்து, உடம்பில் மருந்து

ஊறி விடுமானால் ஜுரம் முதலானவை வருவது அறவே நின்று விடும். ஆகவே 5,7,8,9,10 களில் சொன்ன மருந்துகளை உபயோகிக்க அவசியமே ஏற்படாது. இப்படி அடிக்கடி ஜுரம் வருவது நின்று விடுமானால் படிப்படியாக அதிகரிக்கும் வீக்கமும் ஏற்படாதல்லவா? தொடர்ந்து மற்றைய மருந்துகளை உபயோகிப்பதாலும் — மேற்பூச்சாக ஸுரதாரு லேபத்தை உபயோகிப்பதாலும் ஏற்கெனவே ஏற்பட்டிருந்த வீக்கமும் குறையும். வருஷக் கணக்கில் இவ்வியாதியில் கஷ்டப்பட்டவருக்குக் கூட ஜுரம் முதலானவைஅறவே நீங்கவும், வீக்கமும் மிகமிகக் கணிசமாகக் குறையவும் நேரிட்டுள்ளது. ஆரம்ப நிலையிலுள்ளவருக்கோ வீக்கமென்பது இருந்த சுவடே தெரியாமல் மாறிப் போயிருக்கிறது.

11. வெள்ளருகு, ஆமணக்கின் கொழுந்து, ஏலரிசி, குங்குமப்பூ இவற்றை முறையே 4,3,2,1 பாகங்களில் எடுத்து அம்மியின் மேலிட்டு வெண்ணெய் போல் அரைத்துக் கொள்ளவும். பிறகு இதை ஏறத்தாழ ஒரு நெல்லிக்காய் அளவில் ஒரு வேளைக்கென முதல் நாள் 3 வேளையும், இரண்டாம் நாள் காலை மாலை என இரண்டு வேளையும் மூன்றும் நாள் காலையில் மட்டும் ஒரு வேளையும் சிறிது வெந்நீர் அனுபானத்தில் சாப்பிடவும். ஒரு வாரம் கழிந்த பிறகு மறுபடியும் மேற்சொன்ன விதமே மூன்று தினங்கள் மருந்தைச் சாப்பிட வேணும். மருந்து சாப்பிடும் நாட்களில் புளியை நீக்கி, பத்திய ஆகாரம் செய்யவும். இதனால் ஒரு சிலர் பலனடைந்ததை அறிவேன்.

அனுபவ சித்தமானவை என்று இது வரையில் எழுதிவந்த மருந்துகளில் ஸுதர்சன சூர்ணம் தவிர மற்றைய மருந்துகளைச் செய்யும் முறையைப் பல்வேறு இடங்களில் ஏற்கெனவே தெரிவித்தாயிற்று. இனி தெரிவிக்க வேண்டியது ஸுதர்சன சூர்ணம் ஒன்றுதான்.

ஸுதர்சன சூர்ணம் :— கடுக்காய்த் தோல், தானிக்காய்த் தோல், நெல்லி முள்ளி, மரமஞ்சள் [வேரின் மேல் தோல்], கண்டங்கத்திரியின் வேர், மஞ்சள், பாப்பார முள்ளிவேர், கிச்சிலிக் கிழங்கு [இதைச் சிலர் பூலாக்கிழங்கு என்று அழைப்பர்], சுக்கு, திப்பிலி, மிளகு, மோடிக் கட்டை [இதைச் சிலர் கண்டத் திப்பிலி என்பர்], பெருங் குரும்பை, சீந்தில் கொடி, பூனைக் காஞ்சி வேர், கடுகரோஹிணி பற்பாடகம், கோரைக்கிழங்கு, புங்கன்வேர்ப்பட்டை, குருவேர் [இதைத் தென்னாட்டில் வெட்டி வேர் என்பர்], வேப்பம்பட்டை, கோஷ்டம், அதிமதுரம், வெப்பாலை அரிசி, ஓமம், வெப்பாலைப்பட்டை, கண்டு பாரங்கி, முருங்கை விதை, செம்மண், வசம்பு, லவங்கப்பட்டை, செம்மரம், வெட்டிவேர் [இதைத் தென்னாட்டில் விளாமிச்சன் என்பர்], சந்தனம், அதிவிடயம், சிற்றுமுட்டி, ஓரிலை, மூவிலை, வாயுவிடங்கம், தகர வேர், சித்திரமூலம், தேவதாரு, சவ்வியம், பேய்ப்புடலின் இலை, ஜீவகம் [அடபதியன் கிழங்கு], ரிஷபகம் [இதற்குப் பதில் நிலப்பனைக் கிழங்கைச் சேர்க்கவும்], காகோளி [இதற்குப் பதில் நிலப்பூசனியைச் சேர்க்கவும்], லவங்கம் [கிராம்பு], மூங்கிலுப்பு, கரும்பின் வேர், லவங்கப்பத்திரி, ஜாதி பத்ரி, தாளீசபத்திரி என்னும் 53 சரக்குகளில் [கிடைத்தவைகளை] ஒவ்வொன்றும் ஒவ்வொரு பலமாக எடுத்து இடித்துச் சலித்துக் கொள்ளவும். இவற்றின் மொத்தமானதற்குச் சம எடையில் நிலவேம்பின் சூர்ணத்தை 54 வது மருந்தாக சேர்த்துக் கலந்து வைத்துக் கொள்ளவும். இதுதான் ஸுதர்சன சூர்ணம்.



"ஏங்க! தேர்தல் சமயத்திலே வீட்டு வசதி, தண்ணீர் வசதி, அந்த வசதி, இந்த வசதி எல்லாம் செய்து தரேன்னு சொல்லி ஓட்டு வாங்கினீங்களே! இது வரை நீங்கள் எங்களுக்கு எந்த வசதியும் செய்து கொடுக்கலீங்களே!"

"சும்மா இருங்க! இன்னும் எனக்கு வேண்டிய வசதியையே நான் செய்துக்கலையே! அதுக்குள்ளே நீங்க வேறே அவசரப் படறீங்களே!"

அடேயப்பா! இதை.........? என்கிறீர்களா? வேண்டாமே! தனித்து நிலவேம்பின் சூர்ணத்தை மாத்திரமும் உபயோகிக்கலாமே! **(தொடரும்)**

தமிழ்ப் புத்தாண்டிலிருந்து பிரபல எழுத்தாளர் எல்லார்வியின்

ஆனந்த பைரவி தொடர் கதை

வழக்கமான பல அம்சங்களுடன் விரிவான சினிமாப் பகுதி, நாடக அம்சம், மதிப்புரை விமரிசனப் பகுதிகள் இவைகளுடன்

மாலா

வாசகர்களை மகிழ்வித்து வெளிவரும்
தனிப் பிரதி 25 நயா பைசா

ஏஜெண்டுகளிடம் விண்ணப்பித்துக் கொள்ளவும்

த. ரா. ரா. எழுதிய **சுடர் ஒளிகள்**

என்றும் பிரமுகர் வரலாற்று சித்திரங்களடங்கிய நூல் விற்பனையாகி வருகிறது. விலை 40 ந.பை.

மாலா :: மதராஸ் - 18



திருச்சி, தஞ்சை மாவட்ட வணிகப் பெருமக்களுக்கு

ஓர் அறிவிப்பு

★

1 - 4 - 1959 முதல் திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் இவ்விரு மாவட்டங்களுக்கு மட்டும் எங்கள் ஆர். எஸ். பதி மருந்து மற்றும் இதர தயாரிப்புகளுக்கு எங்கள் பூரண விநியோகஸ்தர்களாக

மெஸர்ஸ் சுகுமாரி ஏஜென்ஸீஸ்
(சுகுமாரி பிரிண்டர்ஸ் பில்டிங்ஸ்)

213, மேலமாசி வீதி :: மதுரை

அவர்களை நியமித்திருக்கிறோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆர். எஸ். பதி அண்டு கோ.

(ஸ்தாபிதம்: 1909)

214 & 215 :: மேலமாசி வீதி :: மதுரை



த்வார்க்கின்ஸ்

கை ஆர்மோனியப் பெட்டிகள் செய்வதில் கைதேர்ந்தவர்கள். மேற்படி ஆர்மோனியப் பெட்டிகள் தயாரிப்பதில் புதுமையைப் புகுத்தியவர்களில் 'த்வார்க்கின்ஸ்' முன்னணியில் நிற்கிறார்கள்.

விலை ரூ. 40/-லிருந்து ரூ. 550/- வரையில்

விலை விவர ஜாபிதாவுக்கு ஆங்கிலத்தில் எழுதுங்கள்

த்வார்க்கின் & சன் பிரைவேட் லிட்.

8/2, எஸ்பிளனேடு ஈஸ்ட், கல்கத்தா-1



வெள்ளைக் கோபுரம்

ஏ. எஸ். ராகவன்

நத்தை ஊர்ந்தால் கூடச் சத்தம் கேட்கும். அத்தனை அமைதி.

அமுதனார் 'அகளங்கன் மண்டப'த்தை அடைந்து விட்டார். சுற்றுமுற்றும் பீதியுடன் பார்த்து விட்டு முகத்தைத் துடைத்துக் கொண்டார். மேலாடை நனைந்ததே தவிர முகம் உலரவில்லை. இடுப்பிலிருந்த சாவிக் 'கொத்தைத் துழாவிச் சரி பார்த்துக் கொண்டார்.

எதிரே திருமாமணி மண்டபம். ஆயிரங் கால்களும் வேத இரகசியம் பேச, நெய்ப் பந்தங்களின் குளிர் ஒளியில், இலக்கிய சம்வாதங்களும் தத்துவ விசாரணைகளும் நிகழும் இடமாகவா இருந்தது அது! அந்த ஆயிரம் கால்களும் குறுகிப் புதைந்து நிற்கின்றன. அங்கே சுவர்க்கோழிகளுக்குக் கூடத் தொண்டை அடைத்துக் கொண்டு விட்டது.

அமுதனார் பெருமூச்சுவிட்டார். அது மூச்சாக இல்லை. தீ வீச்சாக இருந்தது.

நடந்துவிட்ட நிகழ்ச்சிகளை எண்ணிப் பார்க்க அமுதனாருக்கு விருப்பமில்லை. அவை துயரில் வெடித்தவை. பெரிய கோவிலுக்கு இந்த நிலை வரும் என்று யார் எண்ணினார்கள்? ஒன்றுமே அறியாதவர் போல், அறி துயில் கொள்ளும் அரங்கப் பெருமானின் திருவுள்ளம் தான் என்ன? விதியின் சிரிப்பு அவர் செவியில் விழவில்லையா?

' சுவாமி !''

அமுதனார் திடுக்கிட்டுப் போனார்.

'' பயப்பட வேண்டாம். நான்தான் ஆழ்வான் சிங்கன். நீங்கள் எப்போது வந்தீர்கள்? சாவிக் கொத்துக்களை மறைத்து விட்டீர்கள் அல்லவா ?'' [என்ற பதிலும் கேள்வியும் வந்தன.

'' சிங்கா! அதையெல்லாம் பிறகு பேசுவோம். நீ எப்போது வந்தாய்? எப்படி வந்தாய்? வெளியே நிலவரம் எப்படி? அதைச் சொல்'' என்று படபடத்தார் அமுதனார்.

சிங்கன் விட்ட நெடுமூச்சில் அந்த மண்டபமே அதிர்ந்தது. '' எதைச் சொல்வது, சுவாமி? நம் கையே நம்

கண்ணைக் குத்துகிறது. இதுதான் விசேஷம்!'' என்றான்.

"புதிர் போடாமல் விளங்கும்படி சொல், சிங்கா!''

"எப்படிச் சொல்வேன்? சொல்ல நாக் கூசுகிறது. நம் கோவிலில் சேவகம் செய்கிறார்களே கனகம், வெள்ளை நாச்சியார் என்ற கணிகை சகோதரிகள். அவர்களே தான் இப்போது நமது சத்துருக்கள். படையெடுத்து வந்திருக்கும் வடவர்கள் அல்ல!''

"நீ என்ன சொல்கிறாய்?''

"கேளுங்கள். இளையவள் வெள்ளை நாச்சியார் இருக்கிறாளே, அவள் தளபதி அடில்கானின் மனையாட்டியாகப் போகிறாளாம். ஊரே இந்தச் செய்தியில் வெந்து கொண்டிருக்கிறது.''

"என்னால் நம்ப முடியவில்லை, சிங்கா! ஆனால் எதை நம்புவது, எதை நம்பாமல் இருப்பது என்ற நிலை கடந்து போய்விட்டது. நல்லது. இதற்கு ஒரு வழி காண வேண்டும். இதோ பார், சிங்கா, உயிரைப் பெரிதென்று கருதாமல் எப்படியாவது பெரிய கோவிலின் பொக்கிஷத்தை நாம் காப்பாற்றியாக வேண்டும்.''

"சுவாமி! எனக்கென்னவோ பயமாகத்தான் இருக்கிறது.''

அழுதனார் மெல்லச் சிரித்தார்: "பயப்படாதே! இது நமக்கு ஒரு சோதனை. இதில் வெற்றி பெற நெஞ்சுறுதி வேண்டுமடா! தைரியமாகப் போ. பெருமான் உன்னை ஆசீர்வதிப்பார், போ!''

சிங்கன் பதுங்கிப் பதுங்கி ஓடினான்.

கீழ்க் கோபுரத்தருகே காலோசைகள் கேட்டன. காவலாளிகள் தன்னைக் கண்டுகொள்வார்களோ என்ற பயத்தில் தூணோடு தூணாகச் சாய்ந்தார் அமுதனார். ஒரு கை விளக்கு எட்டிப் பார்த்து விட்டு மறைந்தது. சிறிது நேரம் காத்திருந்து விட்டு அமுதனார் மெல்ல, மெல்லத் திருமாமணி மண்டபத்தை நோக்கி நடக்கலானார்.

ஒவ்வொரு கணமும் என்ன நேருமோ என்கிற பீதி.

மண்டபத்தின் கோடியை அடைந்ததும் சுற்றும்முற்றும் பார்த்தார் அமுதனார். நல்ல வேளை! இதுவரை தப்பி வந்தாயிற்று. இனி என்ன நேருமோ? அவசரம் அவசரமாக ஒரு இடத்தைத் தேர்ந்தெடுத்து அங்கே குழி பறித்தார். சாவிக் கொத்தை அதில் இட்டு மணலால் மூடினார். ஓடிப் போய் நாலைந்து செடிகளைப் பறித்து வந்து மணலை அகற்றிய சுவடு தெரியாதபடி மூடினார். அதிலும் திருப்தியின்றி ஒரு குத்துக் கல்லைப் புரட்டி வந்து மறைத்தார். அந்த இடத்துக்கு அடையாளமாக மதிலில் ஒரு திருநாமக் குறி இட்டார்.

ஆயிற்று. இனிப் பயமில்லை.

இச்சமயம் மண்டபத்துள் யாரோ நடந்து வரும் ஓசை கேட்டது. அமுதனாருக்கு இரத்தமே உறைந்து விட்டது.

"யார் அங்கே?'' குரல் கணீரென்று வந்தது. அமுதனார் மரத்தோடு மரமாக நின்றார்.

"அமுதனார் சுவாமிகளா?''

குரலை இப்போது இனம் கண்டுகொண்டார் அவர். வெள்ளை நாச்சியாரின் குரல்தான் அது.

"ஆமாம்! நீ எங்கே வந்தாய் இந்த வேளையில்?''

"நல்ல கேள்வி கேட்டீர்கள்'' என்று சிரித்தாள் அவள்.

அந்தச் சிரிப்பை அவரால் இரசிக்க முடியவில்லை. "சிரிக்காதே, வெள்ளையம்மா! நன்றாக இல்லை'' என்றார் அமுதனார் பட்டென்று.

"சிரிக்கக் கூடவா ஆட்சேபனை?''

"வெள்ளையம்மா! பெண்ணினத்துக்கு உரித்தான பேதைமை உன் கண்களை மறைத்திருக்கிறது. உன்னைச் சொல்லிப் பயனில்லை. உன் விருப்பம் போல் சிரி. இப்போதைய நிலையில் விதியோடு சேர்ந்து நீயும் சிரிப்பதில் எனக்கு ஆட்சேபமில்லை. சிரி!''

"நான் ஏன் சிரித்தேன் என்பதற்குக் காரணம் தெரிந்தால் நீங்கள் என்னைக் கோபிக்க மாட்டீர்களே?''

"இல்லை. எனக்கு உன் மேல் ஏன் கோபம் வர வேண்டும்?''

"நல்லது. சொல்கிறேன். சாவிக் கொத்தை மறைத்து விட்டால் மட்டும் எல்லாவற்றையும் காப்பாற்றி விட்டதாக ஆகிவிடும் என்று நீங்கள் எண்ணியிருக்கிறீர்களே, அதை நினைத்துத் தான்...'' மீண்டும் அவள் சிரிக்கத் தொடங்கி விட்டாள்.

அமுதனார் பதைபதைத்தார். "அப்படியென்றால், எல்லாவற்றையும் நீ பார்த்துக் கொண்டுதான் இருந்தாயா?'' என்று கேட்டார்.

"உம்!''

"உனக்குப் புண்ணியமுண்டு. வெளியில் சொல்லி விடாதே! அரங்கப் பெருமான் மேல் ஆணை. வெளியே சொல்லி விடாதே.''

"ஏன் இப்படிப் பயப்படுகிறீர்கள்?''

"வெள்ளையம்மா! உயிருக்கே ஆபத்துச் சூழ்ந்திருக்கும் இந்த நேரத்தில் உன் கேள்வி நகைப்பைத்தான் தருகிறது. ஆனால் இதையும் தெரிந்து கொள். உயிரைப் பணயம் வைத்துத்

தான் இந்தத் திருப்பணியில் நான் ஈடுபட்டிருக்கிறேன்.''

''உங்கள் பக்தியின் பெருமை எனக்குத் தெரியாதா? நல்லது. நகைகளை எங்கே பத்திரப்படுத்தி யிருக்கிறீர்கள்?'' என்று மிகவும் சாவதானமாக, ஆனால் அழுத்தமாகக் கேட்டாள் அவள்.

அந்தக் கேள்வியின் உட்கருத்து அமுதனாருக்கு விளங்கி விட்டது. ஆனால் மனத்தைத் திடமாக்கிக் கொண்டு அவர் மீண்டும் பேசினார்.

''வெள்ளையம்மா! யார் கண்ணிலும் படாமல் இதுவரையில் என் பொறுப்பை நிறைவேற்றியதாக எண்ணியிருந்தேன். ஆனால் பெருமாள் உன்னை இங்கே அனுப்பியிருக்கிறார். அவருடைய திருவுள்ளம் அதுவாக இருந்தால் நான் ஏன் உன்னிடம் உண்மையை மறைக்க வேண்டும்? நகைகள் நிலவறையில் பதுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் இந்த இரகசியத்தைத் தெரிந்துகொண்டு உன் சாகசத்தால் எங்களைக் கவிழ்க்க நினைத்தாயோ, உயிரைக் கொடுத்தாவது அவற்றைக் காப்பாற்றியே தீருவேன்'' என்றார் படபடப்புடன்.

அவள் சிரித்தாள். ''சுவாமி! மலை மீது மோதிக்கொள்வதில் அர்த்தமில்லை. பகைவர்களின் படை பலம் எங்கே? உங்கள் மன பலம் எங்கே? இரண்டுக்கும் சரியான ஈடு இல்லை. என் வார்த்தையைக் கேளுங்கள். நிலைமை கைமீறிப் போய் விட்டது. எப்படியாவது தப்பி ஓடி விடுங்கள்.''

இப்போது அமுதனார் சிரித்தார். ''வெள்ளையம்மா! உன் அறியாமைக்கு வருந்துகிறேன். உயிரை வெல்லமென்று கருதி நீ உன்னையே இழந்து நிற்கிற கோலத்தைக் கண்டு வருந்துகிறேன். ஆனால் உன்னிடம் நான் நிறைய எதிர்பார்த்தேன். உன் அழகும், அறிவும் இப்படிப் பாழாக வேண்டாம்'' என்றார்.

''சுவாமி!'' என்று அலறினாள் வெள்ளை நாச்சியார். ''நான் பெண் தான். ஆனால் உங்களைப் போல் எனக்கும் எண்ணற்ற தாபங்கள் இருக்கின்றன. அவற்றை உணராமல் என்மீது கோபிக்கிறீர்களே?''

''உன் தாபம் எனக்குப் புரிகிறது. அர்த்தமற்ற பாவம் அது. தயவுசெய்து என்னை உன்னோடு உபமானப் படுத்திப் பேசாதே! நான் வேறு, நீ வேறு'' என்றார் அமுதனார்.

''உண்மைதான். என்னை மன்னித்து விடுங்கள். நான் நீங்களாக முடியாது. ஆனால் ஒரு பெண் நான். இந்தப் பெண்மையே எனக்குப் பெரிய அரணாக இருக்கிறது. இதை நீங்கள் உணர்ந்து கொண்டால் போதும்.''



டில்லி சப்ரு ஹாலில் ஒன்பது வயதுச் சிறுமி குமாரி ஹேமாசுந்தரராஜன் மார்ச் 15ந் தேதி நடன விருந்தளித்தார். உபஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்கள் நடனமாடிய சிறுமியை மிகுந்த அன்புடன் ஆசீர்வதிக்கிறார்.

''உணர்கிறேன், வெள்ளையம்மா! அந்த அரண் உன் உயிரைக் காக்கும். உள்ளத்தைக் காக்காது. இவ்வளவு தான் கூற முடியும் என்னால். நான் போய் வருகிறேன்.''

அமுதனார் திரும்பினார். மதிலின் அருகில் வளர்ந்திருந்த தென்னை மரத்தைப் பற்றித் தப்பிச் சென்று விடலாம் என்பது அவர் வகுத்திருந்த திட்டம்.

''நில்லுங்கள்! என்னோடு வாருங்கள்'' என்றாள் வெள்ளையம்மாள்.

''உனக்குப் பைத்தியமா? கோபுர வாயிலில் பகைவர்கள் நிற்கிறார்கள். என்னை விடுவார்களா?'' என்று கூறி விட்டு அமுதனார் வேகமாக மரத்தின் மேல் ஏறத் தொடங்கினார். அவசரத்தில் படபடத்த அவரது குரல் விகாரமாக முழங்கியது. அது கீழ்க் கோபுர வாயிலிலிருந்த காவலர்களின் செவிகளிலும் விழுந்து விட்டது. அடுத்த கணம் 'திமு, திமு' வென்று ஒரு கூட்டம் மண்டபத்துக்குள் புகுந்து ஓடி வந்தது.

அமுதனார் பருத்த சரீரம் படைத்தவர். மன உறுதிக்கு ஏற்ற உடல் உறுதி அவரிடம் இல்லை. மேலும் தமது வாழ்நாளில் தென்னை மரத்தில் ஏறியும் அறி



"என்ன ஸார் இது? நீங்க எழுதி யிருக்கிற கதை எத்தனை தடவை படிச்சாலும் ஒண்ணுமே புரியலையே! இப்படியா எழுதறது?"

"கதை எழுதினால் திருப்பித் திருப் பிப் படிக்கிற மாதிரி இருக்கணும்னு நீங்களே சொல்லியிருக்கீங்களே சார்!"

யாதவர். எனவே பாதி மரத்திலிருந்து வழுக்கி உருண்டு கீழே விழுந்து விட் டார். ஓடி வந்த காவலர்கள் அவரைப் பற்றி நிறுத்தினார்கள். உடலெல்லாம் ஆட வியர்வைக் குளமாய் அவர் பரிதாபமாக நின்றார்.

"என்ன கூச்சல் அங்கே? வெள்ளை யம்மா! நீ இங்கேயா இருக்கிறாய்?" என்று கேட்டபடி வந்தான் தளபதி.

அமுதனாருக்குத் தமது அந்திம காலம் நெருங்கி விட்டது என்பது விளங்கிவிட் டது. எனினும், அவருக்கு இப்படி அகப் பட்டுக் கொண்டது வருத்தமாகவே இருந்தது. வெள்ளையம்மாள் வராதிருந் தால் அவர் தப்பி ஓடி யிருப்பார். அவ ளுடைய அர்த்தமற்ற சிரிப்பும், பேச்சுமே அவரைக் காட்டிக் கொடுத்து விட்டன. அவளை மனமாரச் சபித்தார் அவர்.

"நீங்கள் காவல் காக்கிற இலட்சணம் இதுதானா? இந்த மனிதர் எப்படி உள்ளே நுழைந்தார்? நான் வராவிட் டால் ஏதாவது விபரீதமாக நடந்திருக் குமே!" என்றாள் வெள்ளையம்மாள்.

வீரர்கள் நடுங்கிக் குறுகினார்கள். தளபதி ஆத்திரம் அடைந்தவனாய் அவர் களைச் சபித்தான். அவன் கையில் சுழன்ற நீண்ட சவுக்கைக் கண்டதுமே, அமுதனார் கண்ணை மூடிக் கொண்டார். உயிர் பெரிதில்லை. ஆனால் சித்திர வதையை அவரால் தாங்கவே முடியாது. இன்னும் என்னென்ன நடக்குமோ?

"யார் இவர்?" என்று சீறினான் தளபதி.

இதற்குத் தளபதியோடு வந்திருந்த கோபால நம்பி பதில் கொடுத்தான். அவன் வந்திருப்பதை அப்போது தான் அமுதனார் கவனித்தார். அந்தப் புல்லுரு வியை மீண்டுமொருமுறை பார்க்க அவர் விரும்பவில்லை. தலையைத் திருப் பிக் கொண்டார்.

"தளபதியாரே! இவர்தான் பெரிய கோவிலின் முக்கியஸ்தர், அமுதனார் சுவாமிகள். நகைகளும் கொத்துச் சாவி களும் இவர் பொறுப்பில் உள்ளவை" என்று இரகசியத்தைச் சொல்லி வைத் தான் கோபால நம்பி.

இதைக் கேட்டதும் தளபதி துள்ளிக் குதித்து விட்டான். "அப்படியா? பழம் நழுவிப் பாலில் விழுந்து விட்டது. நமது காவலர்கள் அபார சாமர்த்தியசாலிகள். எவ்வளவு இலகுவாக இந்த ஆளை உள்ளே நுழைய விட்டுப் பிடித்து அடைத்திருக்கிறார்கள், பார்த்தாயா?" என்று சொல்லி மகிழ்ந்தான் அவன்.

பிறகு கோபால நம்பியின் முதுகைத் தட்டிக் கொடுத்தபடியே, "உனக்கு ஒரு தங்கப் பதக்கம் பரிசாகத் தருகிறேன், நீயே உனக்கு விருப்பமானதை எடுத்துக் கொள்" என்றான். காவலர்கள் மூச்சு விட்டார்கள் நிம்மதியாக. "இவரைக் கொண்டு போய்க் காவலில் வையுங்கள். நான் பின்னால் வந்து விசாரிக்கிறேன்."

அமுதனாரின் கண்கள் இருண்டன. தன்னைச் சூழ்ந்த அபாயத்தை அவர் நன்கு உணர்ந்தார். நகைகளின் இருப் பிடத்தைச் சொல்லாதவரை இவர்கள் விட மாட்டார்கள். மரண வேதனையை அனுபவித்தே தீர வேண்டும். இது விதி. ஆனால் விதியா இது? இல்லை, இல்லை. வெள்ளையம்மாள் உருவத்தில் வந்த சதி.

'பளிச்'சென்று ஒரு யோசனை உதயமா யிற்று. இந்தச் சதியை முறியடிக்க அது ஒன்றே வழி. இந்த வெள்ளையம்மாளை நம்பி எந்த இரகசியத்தைச் சொன் னாரோ, அதை இனி அவர் காப்பாற்றி னாலும் அம்பலமாவதென்னவோ உறுதி. அதற்காக அவர் ஏன் வீண் வேதனை அனுபவிக்க வேண்டும்?

தளபதியை நிமிர்ந்து பார்த்தார் அவர். "நகைகள் இருக்குமிடத்தை வெள்ளையம்மாளிடம் கூறியிருக்கிறேன். அவளையே நீங்கள் கேட்டுக் கொள்ள லாம்" என்றார்.

வெள்ளையம்மாள் திடுக்கிட்டாள். இதை அவள் எதிர்பார்க்கவில்லை. அமுத னாரைப் பார்த்தாள். பிறகு மெல்லச் சிரித்தபடியே, "ஆமாம். எனக்குத் தெரியும். அவரை விட்டு விடுங்கள்" என்று கூறினாள்.

தளபதிக்கு இன்னும் ஆனந்தம். "ஏதேது? எல்லாம் மிகவும் எளிதாக முடிந்து விட்டதே! வெள்ளையம்மா! நீ புத்திசாலி. இந்தக் கிழவரின் உடலைப் பதம் பார்த்து அந்த இரகசியத்தை வாங்கும் சிரமத்தைக் கூட எனக்கு நீ வைக்கவில்லை. வா, நாம் போகலாம். நாளைக்கு அந்த நகைகள் உன் காலடியில் வந்து விழும். நீ மறுக்காமல் ஏற்றுக் கொள்ள வேண்டும். கோபால நம்பி, பயப்படாதே. உனக்குப் பதக்கம் நிச்சயம் உண்டு" என்று கேலியும் பெருமையுமாக மொழிந்தான் தளபதி.

அமுதனாரை வெளியே கொண்டுவந்து விரட்டினார்கள் காவலர்கள். வீதிவழியே நடந்த அமுதனார் பாழாகிப் போன மண்டபங்களைப் பார்த்தபடியே சென்றார். வேதனையோடு நடந்தவர் அமைதியில் ஆழ்ந்திருந்த வீதி முனையில் நின்றார். மனத்தில் மீண்டும் நம்பிக்கை துளிர் விட்டது. எப்படியாவது நகைகளையும், சாவிக்கொத்தையும் அப்புறப்படுத்தி விட்டால், வெள்ளையம்மாளை நன்றாகப் பழி வாங்கியதாகும்.

மதிலின் மேல் ஏறி யாரும் கண்டு கொள்ளாவண்ணம் ஊர்ந்து கிழக்கோபுரத்துக்கு எதிரே வந்தடைந்தார் அமுதனார். அங்கிருந்து காவலாளிகளை நன்றாகக் கண்காணிக்கலாம். அவர்கள் சிறிது உறங்கினாலும் தப்பித்து உள்ளே வேகமாக ஓடி விடலாம்.

கோபுரத்தின் உச்சியிலிருந்து பாட்டும் சிரிப்பும் கேட்டன. வெள்ளை நாச்சியாரின் குரலில் இனிமை இருந்தது. ஆனால் அது நாராசமாகத்தான் அமுதனாருக்குத் தோன்றியது. 'இந்தக் கோபுரம் இவர்களைத் தாங்கிக் கொண்டு எப்படி நிற்கிறது? வெள்ளைநாச்சியார் உயிரின் மேல் இவ்வளவு ஆசை வைத்துப் பரம்பரைச் சொத்தை இழக்க முன் வந்திருக்கிறாளே! உயிரா பெரிது? ஆழ்வாராதிகளும் வேதாந்த தேசிகரும் மிதித்த மண்ணல்லவா இது? இதன் பெருமையைப் பாழாக்க முன்வந்தாளே ஒரு பேதைப் பெண்!'

அமுதனார் கோபுரத்தையே பார்த்தார். வெள்ளைநாச்சியாரும் தளபதியும் இப்போது உச்சியில் நின்றார்கள். கீழே பார்த்தால் குலை நடுங்கும். இந்த இரவில் எந்த சாம்ராஜ்யத்தைப் பிடிக்க இத்தனை நாடகம்? கேளிக்கையும் பாட்டுமே சாசுவதமென்று எண்ணி விட்டார்களா?

வடக்கே காவேரி அன்னை நடக்கிறாள். தெற்கே கொள்ளிட மங்கை நடக்கிறாள். இடையே அதர்மம் நடக்கிறது. நடக்கிறதா? உச்சிமீது ஏறிச் சிரிக்கிறது!

சுழலும் பம்பரம் போல் அந்த இரு உருவங்களும் அமுதனார் கண் முன் நின்றன. ஆனந்தத்தில் தலைகால் தெரியவில்லையா, வெள்ளை நாச்சியாருக்கு?

பார்த்துக் கொண்டேயிருந்த அமுதனார் திடுக்கிட்டு எழுந்தார். ஒரு கணத்தில் அது நடந்துவிட்டது. தளபதி சற்று உல்லாசமாகக் கீழே குனிந்த நேரத்தில் வெள்ளையம்மாள் அவனைச் சரேலென்று மேலிருந்து உருட்டி விட்டாள்!

கீழே, கீழே, கீழே உருண்டு வந்து விழுந்தான் தளபதி. பெருத்த அலறலும் குழப்பமும் தொடர்ந்தன. கிழக் கோபுர வாயிலில் குருதி வெள்ளம்.

வெள்ளை நாச்சியார் சிரிக்கிறாள். கோபுரத்தின் மீதிருந்து சிரிக்கிறாள். வெற்றிச் சிரிப்பு, விதியை வென்ற சிரிப்பு! கேவலம் பெண்ணா அவள்! அந்தப் பெண்மையையே அரணாக்கிக் கொண்டு போரிட்ட வீராங்கனை அல்லவா அவள்!

மதிலிலிருந்து கீழே குதிக்கப் பயந்து அமுதனார் மெல்ல இறங்கினார். அதே சமயம் வெள்ளை நாச்சியாரைக் கைப்பற்றக் காவலாளர்கள் கோபுரத்தின் மீது ஏறினார்கள். ஆனால் அவர்கள் வரும் வரையில் அவள் காத்திருக்கவில்லை. வெண்புறாவைப் போல் அவள் தாவி விட்டாள். ஆம்! அவளும் கோபுரத்திலிருந்து கீழே குதித்து விட்டாள்.

அமுதனாருக்கு மூச்சே நின்று விட்டது. அவளுடைய சாகசங்களும், இறுதியில் உயிரை அலட்சியமாக வீசியெறிந்த கோலமும் அவரைச் சிலையாக்கி விட்டன. ஊர் விழித்துக்கொண்டு விட்டது. தக்க சமயத்தை எதிர்நோக்கிக் காத்திருந்த கிழைச் சீமைக் கள்ளர் படை சூறாவளியைப் போல் உட்புகுந்தது.

"சுவாமி இங்கே நின்றால் ஆபத்து... வாருங்கள்...நாம் பிழைத்து விட்டோம். வெள்ளையம்மாள் நம்மைக் காப்பாற்றி விட்டாள்!" என்று சிங்கன் அவரை உலுக்கினான்.

அமுதனார் கண்களைத் துடைத்துக் கொண்டார். "சிங்கா! நாம் பிழைக்கவில்லையடா. பிழைத்தும் செத்து விட்டோம். வெள்ளையம்மாள் செத்தும் வாழ்கிறாள். தர்மம் பிழைத்தது. இந்த அரங்கத்தின் மாணிக்கம் அவள்...உனக்கும் எனக்கும் உயிரின்மேல் கண்...அவளுக்கோ உயிர் ஒரு பொருட்டே இல்லை."

"அதை எல்லாம் பின்னால் பேசலாம், இப்போது நேரமில்லை. கிளம்புங்கள்."

தெருவில் புழுதி படர்ந்தது. இரவு பகலாயிற்று. போர் ஆரவாரங்கள் கிளர்ந்தன. முரசு கொட்டியது. பகைவர்கள் சிதறி ஓடவும் கீழ்க் கோபுரத்தில் வெற்றிச் சின்னம் பறந்தது.

கம்பீரமாக நிற்கிறது கீழ்க்கோபுரம். இப்போது 'வெள்ளைக் கோபுரம்' என்ற சிறப்புப் பெயரை அது பெற்றுவிட்டது.

சோக்ரதர் சம்வாதங்கள்

க. சந்தானம்

14. கொடியவர் ஆட்சி

(சோக்ரதர், களக்கோன், ஆதிமந்தகன் முதலானோர்)

சோக்: பொது மக்கள் ஆட்சியில், மீத மிஞ்சிய சுதந்திரத்தால் ஜனங்கள் மதி மயங்குகின்றனர். அதிகாரிகளுக்குக் கீழ்ப் படிந்து நடப்போரைப் பேடிகளென்றும், அடிமைகளென்றும் அவமதிக்கின்றனர். அளவுகடந்த அமிர்தமும் விஷமாகு மன்றோ?

கள: நிச்சயம்.

சோக்: எங்கும் கட்டுப்பாடு குலைந்து விடுகின்றது. தந்தை தன் மகனுக்கு அஞ்சுவான். மகனுக்குத் தந்தையிடம் அச்சமும், மரியாதையுமிருக்க மாட்டா.

கள: அந்நிலை ஏற்படும்.

சோக்: ஆசிரியன் மாணவர்களிடம் பயப்பட்டு அவர்களை முகஸ்துதி செய் வான். சிறியோர் அதிகாரம் செய்வதும், பெரியோர் பணிந்து போவதும் வழக்க மாகிவிடும்.

கள: உண்மை.

சோக்: அங்கு நாம் முன்கூறிய இருவிதச் சோம்பேறிக் கூட்டங்களும் அதிகரிக்கின் றன. அதாவது பிறரை மிரட்டி வாழும் சோம்பேறிகள், அந்தத் துஷ்டர்களை அண்டி வாழும் சோம்பேறிகள்.

கள: பின்னர்?

சோக்: உடலில் பித்தம் அதிகமாகும் பொழுது வியாதி தோன்றுவது போல், இவ்விரு கூட்டங்களும் இராஜ்யத்தில் கல வரங்களை உண்டாக்குகின்றன. நாட்டைச் சரியாகப் பரிபாலிக்க விரும்புவோர் இவர் களைத் தலைதூக்க முடியாமல் அடக்க வேண்டும்.

கள: அது அவசியம்.

சோக்: பொது மக்கள் ஆட்சியில் இக் கூட்டங்கள் பெருகும். பணக்காரர்கள் அவைகளுக்கு ஓயாமல் வாய்க்கரிசி போட் டுக் கொண்டிருக்க வேண்டும்.

கள: ஆம்.

சோக்: தேக உழைப்பால் அன்றாடம் ஜீவிப்போர் பெரும்பாலோர். பொதுக் கூட்டம் கூடும்பொழுது இவர்களே சக்தி வாய்ந்தவர்களாக இருப்பர்.

கள: ஆனால், தங்களுக்கு ஏதாகிலும் லாபம் கிடைத்தாலொழிய கூட்டத்துக்கு வரமாட்டார்களே.

சோக்: தலைவர்கள் பணக்காரர்களைக் கொள்ளையடித்துப் பொதுமக்களுக்கு ஒரு பங்கு கொடுக்க வேண்டி வரும். கொள்ளையடிக்கப்பட்டவர்கள் ஆத்திரப் பட்டுத் தம்மை எவ்விதத்திலாவது பாது காக்க முயலுவார்கள்.

கள: அது சகஜம்.

சோக்: பிறகு ஒருவர் மீது மற்றொருவர் குற்றச்சாட்டுக்களும், விசாரணைகளும், தீர்ப்புக்களும் அவசியமாகின்றன.

கள: தடுக்க முடியாது.

சோக்: அச்சமயம், ஒருவனைப் பிரதம தலைவனாக ஏற்படுத்தி அவனுக்குப் பொது மக்கள் ஆதரவளிக்கின்றனர். அவன் ஏதேச்சாதிகாரி ஆகி விடுகிறான். மனித மாமிசத்தை ருசி கண்டவன் ஓநாய் ஆகி விடுவான் என்ற பழமொழி பலித்து விடு கிறது. பொது மக்கள் ஆதரவைக் கொண்டு தனக்குச் சமமானவர்கள் மீதும் உறவினர்கள் மீதும் குற்றங்கள் சாட்டி அவர்களைக் கொன்றும், துன்புறுத்தியும் அக்கிரமம் செய்கிறான். பொது மக்க ளுக்கு நிலங்களைப் பகிர்ந்து கொடுப்பதாக வும், கடன்களை ரத்து செய்வதாகவும் ஆசை காட்டுகிறான். அதன் பிறகு, அவன் ஓயாமல் கொடுமைச் செயல் புரிந்து தன்னைக் காக்க வேண்டும், இல்லையேல் எதிரிகள் அவனைக் கொன்றுவிடுவார்கள்.

கள: இந்தச் சங்கடத்தில் மாட்டிக் கொள்ளுவான்.

சோக்: தன் பாதுகாப்புக்காக ஓர் காவல் படை கேட்கிறான். மக்கள் சம் மதிக்கின்றனர். தனக்கு எதிராக இருப்ப வர்களை ஒழித்த பின், ஆட்சியின் எல்லா அதிகாரங்களையும் தன் வசப்படுத்திக் கொள்ளுகிறான். அப்பொழுது பொது மக்களையும் மதிக்க மாட்டான். முழு சர்வாதிகாரியாகிறான். அவன் கீழ் ராஜ் யம் அடையும் சுகத்தை வர்ணிக்க வேண்டுமா?

கள: நிச்சயம்.

சோக்: ஆரம்பத்தில் அனைவருக்கும் புன்சிரிப்புடன் வரவேற்புக் கூறித் தன்னை ஏதேச்சாதிகாரி என்று கூறுவதைத் திடமாக மறுக்கிறான். மக்கள் நலத்தையே நாடுவதாக வாக்குறுதி செய்கிறான். நிலங் களைப் பிரித்துக் கொடுக்கிறான். தன் கட்சி

யைச் சேர்த்தவர்களுக்கு வெகுமதிகள் அளிக்கிறான்.

கள: அப்படிச் செய்தாக வேண்டும்.

சோக்: தன் எதிரிகளை யெல்லாம் ஒழித்த பின், ஓயாமல் பக்கத்து ராஜ்யங்களோடு போர் புரிவதற்குத் தலைப்படுகிறான். இல்லாவிட்டால் மக்கள், தலைவன் எதற்கு என்று எண்ணுவார்கள் அன்றோ?

கள: அதிலிருந்து தப்ப முடியாது.

சோக்: அதனால் மக்களுக்கு அதிருப்தி ஏற்படும். அவனை அதிகாரத்தில் ஸ்தாபிப்பதற்கு உதவி செய்தவர்களில் தைரியமுள்ளவர்கள் அவனுக்கு எதிராகப் பேச முன் வருவார்கள்.

கள: செய்யக் கூடும்.

சோக்: அவர்களையும் ஒழித்துக்கட்ட வேண்டும். நண்பனோ, எதிரியோ மக்கள் மதிக்கக் கூடிய எவரையும் இராஜ்யத்தில் அவனால் சகிக்க முடியாது.

கள: சந்தேகமில்லாமல்.

சோக்: உயர் குணம், திறம், தனம் முதலிய சம்பத்துள்ளவர்களைக் கழுகுக் கண்ணுடன் கவனித்து அவர்களை எதிரிகளாகக்கருதி இராஜ்யத்தில் அவ்விதமான எவருமில்லாதபடி செய்வதே தனது முக்கிய அலுவலாகக் கொண்டிருப்பான்.

கள: இராஜ்யத்துக்கு என்ன தூய சேவை!

சோக்: ஆம். வைத்தியத்துக்கு நேர் மாறான சேவை. தீமையை நீக்குவது வைத்தியம். நன்மையை நீக்குவது கொடியவர் ஆட்சி. இப்பொழுது இந்த ஆட்சிக்குச் சமமான மனிதனைப் பற்றி ஆராய வேண்டுமல்லவா?

கள: ஆம். அதொன்று பாக்கியிருக்கிறது.

சோக்: முதலில் மனிதனுக்கு இயற்கையாகவுள்ள ஆசைகளின் சங்கையையும், தன்மைகளையும் கவனிக்க வேண்டும். இல்லாவிட்டால் நமது ஆராய்ச்சி பலிக்காது.

கள: அவை என்ன?

சோக்: எல்லா மனிதரிடத்தும், பொல்லாத பல ஆசைகள் இருக்கின்றன. அவைகளைக் கனவுகளில் காணலாம்.

கள: ஆம்.

சோக்: மற்ற ஆசைகளைக் காட்டிலும் காமமே மிகக் கொடியதன்றோ?

கள: நிச்சயமாக.

சோக்: குடியும் கொடியதல்லவா?

கள: சந்தேகமில்லை.

சோக்: அகம்பாவம் மேலிட்டுத்தான் மனிதரையும், தேவரையும் ஆளவல்லவனென்று எண்ணும் மதிமயக்கமும் அப்படித்தானே?

கள: அப்படித்தான்.

சோக்: ஆதலால் தனது சுபாவத்தாலோ, பழக்கத்தாலோ காமியாகவும், குடிகாரனாகவும், மதிமயக்கமுள்ளவனாகவும் இருக்கும் மனிதனே கொடியவனாகிறான்.

கள: மிகவும் உண்மை.

சோக்: அவன் வாழ்வது எங்ஙனம்? ஓயாமல் உண்டும், களித்தும், இன்பம் நுகர்ந்தும் காலங் கழிப்பான் அன்றோ?

கள: நிச்சயமாக.

சோக்: இவைகளில் அவன் செல்வம் விரைவில் தீர்ந்துவிடும். ஆசைகள் கூச்சலிடும். யாரிடம் பணமிருக்கிறது, அதைக் கொள்ளையடிக்கலாமா, அல்லது ஏமாற்றி அபகரிக்கலாமா என்று திரிவானல்லவா?

கள: அவசியம்.

சோக்: தனது தாய்தந்தையர் என்று மதிக்காது அவர்களையும் கொள்ளையடிப்பான். எதிர்த்தால், கொலைக்குக் கூட அஞ்சான். ஒருநாள் நேசமுள்ள வேசிக்காக, ஆயுள் முழுதும் அன்பு கொண்டிருந்த அன்னையையும், வயதான தந்தையையும்அவமதிப்பான். அவனுக்குநண்பன் இருக்க மாட்டான். அவன் பிறருக்குக் கொடிய எஜமான், அல்லது பணிவான அடிமையாக இருப்பான். கொடுமைக்கும், உண்மையான சுதந்திரத்துக்கும் சிநேகத்துக்கும் முற்றிலும் முரண்பாடு. இவ்வித வாழ்வைச் சுகவாழ்வு என்று கூற முடியுமா?

கள: மிகவும் துக்கமயமான வாழ்க்கை என்றுதான் சொல்ல வேண்டும்.

15. ஆத்மாவுக்கு அழிவில்லை

(சோக்ரதர், களக்கோன், ஆதிமந்தோசன் முதலானோர்)

சோக்: தர்மத்தின் உத்தம பலனை நான் இதுகாறும் கூறவில்லையே.

கள: ஏதோ மகத்தான பலனைப் பற்றிச் சொல்லப் போகிறீர் போலும்.

சோக்: அற்பகாலத்தில் எதுவும் மகத்தானதாக இருக்க முடியாதன்றோ? பிறவி முதல் சாவு வரையில் மனித வாழ்க்கை அளவில்லாக் காலத்தில் ஓர் கணமல்லவா?

கள: ஆம்.

சோக்: சாவில்லாத ஓர் பொருள் இந்த அற்ப ஆயுளைப் பற்றி அதிகக் கவலைப்பட வேண்டுமா?

கள: நீங்கள் கூறுவது சரியே; ஆனால், எதைப்பற்றிச் சொல்கிறீர்கள்?

சோக்: நம் ஆத்மா அழியாத நித்தியப் பொருள் என்று அறியாயோ?

கள: அறியேன். அதெப்படி என்று கூறுவீர்.

சோக்: எதையும் கெடுத்து நாசமாக்குவது தீமையன்றோ? அதற்கு மாறாகக் காத்துத் தூய்மைப்படுத்துவது நன்மையல்லவா?

கள: ஆம்.

சோக்: ஒவ்வொன்றுக்கும் ஓர் தீமையும், நன்மையும் இருக்கின்றன அல்லவா? கண்ணுக்குத் தனி நோயிருக்கிறது. தேகமெல்லாம் கெடுக்கும் வியாதியுள்ளது. மரத்தை மடிக்கச் செய்வது, செம்பும் பித்தளையும் துருப்பிடிப்பது. இதுபோல் ஒவ்வொன்றுக்கும் இயல்பான தீமை உண்டு.

கள: நான் ஒப்புக் கொள்ளுகிறேன்.

சோக் : ஆதலால் எப்பொருளும் அதற்கு இயல்பான தீமையால் கெட்டு அழிகிறது. அவ்விதம் தீமையால் நசிக்காத ஓர் பொருள் இருக்குமாயின் அது அழியாப் பொருள் அன்றோ ?

களா : ஆம்.

சோக் : ஆத்மாவுக்குத் தீமைகள் உண்டோ ?

களா : உண்டு. நாம் முன் கூறிய அநீதம், அடக்கமின்மை, கோழைத்தனம், அறியாமை முதலியவை.

சோக் : ஆனால் இவை ஆத்மாவை அழிக்க வல்லமை பெற்றிருக்கின்றனவா ? தேகத்தில் உண்டாகும் வியாதி அதனைக் கெடுத்து முடிவில் மரணத்துக்குள்ளாக்குகிறது. அதைப்போல் அநீதமும், இதர அதர்மங்களும் ஆத்மாவை அழித்துத் தேகத்திலிருந்து பிரித்து போகும்படி செய்கின்றனவா ?

களா : இல்லை.

சோக் : தனது சொந்தத் தீமைகள் ஒரு பொருளை அழிக்க முடியாதாயின், இதர தீமைகள் அப்படிச் செய்யக் கூடுமா ? தேகத்தில் உண்டாகும் வியாதியாலும், உடலைத் துண்டு துண்டாக வெட்டினாலும் ஆத்மா நசித்து வருவதாக ஒப்புக் கொள்ள முடியாது. தேகத்தின் கஷ்டங்கள் ஆத்மாவை அநீதமாகவும், அக்கிரமமாகவும் சேருகின்றனவென்று நிருபித்தாலொழிய அவற்றால் ஆத்மாவுக்கு எவ்விதத் தீமையும் ஏற்படுவதாகக் கருத முடியாது.

களா : அநீதம் மனிதனைக் கொல்லக் கூடுமானால் எவ்வளவோ நலமாயிருக்கும். அப்பொழுது அதற்குச் சீக்கிரம் முடிவு ஏற்படும். ஆனால் அது பிறருக்குத் துன்பம் விளைவிக்கின்றதே தவிர, துஷ்டனுக்கு அதிக சக்தியளிக்கிறது.

சோக் : ஆதலால் ஆத்மாவைத் தனது தீமைகளோ, பிற தீமைகளோ அழிக்க முடியாது. ஆதலால் அது நித்தியமாக இருக்க வேண்டும்.

களா : ஆம்.

சோக் : அப்படியே வைத்துக்கொள்ளுவோம். உலகில் ஆத்மாக்களின் சக்தியைக் கூட்டவோ குறைக்கவோ சாத்தியப்படாதல்லவா ? அழியாத பொருளை உண்டாக்கவும் முடியாது. அழிக்கவும் சாத்தியப்படாதன்றோ ?

களா : உண்மை.

சோக் : இந்த அழியாத்தன்மை பல அம்சங்கள் சேர்ந்த கூட்டுப் பொருளின் குணமாகாதல்லவா ?

களா : ஆகாது.

சோக் : ஆதலால் ஆத்மா அழியாப் பொருள் என்றே நம்ப வேண்டும். அதன் உண்மை சொருபத்தை அறிய வேண்டுமானால், உடலோடு சேர்ந்து மாக பட்டிருக்கும் தன்மையைக் கொண்டு உணரக் கூடாது. அதன் பரிசுத்த நிலையைப் பகுத்தறிவைக் கொண்டு அறிய வேண்டும். அப்பொழுது அதன் ஒப்பற்ற அழகைக் காணலாம். தர்மம், அதர்மம், நீதி, அநீதி முதலியவற்றின் இயல்பை உணரலாம். நம் புராணங்களில் வர்ணிக்கப்படும் கடல் தேவதைக்கு ஆத்மாவை ஒப்பிடலாம். அலைகள் ஓயாமல் மோதுவதால் அத் தெய்வத்தின் உடல் முற்றிலும் விகாரமடைந்து, சங்கு நத்தை முதலியவற்றால் மூடிக் கிடக்கும். அப்படியே நமது ஆத்மாவும் கணக்கற்ற தீமைகளால் மூடப்பட்டிருக்கிறது. நமது பார்வை அவைகளைக் கடந்து செல்ல வேண்டும்.

களா : எங்கு செல்ல வேண்டும் ?

சோக் : விவேகத்தை நாடிச் செல்ல வேண்டும். அப்பொழுது அதன் தெய்விக சொருபம் துலங்கும். அதொன்றையே பின்பற்றி இதர பாகங்களைத் தவிர்த்த ஆத்மாவை நாம் காணக் கூடுமாகில் அதன் சத்திய சொருபம் விளங்கும்.

16. தர்மமும், கர்மபலனும்

[சோக்ரதர், களாக்கோன், ஆதிமந்தேசன் முதலியோர்]

சோக் : மனிதனின் உண்மை நிலை கடவுளுக்குத் தெரியுமல்லவா? அவரை ஏமாற்ற முடியுமா ?

களா : முடியாது.

சோக் : மனிதன் நல்லவனாக இருந்தால் அவனுக்குத் தெய்வம் நன்மையே புரியுமன்றோ! அதற்குமாறாக அவனுக்குக் கஷ்டம் விளைந்தால், அது முன் ஜன்ம பாபத்தின் பலனாக இருக்குமல்லவா?

அருள் வாக்கு

ஒரு வழியில் பார்த்தால் மிருகங்களுக்குக் கொடுத்திருக்கும் சௌகரியங்களைசுவாமி நமக்குக் கொடுக்கவில்லை என்று தோன்றும். நம்மை யாராவது அடித்தால் திருப்பி அடிக்க ஆயுதம் கிடையாது. மாட்டுக்குக் கொம்பு கொடுத்திருக்கிறார். புலிக்கு நகம் கொடுத்திருக்கிறார். கூர்மையான பற்களால் நம்மைக் கிழித்துவிடும். குளிரிலிருந்து காப்பாற்றிக் கொள்ள மிருகங்களின் உடலில் இயற்கைப் போர்வைகள் அமைத்திருக்கிறார். குதிரைக்கு ஓடுவதற்கு பலம் கொடுத்திருக்கிறார். மனிதன் எத்தனை ஓடினாலும் மிருகங்களின் வேகத்துக்கு இணையாக முடியாது. ஆனால் மனிதனுக்கு இவைகளைக் காட்டிலும் உயர்ந்த சாதனமான புத்தியைக் கொடுத்து அதன் மூலம் உலகமெல்லாம் வாழச் சக்தியைக் கொடுத்திருக்கிறார். குளிரிலிருந்து காப்பாற்றிக் கொள்ளப் பிராணிகளின் கம்பளிகளை உபயோகப் படுத்துகிறான்.


—ஸ்ரீ சங்கராச்சாரியார், காஞ்சிகாமகோடி பீடம்

டக்-ஆப்-வாரில் ஒத்துழைப்பு மிக அவசியம்

மூச்சைப் பிடித்துக்கொண்டு பலமாக இழுத்து எல்லோரும் ஒன்று சேர்ந்து ஒத்துழைத்தால்தான் எதிராளிகளை இறுதியில் தோல்வியின் குறிக்காக வகுக்கப்பட்ட கோட்டிற்கு மேலே கொண்டுவர முடியும்! ஏகமனதான ஒத்துழைப்பு அவசியப்பட்டதும் பலம், சக்தி இவைகளால் நடத்தப்படும் ஓர் விளையாட்டு இது. பலமும், சக்தியும் அடைய ஒவ்வொரு விளையாட்டுக்காரரும் தினம் க்ளுகோவிடா உட்கொள்ளுகிறார்கள். ஏன் என்றால் நீங்கள் வேலையிலோ, விளையாட்டிலோ அதிகம் உழைக்கும்போது, உங்கள் ரத்தத்துடன் சீக்கிரம் கலந்து கொள்ளும் சரீரத்திற்கு வேண்டிய சர்க்கரையை க்ளுகோவிடா அளிக்கிறது.

* * *

க்ளுகோவிடாவை டீயிலோ, காப்பியிலோ, பாலிலோ அல்லது குளிர்ந்த பானங்களிலோ சேர்த்து அருந்துங்கள். ஒரு கப் அல்லது கிளாஸுக்கு ஒன்று முதல் மூன்று தேக்கரண்டியளவு க்ளுகோவிடாவைக் கலந்து சாப்பிடுங்கள். அது எளிதில் கரையக்கூடியது.



அதிக சக்திக்கு அவசியம் வேண்டியது

க்ளுகோவிடா

இந்தியாவிற்கான ஏஜெண்டுகள்:
பாரி அண்டு கோ. லிமிடெட்

கார்ன் ப்ராடக்ட்ஸ் கோ (இந்தியா) பிரைவேட் லிட.

கள: நிச்சயமாக.

சோக்: ஆதலால், அறவோன் வறுமையால் வாடினாலும், நோயால் பீடிக்கப்பட்டாலும், இதர துன்பங்களுக்கு ஆளானபோதிலும், இம்மையிலோ மறுமையிலோ அவனுக்கு நலனே விளையும் என்பது நிச்சயம். தர்மத்தை அனுசரித்துத் தானும் தெய்வத்தைப் போலாக வேண்டுமென்று முயல்வோரைக் கடவுள் அலட்சியம் செய்வாரா?

கள: மாட்டவே மாட்டார்.

சோக்: மனித சமூகத்தில் அவர்கள் நிலைமை என்ன? சாமர்த்தியமுள்ள தீயவர் பந்தயத்தில் முதலில் படாடோபத்தோடு ஓடி நடுவழியில் களைத்து விழுந்துவிடும் ஓட்டக்காரர்களைப் போலாவார். தர்ம புருஷர்கள் முதலில் பின்னிருந்தாலும், முடிவில் வெற்றி பெறுவர்.

கள: சரியான உதாரணம்.

சோக்: நான் இப்பொழுது ஓர் கதை சொல்லப் போகிறேன். ஏர் என்னும் வீரன் போர்க்களத்தில் மாண்டான். பத்தாவது நாள் இறந்தோர்களின் உடல்களைத் தேடி எடுத்தனர். இதர உடல்கள் அழுகித் துர்நாற்றம் வீசின. ஏரின் உடலோ சிறிதும் விகாரமடையாமல் இருந்தது. அவனை வீட்டுக்கு எடுத்துச் சென்று பன்னிரண்டாம் நாள் புதைப்பதற்கு ஏற்பாடு செய்துகொண்டிருக்கையில், திடீரென்று எழுந்து உட்கார்ந்தான். உடலை விட்டு நீங்கியிருந்த நாட்களில் தான் கண்ட காட்சிகளைக் கூறலானான்.

'உடலை விட்டு நீங்கிய எனது ஆத்மா பெரிய கூட்டத்துடன் பிரயாணம் செய்தது. சிறிது காலத்துக்குப் பிறகு இரண்டு வாயில்களுள்ள ஓர் இருள் மூடிய இடத்துக்கு வந்தோம். அந்த வாயில்களுக்கெதிராகப் பரலோகங்களுக்குச் செல்லும் இரண்டு வாயில்கள் இருந்தன. நடுவில் நீதிபதிகள் உட்கார்ந்திருந்தனர். ஒவ்வொரு ஆத்மாவின் செயல்களையும் விசாரித்துத் தீர்ப்புக் கூறியபின் அதன்பேரில் முடிவை எழுதிய ஓர் சீட்டை ஒட்டி அனுப்பினர். தர்மிஷ்டர்கள் வலதுபுற வாயில் வழியாகவும், தீயவர்கள் இடதுபுறமாகவும் அழைத்துச் செல்லப்பட்டனர். அதே சமயத்தில் பரலோக வாயில்கள் வழியாகவும், பல ஆத்மாக்கள் அங்கு வந்து கூடின. பெரிய கும்பலாக இருந்தது. பழந்தொடர்பு உள்ளவர்கள் ஒருவரை யொருவர் அடையாளம் கண்டு பரஸ்பர அனுபவங்களை விசாரித்தனர். நரகத்திலிருந்து வந்தவர்கள் தங்களுடைய பயங்கர அனுபவங்களை வர்ணித்தனர். சொர்க்கத்திலிருந்து வந்தவர்களோ அங்குள்ள ஒப்பில்லாத ஒளியையும், அழகையும், ஆனந்தத்தையும் இன்பமுடன் எடுத்துரைத்தனர். அந்தச் சம்பாஷணைகளையெல்லாம் சொல்லுவது சாத்தியமில்லை. அவற்றின் சாரம் இதுவே. பூமியில் செய்யும் ஒவ்வோர் அக்கிரமத்துக்கும் பதின்மடங்கு தண்டனை அனுபவிக்க வேண்டும். அவ்வாறே நன்மைக்கும் பதின்மடங்கு வெகுமதியுண்டு.

'பாப்பிலியாவில் கொடுங்கோல் ஆட்சி புரிந்த மகா அர்தீசர் எங்கே?' என்று ஒருவன் வினவினான். அவன் ஆயிரம் வருஷங்களுக்கு முன் வசித்தவன். தனது கிழத் தந்தையையும், அண்ணனையும் கொன்று, மற்றும் பல கொடுஞ் செயல்கள் செய்தவன். அந்தக் கேள்விகளுக்குப் பதில் அளித்தவன் கூறினான். 'அவன் இங்கு வரமாட்டான். நாங்கள் நரகத்திலிருந்து எங்கள் தண்டனைகளை அனுபவித்த பின் மேலெழும்பும்பொழுது, அர்தீசரும் மற்றும் பலரும் வாயிலருகில் இருந்தனர். அவர்களில் கொடுங்கோல் ஆட்சி புரிந்தவர்களும், சாதாரண வாழ்க்கையில் பெரும் குற்றங்கள் செய்தவர்களுமிருந்தனர். தங்கள் தண்டனை தீர்ந்து மேலெழப் போவதாக அவர்கள் நினைத்து அங்கு வந்தனர். ஆனால், அவர்களில் எவரேனும் வாசலில் நுழையப் பார்த்தால் ஓர் பேரிரைச்சல் எழும்பியது. தீவிழியுடன் கூடிய காவலர்கள் அவர்களைப் பிடித்துக் கட்டிச் சவுக்கால் அடித்துக் கீழே தள்ளினர். அதைக் கண்டு எனக்கும் அதே கதியாகுமோ என்று நடுங்கினேன். வாயிலில் நுழைந்தபொழுது சத்தம் எழாமல், தடைபடாமல் வெளி வந்ததும் அளவில்லா மகிழ்ச்சி அடைந்தேன்' என்றான். இம்மாதிரி வெளி வந்த கோஷ்டிகள் ஓர் மைதானத்தில் ஏழு நாட்கள் இருக்க வேண்டும். எட்டாவது நாள் பிரயாணத்தை மீண்டும் தொடர்ந்து நான்கு நாட்கள் சென்ற பின் பூமியையும் சொர்க்கத்தையும் பிணைக்கும் ஓர் ஒளித்திரளைக் கண்டனர். அது வானவில் போலிருந்தது. ஆனால் மிகவும் பிரகாசமாகவும், பரிசுத்தமாகவும் இருந்தது. அதன் மத்தியிலிருந்து சொர்க்கம் வரையில் பல ஒளிச் சங்கிலிகள் தொங்குவதைக் கண்டனர். விதியின் முழங்கால் மீதுள்ள அச்சில் பெரியதும் சிறியதுமாய் அடுக்கடுக்காகக் கோக்கப்பட்டிருந்த எட்டுச் சக்கரங்கள் இந்தச் சங்கிலிகள் மூலம் சுழன்று கொண்டிருந்தன. விதியும் அவளைச் சுற்றி அவளுடைய மூன்று பெண்களும் சிம்மாசனங்களில் உட்கார்ந்திருந்தனர். மூத்த பெண் சென்ற காலத்தைப் பற்றியும், இரண்டாவது பெண் நிகழ்காலத்தைப் பற்றியும் மூன்றாவது மகள் வருங்காலத்தைப் பற்றியும் பாடிக் கொண்டிருந்தனர். சொர்க்கத்திலிருந்தோ நரகத்திலிருந்தோ வெளிவந்த ஆத்மாக்கள் முதலில் மூத்த பெண்ணிடம் போக வேண்டும். அவள் அருகில் இருந்த ஓர் மகான் இந்த ஆத்மாக்களின் வாழ்க்கைச் சரிதங்களை அவள் மடியில் வைத்தார். பிறகு கட்டுச் சீட்டுக்களைக் குலுக்கிப்போட்டு ஒவ்வோர் ஆத்மாவுக்கும் ஒரு சீட்டுக் கொடுத்தார். அந்தக் கிரமத்தில் தமது புதிய வாழ்க்கையைத் தேர்ந்தெடுக்கும்படி கட்டளையிடப்பட்டனர். ஒவ்வொன்றின் பழைய வாழ்க்கைக்கு அனுகுணமாகப் பலவித

வாழ்க்கைகளின் வரலாறுகள் அறிவிக்கப்பட்டன. அவைகளில் நன்மை தீமை, அழகு, விகாரம் முதலிய எல்லாக் குணங்களும் கலந்திருந்தன.

முதல் சீட்டுப் பெற்றவன் மிகவும் பெரிய கொடுங்கோல் ஆட்சியைத் தேர்ந்தெடுத்தான். அதன் விவரங்களைப் பரிசீலனை செய்தபொழுது, தனது மகனைக் கொன்றும், மற்றும் பல தீமைகளை இழைக்கவும் வேண்டுமென்று கண்டு மிகவும் வருந்தினான். சொர்க்கத்திலிருந்து வந்தவர்களில் பலர் அங்கு எவ்விதக் கஷ்டமுமில்லாமல் சுகவாழ்க்கையிலிருந்ததால் தவறான புனர்ஜன்மங்களைத் தேர்ந்தெடுத்தனர். நரகத்திலிருந்து வந்தவர்கள் நல்ல பிறவிகளை வேண்டினர். தத்துவ ஞானத்தை ஆராய்ந்து அதன் மூலம் நல்வாழ்க்கையை நாடியவர்களே தங்கள் வருங்கால வாழ்வைச் சரியாகத் தேர்ந்தெடுக்க ஆற்றல் பெற்றிருந்தனர்.

பல ஆத்மாக்களின் தெரிவு வேடிக்கையாகவும், எதிர்பார்க்கக் கூடாததாகவும் இருந்தது. பெண்கள் மீதிருந்த வெறுப்பால் ஆர்ப்யூன் ஓர் அன்ன பட்சியின் பிறவியை வேண்டினான். பறவைகளாக முன் ஜென்மம் எடுத்தவர்களில் பலர் மனிதப் பிறவி விரும்பினர். கிரேக்க பீமனான அஜாக்ஸ் சிங்கப் பிறவியை நாடினான். அகமாம்னன் கழுகாகப் பிறக்கக் கோரினான். மனிதப் பிறவியின் துக்கங்களே இவர்களை இவ்வாறு செய்யத் தூண்டின. கீர்த்திவாய்ந்த உலிசிஸ் அவர்களின் கிரமம் கடைசியாக வந்தது. தனது பூர்வப் பிறவியின் அனுபவங்களால் எல்லா ஆசைகளும் அவன் மனத்திலிருந்து அகன்றிருந்தன. வெகு நேரம் தேடிப் பார்த்து முடிவில் எவ்விதமான வியாதியுமில்லாத எளிய மனித வாழ்க்கை பிறரால் அலட்சியம் செய்யப் பட்டுக் கிடப்பதைக் கண்டு அதையே தேர்ந்தெடுத்துக் கொண்டான்.

எல்லா ஆத்மாக்களும் தமது அடுத்த பிறவிச் சீட்டுக்களை எடுத்துக் கொண்டபின், கிரமப்படி விதியின் மூத்த மகள் இறந்த கால தேவதையிடம் சென்றனர். அவள் அந்தந்த வாழ்க்கையின் காப்புத் தெய்வத்திடம் அவர்களை ஒப்புவித்தாள். அத்தெய்வங்கள் நிகழ்கால தேவதையான இரண்டாவது புத்திரியிடம் அழைத்துச் சென்றன. அவள் அவர்களுக்குரிய சக்கரங்களில் பூட்டினாள். அடுத்தாற்போல், வருங்கால தேவதையான மூன்றாவது குமாரி சக்கரங்களின் அச்சைச் சுழற்றி, அவர்களை மாற்ற முடியாத விதிக்காளாக்கினாள். அந்தச் சக்கரங்கள் விதியின் சிம்மாசனத்தை வலம் செய்து ஆத்மாக்களை மறதி என்னும் ஓர் கொதிக்கும் பாலைவனத்தின் வழியாகச் சுழன்று அழைத்துச் சென்றன. மாலையில் பழைய ஞாபகமின்மை என்ற ஆற்றருகில் தங்கினர். எல்லோரும் அதன் நீரைப் பருகினர். ஞானிகள் மிதமாகக் குடித்தனர். மற்றவர் மிதமிஞ்சிப் பருகினர். அந்தத் தண்ணீரைக் குடித்தவுடன் பழைய பிறப்பின் ஞாபகங்களை யெல்லாம் முற்றிலும் மறந்தனர். அவர்கள் இரவில் இளைப்பாறிக் கொண்டிருந்தனர். நடுநிசியில் ஓர் பெரிய இடி முழக்கமும், பூகம்பமும் தோன்றின. ஓர் கணத்தில் ஆத்மாக்கள் எல்லாம், விண் வீழ் கொள்ளிகள் போல் தம் தம் பிறவியுற்றன. இந்த விவகாரங்களி லெல்லாம் ஏரின் ஆத்மா ஈடுபடவில்லை. வெறும் சாட்சியாக இருந்தது. முடிவில் எப்படித் தன் உடலைச் சேர்ந்தது என்று அவனுக்குத் தெரியாது. பாடையின் மீது கண் விழித்ததொன்றையே அவன் அறிந்தான்.

களக்கோனே, இக்கதை பரம்பரையாக நமக்கு வந்துள்ளது. அதன் கருத்தை நாம் நன்குணர்ந்தால், மறதிப் பாலைவனத்தைத் தாண்டும்பொழுது நமக்கு எவ்விதத் தீங்கும் வராது. ஆதலால் உபதேசம் இதுவே. எக்காலத்திலும், எந்த நெருக்கடியிலும் அறநெறியைக் கடைப்பிடித்து, தர்மத்தையும், நீதியையும் சார்ந்து வாழ வேண்டும். ஆத்மாவுக்கு அழிவில்லை என்பதை என்றும் மறக்கலாகாது. இவ்விதம் ஒருவர்க்கொருவர் அன்பு கொண்டு, தெய்வத்திடம் பக்தி கொண்டு முடிவில் வாழ்க்கைப் பந்தயத்தில் வெற்றி பெற்று அதன் வெகுமதிகளைப் பெறுவோம். இம்மையிலும், மறுமையிலும் நமக்கு நன்மையே தொடரும். (முற்றும்)

தீபச் சுடர் பார்க்க அழகானது; தூயது; புனிதமானது. ஆனால் தொட்டால் சுடுமே! மீனாட்சியும் அப்படி அணுக முடியாதவளாக இருந்தாள்.

சுடர்க் கொழுந்து



கோயில் மண்டபத்தில் நின்று நான்கு பெண்கள் பேசிக்கொண்டிருந்தார்கள். கணீரென்று வெண்கலக் குரலில் அவர்கள் பேசுவதைக் கேட்டவாறு நின்றான் சபாபதி.

"அடியே! மீனாட்சியைக் காவிப் புடவையும், கழுத்தில் உருத்திராட்ச மாலையும் கமண்டலம் ஏந்திய கையுமாகச் சந்நியாசிக் கோலத்தில் நேற்று நான் பார்த்தேன்; தலையெல்லாம் சடை விழுந்து போயிருந்தது! மூல ஸ்தானத்தைப் பார்த்தவாறு இதே கோவிலில் நின்றுகொண்டிருந்தாள்."

"போடி! கதை விடுகிறாய்! அவள்தான் செத்து விட்டாளாமே. அவளுக்கு ஏதோ தகிஸ்மரியாவாம். புருஷனோடு வாழ மாட்டேன் என்று விட்டுப் போய் விட்டாளாம்."

"அதெல்லாம் ஒன்றுமில்லை. அவளைச் சின்ன வயசிலேயே பேய் பிடித்துக்கொண்டு விட்டதாம். அதனால் புத்தி தடுமாறி விட்டதாம். அவள் உடலுடன் ஒட்டிப் பழகி அது வாழத் தொடங்கி விட்டதாம். பேய் எப்படியடி புருஷனோடு வாழும்?"

"இறந்து விட்டாள் என்று சொல்கிறாயே. எந்த ஊரில்? எப்படி இறந்தாள்? அவளுடைய பிசாசா நேற்று இந்தக் கோவிலுக்குள் வந்து நின்றுகொண்டிருந்தது?"

"ஆமாம், நின்றது அவள்தான் என்று உனக்கு எப்படித் தெரியும்?"

"ஐயோ, பாவம்! எனக்கு வெள்ளெழுத்தா, என்ன? அந்தக் கூர் மூக்கும், குறுகுறுக்கும் கண்களும், அவளுடையவைதான். ஆனால் முகத்தில்தான் என்ன ஒளி?"

"அவள் உன்னைப் பார்த்தாளா?"

"ஓ! பார்த்தாளே? தெரிந்ததாகக் காட்டிக் கொள்ளவில்லை. நானே ஜாடையாக அவளிடம் பேச முயன்றேன். 'நான் பேசுவதில்லை. மௌன விரதம்' என்று கையை நீட்டி ஜாடையில் தெரிவித்தாள்."

"அப்படியா?"

"ஆமாண்டி என்கிறேன். இடுப்பிலிருந்து சாக்குக்கட்டியொன்றை உருவி எடுத்து, 'கடவுளை நம்பு. நீ சுகமாக இருப்பாய்' என்று இங்கே எழுதிவிட்டுப் போய் விட்டாள்."

'கிடக்கிறது, விடு. அவள் புருஷனைத்தான் பார்க்கச் சகிக்கவில்லை. மனுஷன் அப்படியே உருகிப் போய் விட்டான்."

"அவனை யாரடி உருகச் சொன்னது? அவனை வேறு கல்யாணம் பண்ணிக்கொள்ள வேண்டாம் என்றோ, சொத்தில் பங்கு கேட்டுக் கொண்டோ அவள் மல்லுக்கு நிற்கிறாளா? அவள்தான் 'ஜய சங்கர்' என்று சொல்லிக்





கொண்டு சந்நியாசினியாகக் கிளம்பி விட்டாளே!''

''இது ஒரு பெரிய அதிசயம்தான்! ஒரு சண்டையில்லே, சச்சரவில்லே. புருஷனுடன் வாழ விருப்பமில்லே என்று அவள் பிரிந்து போய் விட்டாளே!''

''இப்பொழுதுதான் இதைப் பற்றியெல்லாம் அதிசயப்படுகிறோம். எத்தனையோ பெண்கள் இப்படி உடல் உறவை வெறுத்துப் போயிருக்கிறார்கள். தீபத்தின் சுடர் அழகாகத்தான் இருக்கிறது. தொட்டு அனுபவிக்க முடியுமா? தூர இருந்தே பார்க்க வேண்டியதுதான். எல்லாருமே மீனாட்சியைப் போல் ஆகி விடுவார்களா?''

அந்தப் பெண்களின் பேச்சு முடிகிற வரையில் கேட்டுக் கொண்டு நின்ற சபாபதி மூலஸ்தானத்தை நோக்கித் திரும்பினான். அவன் தான் சற்று முன் அவர்கள் பேசிய மீனாட்சியின் கணவனாக ஒரு காலத்தில் இருந்தவன்.

ஐந்து முகங்களுக்கும் குங்குமம் இட்டு எண்ணெய் ஊற்றித் திரியிட்டு மூலஸ்தானத்தில் தீபம் ஏற்றி விருந்தார்கள். சுடர்கள் மெல்லிய காற்றில் அசைந்தாடிக் கொண்டிருந்தன. உருக்கிய தங்கம் போல் பளபளவென்று மின்ன, நடுவில் நீல நிறமும், சிவப்பு நிறமும் பாய்ந்தோட, அவை மின்னிய அழகைச் சபாபதி பார்த்துக் கொண்டே நின்று கொண்டிருந்தான். தொலேவில் நின்று பார்ப்பதற்குச் சுடர் சுந்தரமாகத்தான் இருந்தது. விவரம் தெரியாத குழந்தை அந்தச் சுடரைப் பார்த்தால் தன் தளிர்க்கரங்களால் அதைப் பிடித்து இழுக்கச் செல்லும். அப்புறம் கன்றிப்போன அதன் விரல்களும், கதறி அழும் அதன் பரிதாபமும் பார்க்கச் சகிக்க முடியுமா? ஆனால், சுடரைத் தொடுவதற்கு முன்பு அதன் அழகிலே இலயித்துப் போய்க் குழந்தை எதையுமே யோசிப்பதில்லே. சுட்ட பிறகுதான் சுடரின் குணம் தெரிகிறது.

சபாபதி வறட்சியாகத் தனக்குள் சிரித்துக் கொண்டான். தீபச்சுடர் அசைவதுபோல் மீனாட்சி அசைந்தாடிக் கொண்டே அவன் வீட்டினுள் நுழைந்ததும், அவனுடன் இரண்டு வருஷங்கள் வாழ்ந்ததும் ஒரு கனவு போல் ஆகிவிட்டது. எல்லாக் கதைகளிலும் வருவது போல் மீனாட்சி அவனைத் தவிக்கவிட்டு விட்டு இந்த உலகத்திலிருந்து போய் விடவில்லே.

வலது காலே முதன் முதலாக எடுத்து வைத்து அவன் மனைக்குள் அவள் புகுந்த போது கொட்டு மேளமும், நாதஸ்வரமும் நிரம்பி வழிந்தன. அப்புறம் எத்தனையோ

சடங்குகள். கட்டிப் போட்டாற்போல் மணையில் உட்கார்ந்து நொடிக்கொருதரம் அவளைப் பார்த்தவாறு தீயில் நெய் வார்த்து ஓமம் செய்து கொண்டிருந்தான் அவன்.

மீனாட்சி சித்திரத்துப் பாவைபோல் குனிந்த தலை நிமிராமல் தன் கால் பெரு விரலைப் பார்த்துக்கொண்டே உட்கார்ந்திருந்தாள். அவளுக்கு எதிராகச் சுடர்விட்டு எரியும் குத்து விளக்கு ஒன்று இருந்தது. அவள் கட்டியிருந்த கருநீலப் புடவையின் சாயல் அவளது கொழுவிய கன்னங்களில் நிழலாடின.

சபாபதி அவளைத் திரும்பித் திரும்பிப் பார்த்துச் சலித்துப் போனான். உணர்ச்சி அற்றவளாக ஒரே கதியில் அந்த நிலத்தையே பார்த்துக் கொண்டு அவள் உட்கார்ந்திருப்பது அவனுக்கு ஏக்கமாக இருந்தது. இந்தக் காலத்துப் பெண்கள் நாலும் தெரிந்தவர்கள். கல்யாணம் என்றால் பயந்து நடுங்கிப் போகிறவர்கள் அல்ல. மாலை மாற்றும்போதும், ஊஞ்சல் ஆடும் போதும் தன் கரம் பிடிப்பவனின் முகத்தைப் பார்த்துத் துணிவோடு முறுவலிக்கும் அநேக பெண்களை அவன் பார்த்திருக்கிறான்.

முதன் முதலாக அவளைப் பெண் பார்க்கச் சென்ற தினத்திலும் அடக்கவொடுக்கமாக அவன் முன்பு வந்து நின்று அவனை வணங்கி விட்டு உட்கார்ந்தவள்தான். அந்தப் பூமியில் என்னதான் இருக்குமோ? தலையைக் குனிந்தவாறு தரையைப் பார்த்துக் கொண்டே உட்கார்ந்திருந்தாள்.

வழக்கம்போல் பாடச் சொன்னார்கள். சிற்றோடை ஒன்று சலங்கை ஒலி எழுப்புகிறாற்போல் 'வாரணமாயிரம்' என்று பாட ஆரம்பித்தாள். அவள் கண்கள் கனவு காண்பவை போல் இந்த உலகத்து நிகழ்ச்சிகளைக் காணாமல், அன்று கோதையும், அரங்கனும் மணந்த மணக்கோலத்தைக் காண்பது போன்று எங்கோ இலயித்து நின்றன.

அந்தச் சுபாவம், நிதானம் யாவுமே பிடித்திருந்தன சபாபதிக்கு. அடுத்து நிச்சயமாகிக் கல்யாணமும் நடந்து விட்டது. பூப்போன்ற அவள் கையைப் பற்றி ஆதுரத்துடன் தன் கைக்குள் புதைத்துக் கொண்ட சபாபதி அந்தக் கை இலேசாக நடுங்கிக்கொண்டிருப்பதை உணர்ந்தான்.

புருஷன் என்றால் 'பயங்கரமான புலி' என்பதுபோல் சொல்லி யாரோ அந்தப் பெண்ணின் மனத்தை விஷமாக அடித்திருக்கிறார்கள் என்பது அவனுக்குப் புரிந்துவிட்டது.

மீனாட்சி வீட்டுக்கு வந்ததும் அவளிடம், 'காதல் என்றால் என்ன?' என்று விளக்கமாகப் பேசி விடவேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டான் சபாபதி.

கிருகப் பிரவேச முகூர்த்தம் நடக்கும் போதும் அவள் உணர்ச்சி அற்றவளாக நடந்து கொண்டது சபாபதிக்கு வியப்பையே அளித்தது. அந்தக் கச முசப் பேச்சுக்களும், கல்யாணச் சந்தடியும் ஓய்ந்து அவளைத் தனிமையில் சந்திக்க வலுடன் காத்திருந்தான்.

ஓயாமல் அவன் எதிர்பார்த்திருந்த அந்தத் தனிமையும் வந்தது. மீனாட்சிக்கு அன்று அலங்காரம் பிரமாதம். ஜாதி மலரால் அலங்கரிக்கப்பட்ட தலைப் பின்னல். மேலே ஒரு கட்டு மல்லிகைப்புஷ்பம். காதில் ஜிமிக்கி, மாட்டல்கள். இடையைச் சந்தன வர்ணப் பட்டுப் புடவை அழகு செய்தது. இப்படியும், அப்படியும் அவள் திரும்பும்போது ஜிலுஜிலுவென்று ஒளி வீசும் நகைகள் வேறு.

மீனாட்சி மெதுவாக உள்ளே வந்தாள். அதே தலை குனிவு. அதே மௌனம். சுவர் ஓரமாக நின்றிருந்தவளை நோக்கிச் சபாபதி அடியெடுத்து வைத்தான். அடுத்த நிமிஷத்தில் மீனாட்சியின் மை விழிகள் அவனை ஏறிட்டுப் பார்த்தன. அவைகளின் இமை ஓரத்தில் பளபளவென்று மின்னும் கண்ணீர்த் திரையைக் கண்டு பின்வாங்கினான் சபாபதி.

முதல் நாள் முதல் சந்திப்பின்போது கண்ணீர். கணவனின் முகத்தை ஏறிட்டுப் பார்த்த மாத்திரத்தில் உடைப்பெடுத்துப் பெருகுவது போல் கண்ணீர் வெள்ளம் அவள் கன்னங்களில் பெருகி, மார்புச் சேலையை நனைத்தது.

சபாபதி மிகுந்த வியப்போடு அவளைப் பார்த்தான்.

ஒரு அடி எட்ட நின்றே அவளைப் பார்த்துக் கனிவுடன், ''மீனாட்சி! ஏன் இப்படி அழுகிறாய்?'' என்று கேட்டான்.


கயல் விழிகள் இரண்டையும் புரட்டி அவனைப் பார்த்தாள் அவள். அந்த விழிகளில்தான் எத்தனை சோகம்? இலேசில் அகப்படாத ஓர் உன்னதப் பொருளைத் தேடும் ஆசையும் அந்தச் சோகத்தினூடே ஊடுருவிச் சென்றதைக் கண்டான்.

முதன் முதலாகத் தனிமையில் சந்திக்கும் தம்பதிகள் என்ன பேசுகிறார்கள், எப்படி நடந்து கொள்கிறார்கள், எப்படிப் பார்த்துக் கொள்கிறார்கள் என்று அறிந்துகொள்ள வாழ்க்கையின் அஸ்தமனத்துக்கு வந்து விட்ட கிழங் கட்டைகள்கூட ஆவல் காண்பிப்பதுண்டல்லவா?


அறைக்கு வெளியே முணுமுணுவென்று பேசி, இலேசாகச் சிரிப்பது தெளிவாகக் கேட்டது. அறையில் மின்சார விளக்கு இருந்தாலும் சுபமாகக் குத்துவிளக்கை ஏற்றி வைத்திருந்தார்கள். முத்தை உருக்கி வார்த்து ஒரே அமைப்பாகக் கடைசல் பிடித்தது போல் நிச்சுடர் நிதானமாக எரிந்து கொண்டிருந்தது. நெற்றி முகப்பில் பளிச்சென்று குங்குமம் துலங்கியது. அதன் அருகில் அசையாமல் நிற்கும் மீனாட்சியும் தீபத்தின் சுடரைப் போலவே இருந்தாள்.

சபாபதி முழு நிலவையும், பரந்த வானையும், ஆர்ப்பரிக்கும் அலைகடலையும், விண்மீன்களையும் ரசிக்கும் கவிஞனைப் போல் நிறைந்த மனத்துடன் மீனாட்சியின் எழிலை ரசித்தான். தன்னுடையவள் அழகானவள் என்பதில் அவன் பெருமை கொண்டு கம்பீரமாக அவளை நிமிர்ந்து பார்த்தான். அவள்தான் தலை நிமிரவே இல்லை. கட்டிலில் இருந்து ஜமக்காளத்தையும், தலையணையையும் உருவி எடுத்துக் கீழே விரித்துவிட்டு அவன், ''மீனு! நான் ஒன்றும் 'பூச்சாண்டி' இல்லை என்னைப் பார்த்து உன் பயம் தெளிகிறவரைக்கும் உன்னை நான் உரிமையுடன் அணுக மாட்


புத்துணர்ச்சி பெற
காவேரி சூபர்
வெப்பம் உங்களை வாட்டுகிறதா? காவேரி சூபர் சோப்பை உபயோகித்து வியர்வை துர்நாற்றத்தை விரட்டுங்கள்! காவேரி சூபர் உங்களுக்கோர் புத்துணர்ச்சியை அளிக்கும். அதன் ஔஷத மணம் உங்கள் மனதைக் கவரும்.
காவேரி சூபர் ஔஷத குணம் நிறைந்த சால்மூக்ரா தைலம் கலந்தது
CAUVERY SUPER SOAP
கையடக்கமானது, விலை குறைவானது.
தயாரிப்பு:
மேட்டூர் கெமிகல் & இண்டஸ்ட்ரியல் கார்ப்பொரேஷன் லிட்.
மேட்டூர் அணை R.S. சேலம் ஜில்லா
மானேஜிங் ஏஜெண்ட்ஸ்: சேஷசாயி பிரதர்ஸ் பிரைவேட் லிமிடெட்
MC-537



நரஸூ காபி
அருந்தி அதன்
பிரத்யேகமான
ருசியை
அனுபவியுங்கள்
நரஸுஸ்
மான்யுபாக்சரிங்
கோ. பிரைவேட் லிட்.
சேலம் & சென்னை
NCZ-22 ATM



குடும்பத்தில்
உள்ள
ஒவ்வொருவருக்கும்
நல்லது
MARGO
கிருமி நாசினியான வேப்ப எண்ணெயிலிருந்து தயாரிக்கப்பட்டதும், மனோகரமான மணம் தருவதுமான மார்கோ மிக மெல்லிய சருமமுடையவர்களுக்கும் உத்தமமானது. மார்கோ சோப்பின் இளகும் சத்துநிறைந்த நுரை சரீரத்தின் துவாரங்களில் ஆழமாகப் புகுந்து சென்று, சருமத்திலுள்ள எல்லா அழுக்குகளையும் போக்கி சுத்தப்படுத்துகிறது. இதன் தயாரிப்பின் ஒவ்வொரு கட்டத்திலும் சோதிக்கப்பட்டுள்ள மார்கோ சோப் உங்களுக்கு அதிக சுகத்தையும், நாள்முழுதும் அதிகத் தூய்மை உணர்ச்சியையும் அளிக்கிறது.
மார்கோ சோப்
குடும்பத்துக்கு உத்தமமான சோப்
தி கல்கத்தா கெமிகல் கம்பெனி லிட். கல்கத்தா-29
தென் இந்திய ஆபீஸ்: 5/149, பிராட்வே, சென்னை - 1
CHC-15 TM

டேன்'' என்று கூறியவாறு மின்விளக்கை அணைத்து விட்டுப் படுத்து விட்டான்.

அடுத்த நாள் உலராமல இருந்த ஈரக் கூந்தலை அள்ளிமுடிச்சிட்டு, மஞ்சள் மின்னும் முகத்துடன் மீனாட்சி, காப்பியுடன் அவன் அறைக்குள் நுழைந்தாள். காப்பியை அவன் மேஜையின் மீது வைத்து விட்டுத் திரும்ப நினைத்தவளைச் சபாபதி கூப்பிட்டான்.

'' மீனு !''

''. . . . .''

''மீனாட்சி ! உன் மீன் விழிகளைச் சற்று என் பக்கம் திருப்பித்தான் பாரேன்.''

அவள் குனிந்த தலை நிமிராமல் அவன் எதிரில் வந்து நின்றாள்.

'' உனக்குப் பேசத் தெரியாதா ?''

'' தெரியும்.''

''பின்னே ஏன் பேசமாட்டேன் என்கிறாய்?''

'' என்ன பேச வேண்டும் ?''

சபாபதிக்கு இந்தப் பதிலைக் கேட்டதும், வாயடைத்துப் போய் விட்டது.


'' கணவனும், மனைவியும் என்ன பேசுவதா? ஏதாவது பேசேன். இவ்வளவு இனிமையான குரலைக் கொடுத்திருக்கும் கடவுள் உனக்குக் கல்நெஞ்சை ஏன் கொடுத்து விட்டார்?''

மீனாட்சி வறட்சியாகச் சிரித்துக் கொண்டே வெளியே போய் விட்டாள். அவனுக்கு அவளைப் பற்றி ஒன்றுமே புரியவில்லை. மற்றவர்களுடன் சிரிக்கிறாள்; பேசுகிறாள். குடும்ப வேலைகள் அனைத்தும் விதரணையாகச் செய்கிறாள். கணவனின் உடல்நலம் பேணுவதில் எவ்வளவோ அக்கறையுடன் இருக்கிறாள். ஆனால், அவள் அவனை நெருங்குவதில்லை. தன்னை அவன் நெருங்கி விடுவானோ என்கிற பயம் அவள் முகத்தைக் கவ்விக் கொண்டிருந்தது. ஒரே சமயத்தில் பெண்ணாகவும் இருந்தாள், அணுக முடியாத நெருப்பாகவும் இருந்தாள்.

ஒரு நாள் மாலை மங்கி வரும்போது சபாபதி சலித்த மனத்துடன் தெருவில் நின்றவாறு தொடுவானில் எழும்பும் நிலவைப் பார்த்துக் கொண்டிருந்தான். கதிரவனின் வெப்பத்துக்கும், நிலவின் குளிர்ச்சிக்கும், ஆற்றின் ஓட்டத்துக்கும் விளக்கம் கண்டுபிடித்து எழுதுகிறார்கள். மீனாட்சியின் மனத்துக்கு யாராவது விளக்கம் சொன்னால் தேவலை போல் இருந்தது அவனுக்கு. தெரு விளக்கை ஏற்றி விட்டுத் திரும்பும் மனைவியைப் பார்த்த அவன் அவள் பின்னே உள்ளே சென்றான். 'விருட்' டென்று அவள் கைகளைப் பிடித்துக் கொண்டு, '' மீனு ! இப்படியே எத்தனை நாட்களுக்கு இருப்பதாக உத்தேசம்? நான் மனத்துக்குள் எரிந்து குமைந்து வருவது உனக்குத் தெரிய வில்லையா ?'' என்று கேட்டான்.

மீனாட்சி பாம்பை மிதித்தவள் போல் அலறி விட்டாள்.

'' விடுங்கள். விடுங்கள். என்னை ஒன்றும் செய்யாதீர்கள். உங்களுக்குப் புண்ணியமாகப் போகிறது.''



திருடன்: எனக்கு இப்படி நடந்து போகப் பழக்கமில்லீங்க! ஒரு டாக்ஸி வைச்சுக்கிட்டுப் போயிடலாமுங்க!

'' புண்ணியமாவது, பாவமாவது? பிசாசே! என்னை அணு அணுவாகச் சித்திரவதை செய்கிறாயடி! இல்லறத்தின் தத்துவமே உனக்குப் புரியவில்லையே! கடவுளின் படைப்புத் தொழிலையே அல்லவா நீ தாழ்வுபடுத்த முற்பட்டு விட்டாய்?''

மீனாட்சி சோகப் புன்னகை புரிந்தாள். கேட்டாள்:-

'' நீங்கள் எல்லா நூல்களையும் படித்திருக்கிறீர்கள். இல்லையா ?''

'' ஆமாம். படித்தேன்! நாசமாகப் போனேன். கற்பனையின் எழில் உருவமாகிய பெண்ணொருத்தியைப் படைத்து, அவளுடன் பேசி மகிழ்ந்திருக்கிறேன். கொஞ்சிக் குலவியிருக்கிறேன். உண்மையில் நான் ஏமாந்து போனேன் !''

சபாபதியின் நெஞ்சில் கனன்று கொண்டிருந்த ஆசைத் தீ சீறிக் கொண்டு வெளியே பாய்ந்து வந்தது.

'' நீங்கள் என்ன சொல்கிறீர்கள் !'' என்று வெகுளியாகக் கேட்டு அவனை நிமிர்ந்து பார்த்தாள் மீனாட்சி.

'' சொல்கிறேன். கன்னடக்காய்க்கு உப்பில்லை என்று ! நீ பெண்ணா ? மரமா ? இரண்டுமே இல்லாத ஓர் அருவமா ? உன்னைப் பற்றி எனக்கு ஒன்றுமே தெரியவில்லை.''

'' தெரிந்து கொள்ளாமலேயே இருங்கள். கல்யாணம் என்று என் கழுத்தை நீட்டுவதற்கு முன்பு நான் சிறிது யோசித்திருக்க வேண்டும். நம்முடைய உறவெல்லாம் சற்றுத் தள்ளியே இருக்கட்டும்.''

சபாபதி விக்கித்து நின்றான்.

'' மீனாட்சி! நீ என்ன சொல்லுகிறாய் ?''

'' சொல்கிறது என்ன ? இந்த இரண்டு வருஷங்களாக எப்படி இருந்தோமோ, அவ்விதமே இனியும் இருந்து விடுவோம்...''

சுவாமி அலமாரியில் எரிந்து கொண்டிருந்த விளக்குத் திரியைத் தூண்டி விட்டு, விரலில் படிந்த எண்ணெயைத் தலை வகிட்டில் துடைத்துக் கொண்டு சோகமாகப் புன்னகை புரிந்தான் மீனாட்சி.

கொல்லை மாமரத்தில் ஆண் குயில் ஒன்று தன் பேடையை அழைத்துச் சோக கீதம் இசைத்துக் கொண்டிருந்தது.

சபாபதிக்கு ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது. தனக்கு அவளைக் கல்யாணம் செய்து வைத்த பாட்டியிடம் அன்றே கிளம்பிச் சென்றான். ஒருவேளை அவனுக்குப் பெற்றோர் இருந்திருந்து மணம் செய்து வைத்திருந்தால் அவன் இல்வாழ்க்கை வேறுவிதமாக அமைந்திருக்கலாம். பாட்டி மீனாட்சியைப் பற்றி வாய் நிறையப் புகழ்ந்தவள். 'அவள் அன்பும், அடக்கமும், தெய்வபக்தியும், ஒழுக்கமும் சபாபதிக்குக் கொடுத்து வைத்திருக்க வேண்டும். நல்ல குணவதியைக் கரம் பிடித்து விட்டான்' என்று சொல்லிச் சொல்லிப் பூரித்துப் போனாள். கடலின் ஆழத்தையும் வானத்தின் அளவையும் அறிவது போல் மீனாட்சியின் உள் மனத்தை அறிவதும் மிக மிகக் கடினமாக இருந்தது. உள் மனம் என்று அவளிடம் ஒன்று இருப்பதாகவே அவன் கருதவில்லை. மனிதப் பிறவிக்கு—அதிலும் பெண் பிறவிக்கு வேண்டிய—ஆசைகளை ஒதுக்கி விட்டுத் தூய வாழ்வு வாழ ஆசைப்படும் அந்தப் பெண்ணை இல்லறத்தில் பிணைத்து வைத்தது தவறு என்று அவன் மனம் அவளுக்காகப் பரிந்து உருகியது.

அவன் உரிமையை, அவன் தேவையை வைத்து அவளை எடை போடும்போது இயற்கையின் ஆவேசம்தான் மேலோங்கி நின்றது. 'மீனாட்சி என் மனைவி. அவள் என் விருப்பப்படி நடக்க வேண்டியவள். அவளுக்கென்று ஒரு தனி மனமே இருக்கக் கூடாது' என்று சபாபதி மௌனமாகக் குமைந்தான். புழுதி படர்ந்த சாலையில் பஸ் வேகமாகச் செல்வது போல் அவன் மனமும் பல எண்ணங்களைச் சிதற வைத்துக் கொண்டு கட்டுக்கடங்காமல் விரைந்து பறந்தது.

'திடு'மென்று வந்து நின்ற பேரனைக் கண்டதும் பாட்டி சின்னம்மாள் வாயெல்லாம் பல்லாக நின்றாள்.

''ஏண்டா, சபாபதி! அவளையும் அழைத்துக்கொண்டு வரக்கூடாதோ? கல்யாணம் பண்ணி அழைத்துப் போனவன்தானே? அவளைத் திரும்பவும் நான் பார்க்க வேண்டாமா?'' என்று கேட்டாள்.

சபாபதி அருகில் வாளியில் இருந்த நீரை எடுத்து முகத்தில் சில்லென்று ஊற்றிக் கொண்டான்.

''ஏண்டா! அவள் ஏதாவது 'தலையிலே முழுகாமல்' இருக்கிறாளா? என்ன இப்படித் திடும் என்று இங்கே வந்து சேர்ந்தாய்?'' சின்னம்மாள் பேரனை ஊடுருவிப் பார்த்தவாறு கேட்டாள்.

''உனக்குப் பைத்தியமா, பாட்டி?'' என்று கேட்டுத் தன்னுடைய மௌனத்தைக் கலைத்தான் பேரன்.

''ஆமாண்டா! உனக்கு மகன் பிறக்கிறான் என்றால் எனக்குப் பைத்தியமேதான் பிடித்து விடும். உன் அப்பனும், அம்மாவும் உன்னைத் துளிக் குழந்தையில் போட்டு விட்டுப் போன கண்ணராவியையும், அப்புறம் நான்பட்ட ஆயிரம் பாடுகளையும் நினைத்தால், சபாபதிக்கு மகன் பிறக்கிறான் என்றால் எனக்குப் பித்துப் பிடிக்காமல் இருக்குமா?''

''உனக்குப் பிடிக்கிறதோ இல்லையோ, பாட்டி! எனக்குப் பைத்தியம் பிடிக்கட்டும்! நிம்மதியாகப் போய் விடும்!''

''ஏண்டா?'' சின்னம்மாள் வியப்பே வடிவாக அவனைப் பார்த்தவாறு நின்றாள்.

சபாபதி என்னதான் அவள் வளர்த்த பிள்ளையாக இருந்தாலும் தன் மனத்தைத் திறந்து வெளியில் காட்ட முதலில் தயங்கினான். கண்ணீர் கலங்கும் அவன் விழிகளைப் பார்த்துப் பாட்டி பரிவுடன் அவன் அருகில் உட்கார்ந்து, ''சபாபதி! உன் மனசில் இருப்பதைச் சொல்லப்பா! நான் வந்து அந்தப் பெண்ணைக் கேட்கிறேன்'' என்றாள்.

''பாட்டி! அவளுக்குக் கல்யாணமே செய்திருக்கக் கூடாது. குடும்ப வாழ்க்கைக்கு அவள் ஏற்றவள் இல்லை.''

''அப்படியென்றால்?.... சமைக்கத் தெரியவில்லையா? உன்னோடு அன்பாகப் பழகத் தெரியவில்லையா?''

சபாபதி பாட்டியை வியப்புடன் அண்ணாந்து பார்த்தான்.

''பின்னால் சொன்னாயே என்னவோ அன்பு என்று. அதை அவள் கொஞ்சம் கூடத் தெரிந்து கொள்ளவில்லை.''

''புதிதுதானே, அப்பா! போகப் போகச் சரியாகப் போய் விடும்!''

பாட்டியிடம் வந்து குறையைச் சொல்லியது குட்டிச் சுவரில் முட்டிக் கொண்டாற் போல் இருந்தது. ஏறக்குறைய மனத்தளவில் மீனாட்சிக்கும், பாட்டிக்கும் வித்தியாசமே இல்லை. பாட்டி உலக ரீதியில் வாழ்ந்து மறந்து மரத்துப் போனவள். அவள் நியாயமாக வாழ்ந்து விட்டாள். மீனாட்சி மலர்ந்தவுடனேயே வாழ்க்கையை விட்டு விலகி ஓடுகிறாள். மலர் காயாகிக் கனியாவதுதான் உலக இயல்பு. அந்த இயல்பில் ஒட்டாமல் வாழ்வதற்கு ஆசைப்படுகிறாள் மீனாட்சி.


சலிப்போடு கிளம்பிய நெடுமூச்சுடன் விடைபெற்றுக் கொண்டு சபாபதி ஊருக்குத் திரும்பி விட்டான்.

* * *

கணவன் வந்ததும் கால் கழுவச் செம்பில் தண்ணீர் கொடுத்து, இலை போட்டு உணவு பரிமாறினாள் மீனாட்சி.

''பாட்டியை அழைத்து வந்திருக்கக் கூடாதா?'' மென் குரலில் கேட்ட அவளை ஆசை பொங்கப் பார்த்தான் அவன். ''ஏன்? இங்கே நீ ஒரு பாட்டி இருப்பது போதாதா? இன்னொரு பாட்டி வேறு வேண்டுமா?''

மீனாட்சி தலைகுனிந்து விட்டாள். அப்புறம் பேசவே இல்லை. இரவு ஊர்ந்து வந்தது. கனியின் சுவையைப் போலவும், மலரின் மணத்தைப் போலவும், தேனின் இனிப்பைப் போலவும் சபாபதியின் உள்ளம் அதை எதிர்பார்த்து விழைந்தது. மீனாட்சி நடுங்கினாள். பெரிய உருவில் ஊர்ந்து வரும் சாரைப் பாம்பைப் போல் அந்த இரவு அவள் மனத்தில் பயங்கரத்தை எழுப்பியது. வழக்கம் போல் அவன் கட்டிலிலும், அவள் தரை



சேவா ஸ்டேஜ் குழுவினர் தங்களது "நாலுவேலி நிலம்" என்ற நாடகத்தைச் சென்ற மாதம் 14ந் தேதியன்று அண்ணாமலை மன்றத்தில் நடித்ததுடன் நாடக ஆசிரியர் திரு தி. ஜானகிராமனையும் பாராட்டிக் கௌரவித்தார்கள். அன்றைய நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்த அமைச்சர் திரு பக்தவத்சலம் அவர்கள் நாடகமோ அல்லது திரைப்படமோ முதல்தரமாக அமைய அடிப்படைக் காரணம் சிறந்த கதையைத் தேர்ந்தெடுப்பதுதான் என்பதை வற்புறுத்தினார். திரு சகஸ்ரநாமம், நாடகாசிரியருக்குத் தமது பாராட்டுதல்களைத் தெரிவிக்கிறார். அவருக்கு அருகே திரு பி. என். ராமையாவும் வலது கோடியில் திரு தி. ஜானகிராமனும் அமர்ந்திருப்பதைக் காணலாம்.

யிலும் படுத்து விட்டார்கள். அவ்வளவு சடுதியில் என்றுமே தூக்கம் அவள் இமைகளைத் தழுவியதில்லை. மெல்லிய மூச்சுக் காற்று ஒலிக்க அவள் பதுமைபோல் அசங்காமல் தூங்கினாள். சபாபதி பூனைபோல் கூடத்து அலமாரி விளக்கைத் தூண்டி விட்டான். அதன் சுடர் எழுப்பும் ஒளியில் பொன்னைப் போல் அவள் முகம் மின்னியது.

தங்கத் தகட்டில் பதித்த சிவப்புக் கெம்புக் கல்லைப் போல் அவள் நெற்றிக் குங்குமம் ஒளிர்ந்தது.

வண்டு நுகராத மலருக்கு எத்துணை அழகு உண்டோ, அத்துணை அழகும் மீனாட்சியிடம் பொருந்தி யிருந்தது.

"ஆணுக்குத்தான் துறவு பூணும் சக்தி, திறமை யாவும் இருக்கிறதா? என் கடமைகளைச் செய்து கொண்டே, இதோ நானும் இரண்டு வருஷங்கள் துறவியாக வாழ்ந்து விட்டேன். வெற்றிப் பாதையில் முதல் கல் என்னால் சுலபமாகத் தாண்டப்பட்டு விட்டது பாருங்கள்" என்று கூறுவது போல் மீனாட்சி கம்பீரமாகப் படுத்திருந்தாள்.

தலைக்கு மேலாகச் சாய்த்து வைத்திருந்த அந்தக் கைகளின் வாளிப்பான தோற்றமும், அலை பாயும் கூந்தலின் அழகும் சபாபதியை மயக்கி விட்டன.

"மீனு!—மீனு!!" சபாபதியின் பிடிக்குள் அகப்பட்ட அவள் சிலிர்த்துக் கொண்டு எழுந்து நின்றாள்.

"என்ன?"

"என்ன, மீனு?"

"நான்...நான்...போய் விடுகிறேன். எனக்கும் உங்களுக்கும் ஒட்டாது."

"ஏன் மீனு இப்படி இருக்கிறாய்? வயது வந்த பெண் நீ கல்யாணத்தின்போதே நாலையும் யோசித்திருக்க வேண்டும்..."

சபாபதி அவள் பட்டுக் கன்னங்களில் பளீரென்று அறைந்தான்.

மீனாட்சி வாய் விட்டு அழவில்லை. கண்ணீர் கொப்புளிக்க அவனைப் பார்த்தாள்.

"நீங்கள்தான் யோசிக்கவில்லை. கல்யாணப் பெண்ணுக்கு இருக்க வேண்டிய மலர்ச்சியை என்னிடம் கண்டீர்களா? சொல்லுங்கள். ஒருதரமாவது உங்களை நான் ஏறிட்டுப் பார்த்தேனா? மணப்பந்தலில் நான் உட்கார்ந்திருக்கவில்லை. நானே அங்கு இல்லை. நான் அன்று கோதை கண்ட அரங்கனுடன் தெய்விக உலகில் உறவாடிக் கொண்டிருந்தேன்."

"மீனு!"

சபாபதி அவளைப் புரிந்துகொண்டு விட்டான்.

காலைப்பொழுது வெளுத்து வந்தது. சபாபதி பாட்டி சின்னம்மாளைப் போய்த் தனக்குச் சமைத்துப் போடுவதற்கு அழைத்து வந்தான்.

மீனாட்சி போய் விட்டாள். அவனை விட்டே அவள் விலகிப் போய் விட்டாள்.

* * *

மூலஸ்தானத்தில் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. பக்தியுடன் ஒரு பெண் அதற்கு எண்ணெய் ஊற்றி மெதுவாகத் தன் நுனி விரலால் சுடரைத் தூண்டுகிறாள். சுடர் கொழுந்து விட்டு எரிகிறது. தொலைவில் நின்று எரியும் சுடரைப் பார்க்கிறான் அவன். பிறகு பக்தியுடன் கும்பிட்டு விட்டு அவள் வெளியே செல்கிறாள்.

சபாபதி, தன் மனத்தின் புதிருக்கு விடை கிடைத்ததுபோல் அவள் செல்வதைப் பார்த்துக் கொண்டு நின்றான்.

"ஆம்! சுடர்க் கொழுந்தைத் தொலைவிலிருந்து பார்த்து வணங்கத்தான் முடியும்! அணுகினால் அந்த அழகே சுடும்" என்று அவன் வாய் முணுமுணுத்தது!

அத்தியாயம் 40

கூற்றத் தலைவர்கள் குறும்பு



பாண்டிமாதேவி

மகாராணியாரிடமும், மகாமண்டலேசுவரரிடமும் அவமானப்பட்டு, ஒப்புரவு மொழிமாறு ஓலை ஏற்றுக்கொள்ளப் படாமல் ஊர் திரும்பிய பொன்மனைக் கூற்றத்துக் கழற்கால்மாறனார் தம் குறும்புகளைத் தொடங்கினார்.

ஒரு மனிதன் தன்னிடம் இருக்கும் பண்புகளையும், செல்வத்தையும் கெடுத்துக் கொண்டு, தன்னையும் தீய வழிகளில் ஈடுபடுத்திக் கொள்கிற அளவு பொறாமை அவனைக் கெடுத்துவிடும்.

"அழுக்காறு எனஒரு பாவி திருச்செற்றுத்
தீயுழி உய்த்து விடும்."!

என்று குறளாசிரியர் பாடியதற்கு இலக்கியமாக மாறியிருந்தார் கழற்கால் மாறனார். தம்முடைய சதிக்கு உடந்தையான கூற்றத் தலைவர்களை மறுபடியும் பொன்மனைக்கு வரவழைத்தார் அவர். அருவிக்கரைக் கூற்றத்து அழியநம்பியார், பாகோட்டுக் கூற்றத்துப் பரிமேலுவந்த பெருமாள், தோவாழைக் கூற்றத்து நன்கணிநாதர், மூவரும் இரண்டாம் முறையாகப் பொன்மனைக்கு வந்தார்கள்.

கழற்கால் மாறனாருக்குச் செல்வாக்கைக் காட்டிலும் செல்வம் அதிகமாக இருந்தது. ஒளியும் அழகும் நிறைந்து ஊருக்கே தனிக் கவர்ச்சியூட்டிக் கொண்டிருக்கும் அவருடைய மாளிகைக்கே அந்த ஊரின் பெயரை இட்டுச் சொல்லலாம் போலிருந்தது. அத்தகைய ஒளி நிறைந்த மாளிகையில் கூடி இருள் நிறைந்த எண்ணங்களைச் சிந்தித்தார்கள் கூற்றத் தலைவர்கள்.

"நான் அப்போதே நினைத்தேன் பனங்காட்டு நரி சலசலப்புக்கு அஞ்சாது. இடையாற்றுமங்கலம் நம்பி நம்முடைய எதிர்ப்பை ஒரு பொருட்டாகவே மதிக்க மாட்டார் என்று முன்பே எனக்குத் தெரியும்" என்று பரிமேலுவந்த பெருமாள் பேச்சைத் தொடங்கினார்.

"அது பெரியமலை ஐயா! அதைச் சரிய வைக்க வேண்டுமானால் பூகம்பத்தைப் போல் வலிமையான பெரிய எதிர்ப்புக்கள் ஒன்றுகூடி வீழ்த்த வேண்டும். நாம் நான்கு பேர்கள் அந்த மலைக்கு முன் எந்த மூலைபோ?" என்றார் நன்கணிநாதர்.

"இப்படி வெளிப்படையாக ஒப்புரவு மொழிமாறு ஓலையைக் கொண்டு போய் மகாராணியாரிடம் கொடுத்து அவர் ஏற்றுக்கொள்ள மறுத்தது நமது பெரும் பலவீனம். நாம் யாரை எதிர்க்கிறோமோ, அவருக்கே நம்முடைய எதிர்ப்புத் தெரிந்து விட்டது. இப்படியெல்லாம் வருமென்று தெரிந்திருந்தால் வெளிப்படையாக எதையும்

நா. பார்த்தசாரதி

செய்யாமல் மறைமுகமான எதிர்ப்பு வேலைகளைச் செய்திருக்கலாம் நாம்'' என்றார் அழகிய நம்பியார்.

எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டே வீற்றிருந்த கழற்கால் மாறனுருக்கு எரிச்சல் எரிச்சலாக வந்தது. மகாமண்டலேசுவரரைப் பற்றி அப்போது யாராவது வாய் ஓயாமல் தூற்றிப் பேசினால் அவருக்கு ஆறுதலாக இருக்கும் போலிருந்தது. ஆனால் எல்லோருமே அவரைத் தூற்றுவதாக எண்ணிக் கொண்டு அவருடைய பெருமையை உயர்த்திப் பேசிக் கொண்டிருந்தார்கள். அந்தப் பேச்சினால்தான் அவருடைய மனத்தில் கொதிப்பு மூண்டது. கொதிப்போடு பேசலானார் அவர்:—''முதலில் மகா மண்டலேசுவரருக்கு வேண்டாதவர்கள் எல்லோரையும் நம்மோடு சேர்த்துக் கொள்ள வேண்டும். கட்சி கட்டிக்கொண்டு கிளம்பினால்தான் எதையும் திடமாக எதிர்க்க முடியும். தளபதி வல்லாளதேவனுக்கும், மகா மண்டலேசுவரருக்கும் ஏதோ சில பிணக்குகள் இருப்பதாகத் தெரிகிறது. தென்பாண்டி நாட்டின் படைத்துறையைச் சேர்ந்த வேறு சிலருக்கும் இதேபோல் அவர்மேல் ஒருவிதமான வெறுப்பு இருக்கும் போலும். அவற்றை யெல்லாம் நாம் சரியான முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.''

''மாறனாரே! நீங்கள் சொல்வது சரிதான். ஆனால் எனக்கு ஒரு சந்தேகம். தளபதி வல்லாள தேவன் மகாமண்டலேசுவரரை வெறுக்கிறான் என்பதற்காக நம்மை ஆதரிப்பான் என்று நாம் எதிர்பார்ப்பது தவறு. மகாமண்டலேசுவரர் என்ற பதவியையும், வளைந்து கொடுக்காத அறிவையும் தான் அவன் வெறுக்கிறான். நாமோ அந்தப் பதவியையும், அந்த மனிதரையும், அந்த அறிவையும் எல்லாவற்றையுமே வெறுக்கிறோம். வல்லாள தேவன் சூழ்ச்சிகளையும், அதிகாரத்தையும் எதிர்ப்பவனாக இருந்தாலும் கடமையையும், நேர்மையையும், ஓரளவு போற்றுகிறவனாக இருப்பான்'' என்று பரிமேலழகிய பெருமான் கழற்கால் மாறனாருக்கு மறுமொழி கூறினார்.

''நான் சொல்லுவது என்னவென்றால் எட்டுத் திசையிலிருந்தும் ஒரே குறியில் கூர்மையான அம்புகளைப் பாய்ச்சுவதுபோல் மகாமண்டலேசுவரர்மேல் எதிர்ப்புக்களையும், துன்பங்களையும் பாய்ச்ச வேண்டும். அவற்றைத் தாங்க முடியாமல் அவராகவே பதவியிலிருந்து விலகி ஓட வேண்டும்.''

''மாறனாரே! அவர் அப்படித் தாங்க முடியாமல் விலகி ஓடி விடுவாரென்று நீங்கள் நினைப்பதே பிழையான நினைவு. நாமெல்லாம் சில சந்தர்ப்பங்களில் விழித்துக் கொண்டிருக்கும் போதே தூங்கி விடுவோம். ஆனால் அவரோ தூங்கிக் கொண்டிருக்கும்



போதும் விழித்திருப்பவர். அவரை ஏமாற்றுவது அவ்வளவு எளிதில்லை'' என்று நன்கணிநாதர் மறுபடியும் மகாமண்டலேசுவரரின் புகழ் பாடத் தொடங்கியபோது குழற்காய் மாறனின் முகம் கருங்கிச் சிறுத்தது. அந்த முகத்தில் கடுமையான வெறுப்புப் பரவியது.

''முதல் காரியமாக எதிரியின் பெருமையைப் புகழும் இந்த சனத்தனம் நம்மிடமிருந்து ஒழிய வேண்டும்'' என்று உரத்த குரலில் எரிந்து விழுந்தார் பொன்மனைக் கூற்றத் தலைவர். அந்தக் குரலிலிருந்த வெறுப்பின் வேகம் மற்ற மூன்று பேரையும் நடுங்கச் செய்தது. மூன்று பேரும் தாங்கள் பேசுவதை நிறுத்திக் கொண்டு மௌனமாக இருக்கத் தலைப்பட்டனர். குழற்கால் மாறனும் அந்த மௌனத்தைத் தான் விரும்பினார். அம்மூன்று பேரும் தமக்கு அடங்கியிருந்து தாம் சொல்பவற்றை மட்டும் கட்டளைகளைப்போல் கேட்க வேண்டுமென்றே அவர் விரும்பினார். அவர்கள் பதில் சொல்வதையோ, சொந்த அபிப்பிராயங்களைச் சொல்வதையோ அவர் விரும்பவில்லை.

'' 'ஒப்புரவுமொழி மாறு ஓலையை ஏற்றுக் கொள்ள மாட்டேன்' என்று கூறியதுமே நாம் ஒத்துழையாமையும், எதிர்ப்பும் புரிவோம் என்பதை மகாராணியிடம் சொல்லி விட்டுத்தான் வந்தேன் நான். மகாமண்டலேசுவரரையும் அருகில் வைத்துக் கொண்டே முன்பு எனக்கு அளிக்கப்பட்டிருந்த 'தென்னவன் தமிழவேள் பாண்டிய மூவேந்த வேளார்' என்ற பட்டத்தையும், ஏனாதி மோதிரத்தையும், திருப்பியளித்து விட்டேன். அப்போது அந்த இடையாற்றுமங்கலத்து மனிதர் என்னைக் கேவலப்படுத்திப் பேசிய பேச்சுக்களை நினைத்தால் இப்போதுகூட என் இரத்தம் கொதிக்கிறது'' என்று சொல்லிக் கொண்டே வந்தவர் பேச்சை நடுவில் நிறுத்திக் கொண்டு அந்த மூன்று பேருடைய முகங்களையும் பார்த்துக் கொண்டார்.

பின்பு மேலும் தொடர்ந்து கூறலானார்:—''இனிமேல் மகா



மண்டலேசுவரருக்கு எதிராக நாம் செய்யவேண்டிய காரியங்களைச் சொல்கிறேன். தென்பாண்டி நாடு முழுவதும் பரவலாக அவர்மேல் ஒருவிதமான அதிருப்தி உண்டாகும்படி செய்ய வேண்டும். பாண்டிய மரபின் அரசுரிமைப் பொருள்கள் காணுமல் போனதற்கு மகா மண்டலேசுவரருடைய கவனக் குறைவுதான் காரணமென்று எல்லோரும் நினைக்கும்படி செய்ய வேண்டும். இளவரசன் இராசசிம்மன் நாட்டுக்கு வந்து மகாராணியாரைச் சந்திக்க விடாமல் அவனை எங்கோ கடல் கடந்து போகும்படி துரத்தியிருப்பவரும் அவர் தானென்று செய்தியைத் திரித்துப் பரப்ப வேண்டும். அவருடைய கவனக்குறைவால் தான் கொற்கையில் குழப்பம் விளைந்தது; அவருடைய கவனக்குறைவால் தான் பகைவர் படையெடுப்பு நிகழப் போகிறது; அவருடைய கவனக்குறைவால்தான் மகாராணியின் மேல் யாரோ வேலெறிந்து கொல்ல முயன்ருர்கள்; — என்று எல்லாச் செய்திகளையும் அவர்மேல் அதிருப்தி உண்டாக்குவதற்கு ஏற்ற விதத்தில் நாம் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். போர் ஏற்பட்டு அதற்காகப் படைவீரர்கள் திரட்டுவதற்கு நம்முடைய கூற்றங்களுக்கு மகாமண்டலேசுவரரின் பிரதிநிதிகளாக எவரேனும் வந்தால் படைவீரர்களை அவர்களோடு சேரவிடாமல் நாம் தடுக்க வேண்டும். இவ்வளவையும் செய்வதற்கு உரிய துணிவு நமக்கு ஏற்பட வேண்டும். அந்தத் துணிவு எனக்கு இருக்கிறது. உங்களுக்கும் இருக்கிறதா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்."

"மாறனரே! எங்களுக்கு அந்தத் துணிவு இதுவரையில் ஏற்படவில்லை. இப்போது நீங்கள் வற்புறுத்திச் சொல்கிறீர்கள். அதனால் நாங்களும் அந்தத் துணிவை ஏற்படுத்திக் கொள்கிறோம். போராடத் துணிந்த பின் தயங்கிக் கொண்டிருக்க முடியாதல்லவா?" என்று நிதானமாக மறுமொழி கூறினார் பரிமேலுவந்த பெருமான்.

"முடிந்தால் உங்களில் யாராவது ஒருவர் தளபதி வல்லாள தேவனையும் இரகசியமாகச் சந்தித்துப் பேசிப் பாருங்கள். அவனும் மகாமண்டலேசுவரரை எதிர்க்கும் ஒரு காரியத்திலாவது நம்மோடு சேருவானா, இல்லையா என்பது தெரிந்து விடும்" என்று கழற்கால் மாறனார் சொன்னபோது வேறு வழியின்றி ஒப்புக் கொள்கின்றாற் போல் அந்த மூன்று பேருடைய தலைகளும் மெல்ல அசைந்தன.

அன்று பொன்மனைக் கூற்றத் தலைவர் மாளிகையில் மற்ற மூன்று கூற்றத் தலைவர்களுக்கும் பிரமாதமான விருந்துபசாரம் நடைபெற்றது. நால்வகை உண்டிகளும், அறுசுவைப் பண்டங்களும், முக்கனிகளுமாக அப்பெருவிருந்தை உண்டபோது மற்ற மூன்று கூற்றத் தலைவர்களுக்கும் அந்த வயதான மனிதர் மேல் நன்றி சுரக்கத்தான் செய்தது. அவ்வளவு உபசாரங்களைச் செய்கிறவருக்காக நன்றியோடு உழைக்க வேண்டுமென்ற ஆவலும் எழுவது இயற்கைதானே? கழற்கால் மாறனாரைச் சில நாட்களாவது மகாமண்டலேசுவரர் பதவியில் இருக்கச் செய்து பார்க்க ஆசைப்பட்டார்கள் அவர்கள்.

அந்தக் கூட்டம் நடந்த சில தினங்களுக்குப் பின் சூரியோதயத்துக்கு முன் நாய்கள் குரைப்பது போல், ஒவ்வொரு கூற்றத்திலும் மக்கள் மதிப்புக்குரியவராயிருந்த மகாமண்டலேசுவரரைப் பற்றிக் குறும்புத்தனமான கெடுதல் பிரசாரங்கள் இரகசியமாக ஆரம்பமாயின.

அத்தியாயம் 41

காலப் பெருவெளியிற் சில கனவுப் பறவைகள்

எதிலும் மனம் பொருந்தாமல், எண்ணங்கள் ஓட்டாமல், அந்த அரண்மனைக்குள் அதே நிலையில் நாட்களைக் கடத்த முடியாது போல் தோன்றியது மகாராணி வானவன்மாதேவிக்கு. நான்கு புறமும் நீந்தி மீள முடியாதபடி பொங்கிப் பெருகும் வெள்ளப் பிரவாகத்தினிடையே அகப்பட்டுக் கொண்ட நீந்தத் தெரியாத மனிதனைப் போல் சிறுமை நிறைந்த சாமானிய மனிதக் குணங்களுக்கு நடுவே திகைத்து நின்ருர் அவர். அதுவும் கழற்கால் மாறனார் ஒப்புரவு மொழிமாறு ஓலையோடு வந்து பய

சென்னை காஸினோ, பிராட்வே, சயானி

மற்றும் தென்னாடெங்கும்




கரத்திற்கும்
உறுதிக்கும்
நிகரற்றது
ஹத்திபாயின்
தராசு மார்க்
ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்
பாத்திரங்கள்
உத்திரவாதமுள்ளவை
எப்பொழுதும் பிரகாசத்துடன் நீடித்து உழைப்பவை
★ ★ ★
ஹத்திபாய் துளஸிதாஸ் & ஸன்ஸ்
122, கன்ஸரா சால், பம்பாய் 2.

மூறுத்தி விட்டுப் போனதிலிருந்து மனத்தின் சிறிதளவு நிம்மதியையும் இழந்து தவித்தார் அவர். அரண்மனைக்கு வெளியே போய்க் கோவில், குளம் என்று விருப்பம்போல் சுற்றவும் முடியவில்லை. உள்ளேயும் நிம்மதியாக இருக்க முடியவில்லை.

"மாலையில புவனமோகினியையும் உடன் அழைத்துக் கொண்டு அரண்மனை நந்தவனத்தில் போய்ச் சிறிது நேரம் உலாவினார் மகாராணி. பூக்களையும், செடி கொடிகளையும் பார்க்கும் போதெல்லாம் மகாராணியின் மனத்தில் சற்றே உற்சாகத் தென்றல் வீசியது. ஒவ்வொரு பூவைப் பார்க்கும் போதும் ஒரு அழகான குழந்தையின் புன்முறுவல் பூத்த முகம் நினைவு வந்தது அவருக்கு. அடடா! அந்தப் பூக்களைப் பார்க்கும்போது இன்னும் எத்தனை எத்தனையோ நினைவுகள் அவர் மனத்தில் பொங்குகின்றனவே! எல்லையற்றுப் பரந்த பேருலகத்தில் அங்கங்கே மனித வாழ்க்கையில் தென்படும் சிறுமைகளைக் காணுந்தது போல் கண்டு அளவிலும், உருவிலும் அடங்காத இயற்கைப் பெருந்தாய் இப்படிப் பல்லாயிரம் பல்லாயிரம் மலர்களாக மாறி ஏளனச் சிரிப்புக்களை எங்கும் வாரி இறைக்கின்றாளோ? அவை வெறும் பூக்களல்ல! பிரகிருதியின் அர்த்தம் நிறைந்த புன்னகைகள்.

நந்தவனத்துத் தடாகத்தில் இருந்த சில பெரிய செவ்வல்லிப் பூக்களையும், மூடும் நிலையிலிருந்த கமலங்களையும் பார்த்தபோது மழலைமொழி பேசிக் கன்னங் குழியச் சிரிக்கும் குழந்தைப் பருவத்து இராசசிம்மனின் முகம் நினைவு வந்தது அவருக்கு. தடாகம் நிறைய மலர்ந்து தெரிந்த அத்தனை மலர்களும் குழந்தைப் பருவத்து இராசசிம்மனின் முகங்களாக மாறிச் சிரிப்பது போல் அவருக்கு ஒரு பிரமை ஏற்பட்டது. நெஞ்சத்து உணர்வுகளைக் கனிச்சாறாகப் பிழிந்து களிப்பூட்டும் அந்த இனிய பிரமையில் தம்மை முற்றிலும் மூழ்கச் செய்து கொண்டு பூக்களையே பார்த்தவாறு சிறிது நேரம் நின்றார் மகாராணி. புவனமோகினியும் அருகில் நின்றாள். அப்போது ஒரு பணிப்பெண் ஓடி வந்து, "தேவி! கோட்டாற்றிலிருந்து அந்தச் சமணப் பண்டிதர்கள் தங்களைத் தேடிக் கொண்டு வந்திருக்கிறார்கள்" என்று தெரிவித்தாள்.

"அவர்களையும் இங்கேயே நந்தவனத்துக்கு அழைத்துக் கொண்டு வா, அம்மா!" என்றார் மகாராணி.

☆ அருள் வாக்கு ☆

சில சமயங்களில் தினமும் ஒரே பொருளைப் பார்த்தாலும் பார்க்கப் பார்க்க அதைப் பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. சலிக்காத வஸ்துக்கள் சில இருக்கின்றன. குழந்தைகளுக்கு யானை அருகில் போக ரொம்ப பயம். ஆனால் தூர நின்று கொண்டு பிரதி தினமும் பார்க்கும். பார்த்தால் அலுக்காது. மற்றொன்று கடல். நீலக் கடலைப் பார்த்தால் அதில் வெண்மையாகத் தோன்றும் அலைகளை எத்தனை தரம் பார்த்தாலும் சலிக்காது. அது போல்தான் பௌர்ணமி சந்திரனும். பல முறைகள் பார்த்த போதும் திருப்தியே ஏற்படாது. அதே போல் படிக்கப் படிக்கத் திகட்டாதது கவிதை. அம்பிகையின் அருளால் தோன்றும் கவிதைகளை எத்தனை முறைகள் படித்தாலும் நித்திய ஆனந்தம் உண்டாகும்.

—ஸ்ரீ சங்கராச்சாரியார், காஞ்சி காமகோடி பீடம்

பணிப்பெண் போய் அழைத்துக் கொண்டு வந்தாள்.

"அடிகளே, வாருங்கள்! பயிர் வாடுகிற போதெல்லாம் தானாகவே வந்து பெய்கிற மழைமாதிரி வெளியே சொல்ல முடியாத ஊமைக் கவலைகளால் நான் துன்பப்பட்டுக் கொண்டிருக்கிற சமயங்களிலெல்லாம் நீங்கள் காட்சியளித்து எனக்கு நம்பிக்கையளிக்கிறீர்கள்" என்று அவர்களை வரவேற்றார் மகாராணி.

"துன்பத்தைப் போக்குவதற்கு நான் யார் தாயே? உலகில் பிறந்து வாழ்வதே பெருந் துன்பம். நடக்கத் தெரிகிற வரை எழுவதும் வீழுவதுமாகத் தள்ளாடும் குழந்தை போலப் பிறவியை வென்று விடையைப் பழகுகிற வரையில் பிறப்பும், வாழ்வும் துன்பங்களே தரும்.

"பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம்
பிறவார் உறுவது பெரும் பேரின்பம்
பற்றின் வருவது முன்னது, பின்னது
அற்றோர் உறுவது............"

என்று புலவர் சீத்தலைச் சாத்தனார் மணிமேகலைக் காப்பியத்தில் எவ்வளவு அழகாக இந்தத் தத்துவத்தைச் சொல்லியிருக்கிறார்!" என்று சொல்லிக் கொண்டே உடன் வந்த மற்றோர் துறவியோடு புல்தரையில் உட்கார்ந்தார் கோட்டாற்றுப் பண்டிதர். மகாராணியும், புவனமோகினியும் அதே புல்தரையில் சிறிது தூரம்

தன்னி அடக்க ஒடுக்கமாக அமர்ந்து கொண்டனர்.

"அந்தப்புரத்துக் கட்டடங்களுக்குள்ளேயே அடைந்து கிடக்கப் பொறுக்காமல் நந்தவனத்துக்கு வந்தேன், அடிகளே! நல்லவேளையாக நீங்களும் வந்தீர்கள். இன்று உங்களைக் காணும் பேறு கிட்டுமென்று நான் கனவிலும் எதிர்பார்க்கவில்லை."

"எங்கே அடைந்து கிடந்தால் என்ன அம்மா? இது சிறிய நந்தவனம். உலகம் பெரிய நந்தவனம். இங்கே செடிகளின் கிளைகளில் நாட்களை எல்லையாகக் கொண்டு பூக்கள் பூத்து உதிர்கின்றன. அங்கேயோ காலத்தின் கிளைகளில் விதியை எல்லையாகக் கொண்டு உயிர்ப் பூக்கள் பூத்து உதிர்கின்றன. இன்று உதிர்ந்துள்ள பூக்கள் நாளை உதிரப் போகும் பூக்களுக்கு உரமாகும். இந்த உயிர்ப் பூக்களின் நந்தவனத்தில் எதையும் நடுவாக நின்று பார்த்துக் கொண்டே நடந்து போய்விட வேண்டும். இல்லாவிட்டால் துன்பம் தான்!" என்று சிரித்துக் கொண்டே சொன்னார் கோட்டாற்றுப் பண்டிதர்.

"என்னைப் போன்றவர்களால் ஆசைகளையும், பாசங்களையும் சுமந்து கொண்டு அப்படி நடுவாக நடந்து போய்விட முடிவதில்லையே அடிகளே!"

"முடிகிற காலம் ஒன்று வரும் தாயே! அப்போது நானே உங்களைச் சந்தித்து நினைவூட்டுவேன். இன்று நான் இங்கே வந்தது உங்களைச் சந்தித்து உரையாடிக் கொண்டிருப்பதற்காக அல்ல. நானும் இதோ உடன் வந்திருக்கும் இந்தத் துறவியும் மறுபடியும் வடதிசையில் யாத்திரை போகிறோம். அதற்குமுன் உங்களிடம் ஒரு வார்த்தை சொல்லிக் கொண்டு போகலாமென்று வந்தேன்."

"அடிகள் திரும்ப எவ்வளவு காலமாகுமோ?"

"யார் கண்டார்கள்? நான் திரும்புவதற்குள் எங்கெங்கே எத்தனை மாறுதல்களோ? தாயே! எப்போதும் நாளைக்கு நடப்பதை எண்ணித் திட்டமிடுகிற வழக்கமே எனக்கு இல்லை. நீரின் வேகத்தில் விழுந்த துரும்பு போல் கால ஓட்டத்தில் என்னைத் தள்ளிக்கொண்ட பின் என்னை இழுத்துச் செல்ல வேண்டியது அதன் பொறுப்பு. நாளைய தினத்தைப் பற்றிப் பெரிதாக எண்ணுகிறீர்கள். அது உங்கள் நினைப்பைப் போல் இல்லாமலும் போகலாம்!" எதையோ சுருக்கமாக மறைத்துச் சொல்லிச் சிரிப்பவர்போல் சிரித்தார் அவர்.

"அடிகளே! இன்றைய தினத்தைப் பற்றி எனக்கு நன்றாகத் தெரிந்து விட்டது. அதனால் அதைப் பற்றி எண்ணுவதற்கு ஒன்றுமே மீதமில்லை. நாளைய தினம் தான் எனக்குத் தெரியாதது. என் கற்பனைகளுக்கு இடமளிப்பது. என் நினைவுகளைத் தாங்கிக் கொண்டு இன்பம் தருவது. நான் எப்படி அதை நினையாமல் இருக்க முடியும்?"


இந்தக் கேள்விக்கு அவர் பதில் சொல்லாமல் சிரித்தார். சிறிது நேரம் மௌனமாக இருந்தார். பின்பு விடைபெற்றுக்கொண்டு உடன் வந்தவரோடு திரும்பிப் போய் விட்டார். அந்தச் சில விநாடிகளில் இன்னதென்று புரியாத ஏதோ ஒரு பேருண்மையைத் தனக்குத் தெரியாமல், தனக்கு விளங்காமல், தானறிந்து கொள்ள முடியாமல் தன் மனத்தில் அவர் பதித்து விட்டுப் போய்விட்டது போல் மகாராணிக்கு ஒரு உணர்வு ஏற்பட்டு வளர்ந்தது.

இருட்டி நெடுநேரமாகி நந்தவனத்திலிருந்து திரும்பி இரவு உணவு முடித்துப் படுத்துக்கொண்ட பின்னும் அந்தச் சிந்தனை மகாராணியை விட்டு நீங்க மறுத்தது. முன்னும் பின்னும் தொடர்பற்ற பல சிந்தனைகள், பல முகங்கள், பலருடைய பழக்கங்கள் எல்லாம் அவருக்கு நினைவு வந்தன. கழற்கால் மாறனாரின் பதவி ஆசை, மகாமண்டலேசுவரரின் கம்பீரம், சுசீந்திரத்தில் சந்தித்த திருவாட்டாற்றுச் சோழியப் பெண்ணின் தாய்மை கனிந்த முகம், காந்தளூர் மணியம்பலத்தில் அந்த முதுபெரும் புலவர் மாணவர்களுக்குக் கூறிய அறிவுரை— எல்லாம் அவர் நினைவில் தோன்றி மறைந்தன. நினைவுகளின் வெள்ளத்தில் அவர் மனம் நீந்தத்தொடங்கியது.

நந்தவனத்துக் குளத்தில் பார்த்த செவ்வல்லிப்பூ சிறிது சிறிதாக விரிந்து வடிவு பெருகி ஒரு அழகிய ஆண் குழந்தையின் முகமாக மாறிச் சிரிக்கிறது. சிரித்துக் கொண்டே கொஞ்சம், கொஞ்சமாக மாறி வளர்ந்து அது ஒரு இளைஞனின் முகமாக விரிவடைகிறது. அந்த முகத்துக்குக் கீழே கைகளும், கால்களும், உடம்பும் உண்டாகி ஒரு வாலிபன் எழுந்து நிற்கிறான். அந்த வாலிபன் வேறு யாருமில்லை; குமாரபாண்டியன் இராசசிம்மன் தான்.

"அம்மா! உங்கள் எண்ணங்களை நான் நிறைவேற்றுவேனே, மாட்டேனே என்று கவலைப்படாதீர்கள். என்னுடைய வலிமை வாய்ந்த கைகள் அவற்றை நிறைவேற்றுவதற்காகவே இருக்கின்றன" என்று இராசசிம்மன் அருகில் வந்து கைகூப்பி வணங்கிக் கொண்டே சொல்லுகிறான்.

"குழந்தாய்! நான் அவநம்பிக்கையடைந்துவிடக் கூடாதென்பதற்காக நீ இப்படிக் கூறுகிறாய். நாளைக்கு நடக்கப்போவதைப் பற்றிச் சொல்ல உன்னால் எப்படி அப்பா முடியும்? அது உன் நினைப்பைப் போல் இல்லாமலும் போகலாம். உனக்குப் பல பொறுப்புக்கள் இருக்கின்றன. நீயோ ஒரு பொறுப்பும் நினைவில்லாமல் மனம்போன போக்கில் திரிந்துகொண்டிருக்கிறாய். முதலில் நீ தாய்க்கு மகனாக இருப்பதற்குத் தெரிந்து கொள்ள வேண்டும். பின்புநாட்டுக்கு அரசனாக இருப்பதற்குத் தெரிந்து கொள்ள வேண்டும். அதன் பின் ஒரு பெண்ணுக்கு நாயகனாக இருப்பதற்குத் தெரிந்துகொள்ள வேண்டும். அதற்கெல்லாம் அப்பால் குழந்தைகளுக்குத் தந்தையாகத் தெரிந்து கொள்ள வேண்டும். பிறந்தும் ஆண்டும் பெற்றும் பெறுவித்தும் முடிவது தான் வாழ்க்கை. தாயைக் கூடச் சந்திக்காமல் சுற்றிக் கொண்டிருக்கும் நீ பொறுப்புக்களை உணர்ந்து கொள்ளுவது எப்போது? பொறுப்புக்களை உணர்வதற்கே தெம்பில்லாத நீ அவற்றைச் சுமப்பது என்றைக்கோ? மகாமண்டலேசுவரர் நல்லெண்ணத்துடன் உன்னை இடையாற்றுமங்கலத்துக்கு அழைத்துவந்து இரகசியமாகத் தங்க வைத்தால் நீ அவர் கண்களிலேயே மண்ணைத் தூவி விட்டு அரசுரிமைப் பொருள்களைக் கடத்திக் கொண்டு போய்விட்டாய். இலங்கை, இலங்கை என்று நினைத்தபோதெல்லாம் அங்கே ஓடிவிடுகிறாய். அப்படி உனக்கு என்ன தான் வைத்திருக்கிறதோ அங்கே? காசிப மன்னன் உனக்கு வேண்டியவனாக இருக்கலாம். அதற்காக எப்போதும் அவன் நிழலிலேயே போய் ஒதுங்கலாமா? முயற்சியும் ஊக்கமும் உள்ள ஆண் மகனுக்குப் பிறருடைய நிழலில் போய் ஒதுங்குவது இழிவு அல்லவா? வெளியில் யாருக்கும் தெரியாமல் உன்னையும் அரசுரிமைப் பொருள்களையும் தேடி அழைத்து வருவதற்கு அந்தரங்கமாக ஏற்பாடு செய்திருப்பதாகமகாமண்டலேசுவரர் கூறினார். அதனால்தான் ஆசைகளையும், பாசங்களையும் மனத்திலிருந்து களைந்தெறிந்து அழித்து விடாமல் வைத்துக் கொண்டு இன்னும் காத்திருக்கிறேன். 'உலகம் உயிர்ப் பூக்களின் நந்தவனம்! அங்கே எல்லாவற்றையும் பார்த்தும் பார்க்காதது போல் நடுவாக நடந்து போய்விட வேண்டும்' என்று கோட்டாற்றுப் பண்டிதர் எனக்குச் சொல்லுகிறார். குழந்தாய்! உன்மேலும், உன் எதிர்காலத்தின் மேலும், நான் கண்டு கொண்டிருக்கும் கனவுகளாலும், நம்பிக்கைகளாலும அவருடைய தத்துவத்தைக்கூட என்னால் ஒப்புக்கொள்ள முடியவில்லை. அதற்காக மகாமேதையான அந்தப் பண்டிதரைக் கூட எதிர்த்து வாதம் புரிந்தேன் நான். நீ இங்கு இல்லாததால் அரசாங்கக் கவலைகளும் என்னிடமே வந்து சேர்கின்றன. உன்னைக் காண முடியாமல் படும் கவலைகளோடு சேர்த்து அந்தக் கவலைகளையும் நானே படவேண்டியிருக்கிறது. நம்முடைய மகாமண்டலேசுவரர் தென்பாண்டி நாட்டின் அறிவு வளத்துக்கும், சிந்தனைச் செழுமைக்கும் எடுத்துக் காட்டாகத் திகழ்பவர். பொறுமையின் காரணமாக அவரை அந்தப் பெரும பதவியிலிருந்து கீழே இறக்கி விடுவதற்குச் சிலர் முயற்சி செய்தார்கள். பொன்மனைக் கூற்றத்துக் கிழவர் ஒப்புரவு மொழி மாறு ஓலையோடு என்னிடம் வந்து மகா மண்டலேசுவரரைப் பற்றி என்னென்னவோ புறங் கூறினார். நான் ஏற்றுக் கொள்ளவில்லை. மகா மண்டலேசுவரரைப் பற்றி அவ்வளவு கேவலமாகப் புறங் கூறிய அந்தக் கிழட்டு மனிதர் அவரையே நேரில் பார்த்ததும் எப்படி நடுங்கிப் போனார் தெரியுமா? இராசசிம்மா! இடையாற்றுமங்கலத்துப் பெரியவருக்கு மட்டும் அந்த இணையற்ற ஆற்றல் இருக்கிறது. அவரை எதிர்ப்பவர்களும், வெறுப்பவர்களும்கூட அவ



ஜம்மியின் "லிவர்க்யூர்"

குழந்தைகளின் ஈரல் குலைக்கட்டி வியாதிகளுக்கு

மாதாந்திர விஜயம்

எமது வாடிக்கையாளர்களின் நலனையும் சௌகரியத்தையும் முன்னிட்டு எமது டாக்டர் கீழ்க்கண்ட இடங்களில் ஒவ்வொரு மாதமும் குறிப்பிட்ட தேதிகளில் விஜயம் செய்கிறார். அப்பொழுது அவரை நேரில் கலந்து ஆலோசிக்கலாம்.

இடம்	தேதி	நேரம்	விலாசம்
கரூர்	1	9 to 11 காலை	சென்ட்ரல் மெடிகல் ஸ்டோர்ஸ்
சேலம்	2	9 to 11 காலை 3 to 5 மாலை	சாந்திநிகேதன் (கோயமுத்தூர் வாட்ஜ், பிரான்ச்)
ஈரோடு	3	9 to 11 காலை	நவபவனம் வாட்ஜிங் (கோஷா ஆஸ்பத்திரிக்கு எதிரில்)
திருப்பூர்	3	3 to 5 மாலை	ஆர். எஸ். வாசன் & கோ. கெமிஸ்ட்ஸ்
கோயமுத்தூர்	4	9 to 11 காலை 3 to 5 மாலை	ஈஸ்வர் & கோ., (நாடார் மான்ஷன்) 189, ரங்கைய கவுடர் தெரு
பாலக்காடு	5	8-30 to 11-30 காலை	நாதம் & கோ., மெடிகல் ஷாப்
பொள்ளாச்சி	5	2-30 to 3-30 மாலை	எல். எஸ். மணி & கோ., மெடிகல் ஷாப்
உடுமலைப்பேட்டை	5	4-30 to 5-30 மாலை	ராஜேந்திரா & கோ. மெடிகல் ஷாப்
பழனி	5	6-30to7-30 இரவு	ஷண்முகானந்த பவன், ரயில்வே பீடர்ஸ்ரோடு
திண்டுக்கல்	6	9 to 11 காலை	வி. ஆறுமுகம் பிள்ளை & சன்ஸ் ஜெனரல் மர்ச்சண்ட்ஸ்
மதுரை	7,8 & 23	9 to 11 காலை 3 to 5 மாலை	டி. என். வி. நாகலிங்கம் பிள்ளை & சன்ஸ் கெமிஸ்ட்ஸ் வடக்கு சித்திரை வீதி
விருதுநகர்	9	8 to 9 காலை	சரவணமுத்துபிள்ளை சத்திரம், மதுரை ரோடு
கோவில்பட்டி	9	10-30 to 11-30 காலை	தனலக்ஷ்மி மெடிகல் மார்ட். கெமிஸ்ட்ஸ்
தூத்துக்குடி	9	3 to 4 மாலை	தூத்துக்குடி மெடிகல் ஸ்டோர்ஸ்
திருநெல்வேலி	10	9 to 11 காலை 3 to 5 மாலை	சந்திரவிலாஸ் ஹோட்டல் திருநெல்வேலி ஜங்ஷன்
நாகர்கோவில்	11	9-30 to 11-30 காலை	என். திரவியம் கெமிஸ்ட்ஸ் & டிரக்கிஸ்ட்ஸ்
ஸ்ரீவைகுண்டம்	11	4 to 5 மாலை	எஸ். கோமதிநாயகம் பிள்ளை, மெடிகல் ஷாப்
அம்பாசமுத்திரம்	12	9 to 11 காலை	கோமதி மெடிகல் ஸ்டோர்ஸ் கெமிஸ்ட்ஸ்
தென்காசி	12	3 to 5 மாலை	எஸ். கிருஷ்ணா & கோ. மெடிகல் ஸ்டோர்ஸ்
திருவனந்தபுரம்	13	9 to 11 காலை 3 to 5 மாலை	எம். வி. கணபதி ஐயர் & சன்ஸ், அட்டகுளங்கரை
ராஜபாளையம்	14	9 to 11 காலை	வி.எஸ். திருப்பதி ராஜா, ஜெனரல் மர்ச்சண்ட்
ஸ்ரீவில்லிபுத்தூர்	14	12-30 to 1-30	டி. பி. வி. டி. ஈ. சீதாராம கோனார் & கோ. பித்தளை பாத்திரம் வியாபாரிகள்
சிவகங்கை	14	4 to 5 காலை	மீனாட்சி & கம்பெனி. கெமிஸ்ட்ஸ்
காரைக்குடி	15	9 to 11 காலை 3 to 5 மாலை	ஏ. வி. & சன்ஸ் டிராவலர்ஸ் ரெஸ்ட் ஹவுஸ்
தேவகோட்டை	16	9 to 11 காலை	ஸ்ரீ மீனாட்சி ஸ்டோர்ஸ்
புதுக்கோட்டை	16	3 to 5 மாலை	வசந்தா வாட்ஜ்

●

ஜம்மி வெங்கடரமணய்யா & சன்ஸ்

சென்னை - திருச்சிராப்பள்ளி - கும்பகோணம்

ருடைய கண்களின் சால்பு நிறைந்த பார்வைக்கு முன்னால் அடங்கி ஒடுங்கி நின்று விடுகிறார்கள். பகைவரையும் பிணிக்கும் பேராற்றல் அந்தப் பார்வைக்கு இருக்கிறது. தென்பாண்டி நாட்டு அரசியலில் தொடர்புடைய எல்லோருக்குமே காரணமற்ற ஒருவகை அருவை மகாமண்டலேசுவரர் மேல் இருக்கிறது. குழந்தாய்! அவரைப் போல் ஒரு திறமையான மனிதர் இல்லாவிட்டால் உடனடியாக நேர் இருந்த வடதிசைப் பகைவர் படையெடுப்பைக் காலந்தாழ்த்திருக்க முடியாது. அவர் மகாமண்டலேசுவரராயிருக்கிற காலத்திலேயே நீ வந்து முடிசூட்டிக் கொண்டு பொறுப்பேற்றால் உனக்கு எத்தனையோ வகையில் பயன்படும். உலகம் நிலையாதது. நம்முடைய எண்ணங்களின்படியே எதுவும் நடப்பதில்லை,—என்பதையெல்லாம் நான் உணர்கிறேன் குழந்தாய்! ஆனால் உன்னைப் பற்றி நினைவு வரும்போது மட்டும் என்னால் அவற்றை நம்ப முடிவதில்லை. 'உலகம் நிலையானது! என் அருமைப் புதல்வன் இராசசிம்மனும் நானும் நிலையானவர்கள். என் புதல்வனைப் பொறுத்தவரையில் நான் எண்ணியிருக்கிறபடியே எல்லாம் நடைபெறும்'— என்றே நினைத்து வருகிறேன் நான். நீ என்னை ஏமாற்றி விடாதே."...... யாரோ கூப்பிடுவது போலிருந்தது.

"தேவி! இதென்ன? என்னென்னவோ பிதற்றுகிறீர்களே? நீங்களாகவே பேசிக் கொள்கிறீர்களே? உங்களுக்கு ஏதாவது உடல்நலக் குறைவு ஏற்பட்டிருக்கிறதா? ஒரு வேளை மாலையில் குளிர்ந்த காற்றுப் படும்படி நந்தவனத்தில் உலாவியது ஒத்துக் கொள்ளவில்லையோ?" என்று கேட்டுக்கொண்டே புவனமோகினி கட்டில் அருகே நின்றாள். மகாராணிக்கு நாணமாக இருந்தது. இராசசிம்மனிடம் பேச நினைத்தவைகளையெல்லாம் தூக்கத்தில் வாய் சோர்ந்து உளறி விட்டிருக்கிறோம் என்று அவருக்கு அப்போதுதான் புரிந்தது.

புவனமோகினி மகாராணிக்குத் துணையாகக் கட்டிலுக்குக் கீழே தரையில் பக்கத்தில் படுத்துக் கொண்டாள். மகாராணிக்கு மறுபடியும் கோட்டாற்றுப் பண்டிதர் கூற்று நினைவுக்கு வந்தது.

"நாளைக்கு நடப்பதைப் பற்றி இன்றைக்கே திட்டமிடாதீர்கள். நாளையதினம் என்பது இனிமேல் வருவது. நீங்கள் நினைக்கிற மாதிரி இல்லாமலும் போகலாம் அது!"

மகாராணியின் அறிவுமயமான உள்ளம் இந்தத் தத்துவத்தை ஒப்புக் கொண்டது. ஆனால் உணர்வு மயமான உள்ளமோ ஒப்புக் கொள்ள மறுத்தது. நாளை என்ற ஒன்று இல்லாவிட்டால் அப்புறம் இந்த உலகத்தில் என்ன இருக்கிறது? அறிய முடியாத உண்மைகளும், தெரிய முடியாத எதிர்காலமும், இருப்பதனால் அல்லவா வாழ்க்கை சாரமாக இருக்கிறது? தாம் சுமக்கின்ற பொருள்களின் உயர்வும், பெருமையும், தெரியாமல் குங்குமமும், கற்பூரமும் சுமக்கும் கழுதைகளைப் போல் வாழ்வதனால்தான் சாதாரண மனிதர்களால் வாழ்க்கையின் நாளைய தினங்களைக் கற்பனை செய்ய முடிகிறது."

—இப்படி என்னென்னவோ எண்ணிக் கொண்டு படுக்கையில் புரண்டார் மகாராணி. சிந்தனைகளைத் தனக்குச் சாதகமாகத் தன் எண்ணங்களுக்கு ஏற்றாற்போல் வளைத்துச் சிந்திக்கத் தொடங்கும்போது மனத்துக்கு ஒருவிதமான போலி உற்சாகம் மகிழ்ச்சி மயக்கமாக ஏற்படும். மகாராணியின் மனத்தில் அப்படி ஒரு உற்சாகம் அப்போது ஏற்பட்டிருந்தது. மறுநாள் பொழுது விடிந்ததுமே இராசசிம்மன் ஓடிவந்துவிடப்போகிற மாதிரியும் உடனே அவனுக்கு முடிசூட்டிக்கண்டு மகிழப் போவதாகவும், தன் மனம் கற்பனை செய்கிற எல்லா நிகழ்ச்சிகளுமே உடனே நடந்துவிடப் போவது போல் ஒரு மனநிலை ஏற்பட்டது. கண்களை விழித்துக் கொண்டே கட்டிலில் படுத்திருந்தவருக்கு எதிரே சிறிதாக மங்கலாக எரிந்து கொண்டிருந்த தூண்டா விளக்கின் சுடர் தெரிந்தது. இருட்டில் மலர்ந்த தங்கமலர் ஒன்றின் ஒற்றைத் தனி இதழ் காற்றில் அசைவதுபோல் கண்ணுக்கு அழகாகத் தெரியும் அந்தச் சுடரையே பார்ப்பது இன்பமாக இருந்தது மகாராணிக்கு. சுடரா அது? நெருப்புத் தாயின் பெண் குழந்தை. நெருப்பில் ஏதோ தெய்விக ஆற்றல் இருக்கிறது. அதனால்தான் அதை வணங்குவதற்கு ஏற்ற பொருளாக முன்னோர்கள் தேர்ந்திருக்க வேண்டுமென்று அவருக்குத் தோன்றியது. பார்த்துக் கொண்டிருக்கும்போதே அந்தச் சுடர் பெரிதாக எரிவது போல் அவருக்கு ஒரு தோற்றம் உண்டாயிற்று.

பயத்தால் அவர் முகம் வெளிறுகிறது. கண்களை மூடிக் கொள்கிறார். ஆருயிர்க் கணவர் பராந்தக பாண்டியரின் சிதையில் அடுக்கிய சந்தனக் கட்டைகள் எரிந்த காட்சியை அவர் கண்களில் அவருடைய விருப்பமின்றியே நினைவுக்குள் கொண்டு வந்து தள்ளுகிறது ஏதோ ஒரு சக்தி. எட்டுத் திசையும் புகழ் மணக்கச் செங்கோல் நடத்திய அந்த மாபெரும் உடலை நெருப்புச் சூழ்ந்தபோது. வானவன்மா தேவி நெருப்பைத் திட்டியிருக்கிறார். தெய்வங்கள் தன்னை வஞ்சித்து ஏமாற்றியதாகத் தூற்றியிருக்கிறார். 'அதே நெருப்பின் சுடரையா இப்போது தெய்வமாக எண்ணினேன்?' என்று நினைக்கும்போதே உடல் புல்லரித்தது அவருக்கு. கண்களில் தன்னுணர்வு இல்லாமலே ஈரம் கசிந்து விட்டது.

இப்படி ஏதேதோ சம்பந்தா சம்பந்தமின்றி நினைத்துக் கொண்டே தூங்கிப் போனார் மகாராணி. தூக்கத்தில் எத்தனையோ வேண்டிய-வேண்டாத கனவுகள் கவிந்தன. அகல நீளங்களுக்குள் அடங்காமல் விளிம்பும் வேலியுமற்றுப் பரந்து கிடக்கும் காலம் என்னும் பெருவெளியில் தம் கனவுப் பறவைகளைப் பறக்கச் செய்தார் மகாராணி.

'இராசசிம்மன் எட்டுத் திசையும் வெற்றிவாகை சூடித் திரிபுவன சக்கரவர்த்தியாகிறான். திருமணம் புரிந்து கொள்கிறான். அழகான ஆண் குழந்தை பிறக்கிறது. வானவன்மா தேவி தம் பேரனைக் கொஞ்சுகிறார். 'இராசசிம்மா! நீ குழந்தையாக இருந்தபோது சிரித்ததைப் போலவே உன் மகனும் சிரிக்கிறான்' என்று புதல்வனிடம் வேடிக்கையாகச் சொல்கிறார் மகாராணி. "அம்மா! என் மகனை என்னைக் காட்டிலும் பெரிய வீரனாக்கப் போகிறேன் பாருங்கள். ஈழத்தையும் கடாரத்தையும் கூட அவன் வென்று வாகை சூடுவான்" என்று மகனைப்பற்றிப் பெருமையடித்துக் கொள்கிறான் இராசசிம்மன்.

'செய்தாலும் செய்வான், அப்பா! வாளாலும் வேலாலும் வெல்வதற்கு முன் சிரிப்பாலேயே அவைகளை வென்றுவிடுவான் போலிருக்கிறது உன் மகன்' என்று புன்னகையோடு பதில் சொல்கிறார் மகாராணி.

இவ்வளவில் மகாராணி கண் விழித்தார். விடிந்து வெய்யில் பரவி வெகுநேரமாகியிருந்தது. படுத்த நிலையிலேயே கட்டிலில் கண்விழித்த அவர் பார்வையில் எதிரேயிருந்த அந்தத் தீபம்தான் பட்டது. அவர் திடுக்கிட்டார். அந்த ஒளியின் குழந்தை அணைந்து அழுது புகையாகி நாவிழைத்துக் கொண்டிருந்தது. நீராடிய ஈரக் கூந்தலோடு கையில் பூக்குடலையுடன் புவனமோகினி அப்போது அங்கே வந்தாள்.

"பெண்ணே! இன்றைக்கு இந்த அணையாவிளக்கு அணையும்படி விட்டு விட்டாயே? நீ பார்க்கவேயில்லையா?" என்று கேட்டார் மகாராணி.

"ஐயோ! அணைந்து விட்டதா? நான் பார்க்கவே இல்லையே?......" என்று பதறி அதை ஏற்றுவதற்காக ஓடினாள் வண்ணமகள்.

பிரமை பிடித்தவர் போல் சூனியத்தை வெறித்து நோக்கியபடி மறுபடியும் கட்டிலிலேயே உட்கார்ந்து கொண்டார் மகாராணி.


"இரவின் எண்ணங்கள் உற்சாகமாக, நம்பிக்கையளிப்பவையாக, விரும்பத்தக்கவையாக இருந்தன. பகல் விடிந்ததுமே ஒளியின்றிப் புகைகிறது" என்று மெல்லத் தமக்குத்தாமே சொல்லிக் கொண்டார் அவர். சாளரத்தின் வழியே நுழைந்த ஒளிக் கதிர்கள் நெற்றியில் படிந்து மினுமினுப்புக் காட்டின.

அன்றைய நாளின் விடிவு காலத்தின் வேகமான அலைகளில் தன்னை வேறொரு திசையில் இழுப்பதற்காக விடிந்ததுபோல் ஏதோ மனத்தில் அவருக்கு ஒரு குழப்பம் எழுந்தது. அப்போது கோட்டாற்றுப் பண்டிதர் பதில் பேசாமல் சிரித்து விட்டுப் போன அந்தச் சிரிப்பு அவருக்கு நினைவு வந்தது. முன்பொரு சமயம் அவர் ஓலையில் எழுதிக் கொடுத்து விட்டுப்போன பாட்டு நினைவு வந்தது.


"மகாராணி! வெய்யில் ஏறி வெப்பம் அதிகமாகிக் கொண்டே போகிறதே?" என்று ஒரு பணிப்பெண் கூறினாள்.

"ஆமாம்! 'வெப்பம்' அதிகமாகிக் கொண்டுதான் போகிறது" என்று அதே வார்த்தைகளை வேறு பொருள் தொனிக்கத் திருப்பிச் சொல்லிக் கொண்டே எழுந்திருந்தார் மகாராணி வானவன்மாதேவி.






திரு கே. ராஜகோபாலன் அவர்களின் புதல்வி சௌ. விமலாவுக்கும் திரு ஆர். சுந்தரராகவனுக்கும் திருமணம், வெகு சிறப்பாக நடந்தது.



ஸ்ரீ பி. ஏ. சங்கர சாஸ்திரி அவர்களின் புதல்வர் திரு பி. எஸ். சுந்தரத்துக்கும் சௌ. சுலோசனாவுக்கும் சமீபத்தில் விவாகம் நடைபெற்றது.


வாழ்க




திரு கே. வி. ராஜகோபாலாச்சாரியார் குமாரர் திரு கே. வி. சாரங்கபாணிக்கும் சௌ. சரோஜாவுக்கும் திருமணம் நடந்தேறியது.




சினிமா சங்கீத டைரக்டர் திரு ஜி. ராமநாதன் அவர்களின் புதல்வி சௌ. சாவிதேவியைத் திரு வி. சங்கரன் பி. ஏ. கல்யாணம் செய்து கொண்டார்.




திருக்கோவலூர் எம். சேஷாசலய்யர் புதல்வி சௌ. மரகதத்துக்கும் திரு வெஙராம கிருஷ்ணனுக்கும் விவாகம் விமரிசையாக நடைபெற்றது.



எழுத்தாளர் பாரதனுக்கும் சௌ. கிருஷ்ணம்மாளுக்கும் திருச்சியில் வெகு சிறப்பாகத் திருமணம் நடந்தது.




திரு ஆர். நாராயணசுவாமி அவர்களின் மருமான் செள. கமலாவுக்கும் திரு ஆர். சீனிவாசனுக்கும் குடந்தையில் விவாகம் நடைபெற்றது.




திரு ஆர். நரசிம்மன் அவர்களின் சகோதரி செள. கமலாவுக்கும் திரு கே. என். ராஜகோபாலனுக்கும் திருமணம் சிறப்பாக நடந்தது.


மணமக்கள்




பாலக்காடு வி. என். நாராயணய்யர் புதல்வர் திரு வி. என். சுப்பிரமணியனுக்கும் செள. ஜானகிக்கும் விவாகம் விமரிசையாக நடைபெற்றது.



சென்னை அட்வகேட் திரு வி. ஆர். நாராயணன் அவர்களின் புதல்வி செள. லக்ஷ்மிக்கும் திரு கிருஷ்ணசாமிக்கும் கல்யாணம் நடந்தது.



திரு பி. என். சண்முகசுந்தரம் அவர்களின் சகோதரி நாகஷயனிக்கும் திரு வி. வி. விசுவநாதனுக்கும் திருமணம் அதிவிமரிசையாக நடைபெற்றது.



திரு டி. வி. சாமிநாதனின் சகோதரர் புதல்வரும் எழுத்தாளருமான திரு ஜம்புநாதன் செள. கமலாதேவியை மணம் புரிந்து கொண்டார்.


எழிலுடன் திகழ...
சந்திரகாந்தா
ரெமி
அழகு சாதனங்கள்
AVRA-592

கடற்கரைக் காரிகை

எஸ்.ஷார்லி



அமைதியற்ற நிலையில் படுக்கையில் புரண்டு கொண்டிருந்தான் ராஜு.

'டிங்...... !'

ராஜு சுவர்ப் பக்கம் திரும்பிப் பார்த்தான். கடிகாரம் ஒரு மணி ஆனதைக் காட்டிக் கொண்டிருந்தது. அவன் நெடு மூச்செறிந்தான்.

'...இன்னும் மூன்று மணி நேரம்... !'

மூன்று நாட்களாகப் பல்லைக் கடித்துப் பொறுமையை மேற்கொண்டிருந்த அவனுக்கு இந்த மூன்று மணி நேரம் மூன்று யுகங்களாகத் தோன்றியது. படுக்கையில் இருப்புக் கொள்ளவில்லை. அறைக்குள் உலவத் தொடங்கினன்

'......இந்த மனசுக்குத்தான் எத்தனைபேராசை! எவ்வளவு பைத்தியக்கார நினைவுகள்! உலகம் தோன்றிய நாளாய்க் கேள்வி அளவிலே கூட இல்லாத ஒன்று, இன்று எனக்காக நிகழ்ந்து விடுமா...? கல்யாணி...! அவள் போனவள் போனவள்தான் !......இது... இவள்......வேறு யாரோ என்னவோ...!'

மனத்தில் உருளும் எண்ணங்களின் தன்மைகளுக்குத் தக்கவாறு, உலவிக் கொண்டிருக்கும் அவன் கால்களும் வேகமாகவும் மெதுவாகவும் இயங்கிக் கொண்டிருந்தன, ஒரே பாட்டின் பல்வேறு சந்தங்களுக்கு ஏற்ப மாறிமாறி அமைந்த தாள கதிகளைப் போல.

'...ஆனல், நான் முட்டாள் இல்லை. அவளை அன்று அறிந்த யாரும் இவளைப் பார்த்தால், 'இவள் அவளேதான்' என்று சத்தியமே செய்வார்கள். ஈசுவர சிருஷ்டியில் இப்படிக்கூட ஓர் ஒற்றுமை! நம்ப முடியாத ஆச்சரியம் !'

கட்டிலுக்கு எதிரே சுவரில் மாட்டியிருந்த படத்தின் முன்னே போய் நின்முன். அவனும் அவளும் கூடி ஓர் ஆண்டு இன்ப வாழ்வில் திளைத்ததற்கு ஒரே ஓர் அடையாளம் அந்தப் படம்தான். அவள் மறைவுக்குப் பின் அவன் அதை மிகப் பெரிய அளவில் 'என்லார்ஜ்' செய்து, எந்நேரமும் கண்ணிலே படுமாறு கட்டில் எதிரே மாட்டிக் கொண்டிருந்தான். அடிக்கடி அதன் முன்னே சென்று நின்று மௌனமாகக் கண்ணீர் வடிப்பான்; புலம்புவான். தன் நிலை கண்டு படத்திலுள்ள அவள் உருவமும் கண்ணீர் வடிப்பது போல் அவனுக்குத் தோற்றும்.

ஐந்து ஆண்டுகளுக்கு முன் ஒருநாள் மாலை. ராஜு அடுத்த வீட்டுச் சிறுவன் தங்கமணியுடன் கடற்கரைக்குச் சென்முன். அவ்விடத்தை அடைந்ததும் இருவரும் அவரவர் அலுவலில் ஈடுபட்டனர்; தங்கமணி மணற்பரப்பில் ஆடி ஓடிப் பந்து விளையாடத் தொடங்கினன்; ராஜு தவ நிலையை மேற்கொண்டு தன்னை மறக்கத் தொடங்கினன். இது அன்றைக்குப் புதிதல்ல; என்று அவன் அவளை அந்த இடத்திலே முதன் முதலாகப் பார்த்தானே, அன்றிலிருந்து தொடர்ந்த செயல்.

"மாமா... ! ராஜு மாமோவ்... !" என்று கண்ணைக் கசக்கிக் கொண்டு அவனிடம் வந்தான் தங்கமணி. பந்து அந்தப் பெண்ணின் பக்கம் சென்றதையும், அவள் அதை எடுத்து வைத்துக்கொண்டு சிரித்ததையும் அவன் பார்த்திருந்தான்.

"வாங்கித் தா, மாமா !" சிறுவன் அவள் பக்கம் கை நீட்டிக் காட்டிச் சிணுங்கினன். ராஜு எழுந்து அவளிடம் சென்முன்.

"ப...ந்...தா !" அவள் கண்கள் புரிந்த ஜாலம் அவன் உள்ளத்தைக் கிறுகிறுக்கச் செய்தது. சற்று நேரத் தத்தளிப்புக்குப் பின் மறுபடியும் பேசினன்.

"நானும் சிறுவன் இல்லை, விளையாடுவதற்கு. தயவுசெய்து பந்தைக் கொடுத்து விடுங்கள்."

அவள் இனிப்பும் கடுமையும் கலந்த குரலில் சொன்னுள் :

"உங்களோடு நான் ஏன் விளையாடுகிறேன் ?" - இப்படிச் சொல்லிக் கொண்டே 'சட்'டென்று எழுந்தவள் இரண்டடி பின்வாங்கி நின்முள்.

"அட ! உங்களிடம் இல்லையா ? பின் அது எங்கேதான் போயிற்று ?"

"நான் அதை அப்போதே அவன் இருந்த திசையில் வீசி விட்டேன். மறு படியும் அவன் எங்கே வீசினுனே!"

இருவரும் அந்தத் திசையில் நோக்கினார்கள்.

"அதோ!..." என்று வேகமாக நடந்தான் ராஜு. பந்தை எடுத்துச் சிறுவனிடம் தந்தான். மீண்டும் அவளிடம் வந்து, "மன்னிக்க வேண்டும்" என்றான்.

அவள் பதில் சொல்லவில்லை. மணலைக் கிளறியபடி ஓரக் கண்ணால் அவனை அளவிட்டாள்.

"நீங்கள் செந்தாமரை வித்தியாலயத்திலேதானே ஆசிரியை வேலை பார்த்து வருகிறீர்கள்?"

பேசின வாய் நில்லாது என்பதற்கு இணங்க, மாதக் கணக்கில், எட்ட இருந்து கண்ணால் பேசிக் கொண்டிருந்த அவர்களிடையே, சிறுவனின் பந்து ஒரு காரணமாகி உறவில் நெருக்கத்தை உண்டுபண்ணி வைத்தது.

அன்று முதல் அவர்களிடையே தினசரிச் சந்திப்பும் கலகலவென்ற பேச்சும் நிரந்தரமாயின. அது மட்டுமா? இருதரப்பிலும் தட்டிப் பேச எவரும் இல்லாத நிலை, விரைவில் அவர்களைத் தம் பதிகளாகவும் ஆக்கி வைத்தது.

ஒரு நாள் கல்யாணி இப்படிக் கொஞ்சினாள், கெஞ்சினாள். அவன் காரணம் கூறி மறுத்தான். நாளுக்கு நாள் அவள் இடையறாமல் வற்புறுத்தலானாள். கடைசியில் அவன் இணங்கினான். அடுத்த முறை வியாபாரத்தை முன்னிட்டுக் கிளம்பியபோது அவளையும் அழைத்துச் சென்றான்.

ஆகா! அவன் உள்ளம் கொண்ட களிப்பு! மேல்தட்டிலே அவனோடு நின்று அவன் தோள்மீது இரு கைகளையும் கோத்து முகத்தைச் சாய்த்துக் கடற்பரப்பைப் பார்த்து இரசித்தபோது, அவள் மனம் அடைந்த ஆனந்தம்!

'எதுவும் நிலை இல்லை; உன் இன்பமும் நிலை இல்லை' என்று இயற்கை கூறியதை அந்தப் பேதை எப்படி அறிவாள்?

ஜன்னி வேகத்திலும் கொடியதாகத் தொடங்கிய கடலின் கொந்தளிப்பு அனைவரையும் ஒரு நொடியில் கண் கலங்க அடித்து விட்டது. தப்பிப் பிழைக்க வகை தேடக்கூட அவகாசம் அற்ற நிலையில் அது தன் கோரச் செயலைப் புரிந்து விட்டது! அழிவு! அழிவு!!

உயிர் தப்பிய ஒரு சிலருள் ராஜுவும் ஒருவன். ஆனால் தெளிவுபெற்று அனைத்தையும் உணர்ந்தபோது, 'நான் ஏன் பிழைத்தேன்?' என்றுதான் அவன் மனம் ஆயாசமுற்றது.

கல்யாணியைப் பற்றித் தகவலே இல்லை என்றதும், தானும் இறந்துவிட வேண்டும் என்று அவன் ஆசைப்பட்டான். அது நடக்கக் கூடியதா?

ஊரவர் உதவியால் உரிய இடம் சேர்ந்த அவன் நானடைவில் நடைப்பிணமாக வளைய வரலானான். அந்த ஊர், அந்த வீடு, அதில் உள்ள பொருள்கள் அனைத்தும் கசந்தன. இரவு பகல் எந்நேரமும் அவள் நினைவு தவிர வேறு நினைவின்றி ஊமையாய், உன்மத்தனாய் இருந்தான்.

பெண்ணைப் பெற்றவர் பலர் அவனைச் சூழ்ந்து வட்டமிடத் தொடங்கினர். பலன் அனைவருக்கும் ஏமாற்றமே. இந்நிலையில் நாலு ஆண்டுகள் நகர்ந்து மறைந்து விட்டன.

ராஜுவின் உயிர் நண்பன் ராமு. அவன்தான் தக்க முறையில் ஆறுதல் சொல்லி ராஜுவின் மனப் புண்ணைச் சிறுகச் சிறுக ஆற்றி வருபவன். அந்தக் கைய நண்பனுக்குக் கல்யாணம். ராஜு எவ்வளவோ மறுத்தும் நிர்ப்பந்தமாக அவனை ராமு உடன் அழைத்துச் சென்றான். பைத்தியம் போல் அங்கே ஒரு மூலையில் உட்கார்ந்துகிடந்தான் ராஜு.

மாலை நேரம் ராஜுவுக்கு வைபவ இல்லத்தில் இருப்புக் கொள்ளவில்லை. சூழ்நிலையும் நிகழ்ச்சிகளும் அவனை என்னவோ செய்தன. காலாற எங்கேயாவது போய் வரலாம் என்று கிளம்பினான். எங்கெங்கோ சுற்றி விட்டு அஸ்தமன வேளைக்குக் கடற்கரையை அடைந்தான். அந்த இடம் மக்கள் புழங்கக் கூடிய துறை அல்ல; துறை வேறு இடத்தில் இருந்தது. அதனால் அங்கே ஜனநடமாட்டம் இல்லை. அப்போதைக்கு அந்த இடம்தான் ராஜுவின் மனத்துக்கு உவந்ததாக இருந்தது. ஓர் இடத்தில் உட்கார்ந்து கடற்பரப்பை அவன் நோக்கலானான்.

'...இப்படியே நான் உட்கார்ந்து கொண்டிருக்க வேண்டும். கடலில் வெகு தொலைவுக்கப்பால் ஓர் உருவம் தெரிய வேண்டும். வர வர அது அலைகளின் வழி மிதந்து அண்மையில் வரவேண்டும்; கரை ஏற வேண்டும்; என்னை நோக்கி வரவேண்டும். 'கல்யாணி!' என்று நான் கூவுவதற்குள், 'ஏன் இங்கே உட்கார்ந்திருக்கிறீர்கள்? எழுந்து வாருங்கள், வீட்டுக்குப் போகலாம்' என்று அவள் என்னுடைய கையைப் பற்ற வேண்டும்'.

இப்படி அவன் நினைப்பது அன்று புதிதல்ல. அவளை இழந்த நாள் முதல் ஒவ்வொரு மாலையிலும், சில சமயம் காலையிலும்கூடக் கடற்கரையில் போய் அமர்ந்து இவ்வாறு எண்ணமிட்டு ஏங்குவதே அவன் வேலை.

அன்றும் அதே நினைவுகளைத்தான் அசை போட்டுக் கொண்டிருந்தான். இருள் பரவிக் கொண்டிருந்தது. தற்செயலாக வலப்புறம் திரும்பினான். சிறிது தூரத்தில் ஓர் உருவத்தைக் கண்டான். பெண் உருவம். 'பைத்தியமா, என்ன? ஜனநடமாட்டம் அற்ற இடத்தில், இருள் மூடும் நேரத்தில், தன்னந் தனிமையில் அலைக்கரை விளிம்பில் தற்கொலை முயற்சியோ?...'

அவன் எண்ணம் முடிவடையவில்லை; பேரிரைச்சலுடன் பெரிய அலை ஒன்று பாய்ந்து வந்தது; அவள்மீது மோதியது. அதன் ஆக்கிரமிப்பில் அவள் நிலை தடுமாறித் தத்தளித்தாள்.

அடுத்த கணத்தில்....

அவள் எங்கே?

அவன் எழுந்தான்; ஓடினான்; ஓட முடியவில்லை. உடம்பில் வலு இல்லை. பிரயாசைப்பட்டு ஓடினான்.

அலைகள் அந்தப் பெண் உருவத்தைப் புரட்டி எடுத்துக் கொண்டிருந்தன. ராஜு பாய்ந்தான். அவளைப் பற்றினான். கஷ்டப்பட்டுக் கரை சேர்த்தான்.

நன்றாக இருட்டி விட்டது. அவள் நினைவை இழந்திருந்தாள். உதவிக்கு வகை இல்லை; அதனால் யோசித்துப் பயன் இல்லை என்று உணர்ந்த அவன் அவளைச் சுமந்துகொண்டு மணற்பரப்பைக் கடக்கலானான். நடு நடுவே களைத்துக் களைத்து நின்று ஒருவாறு நெடுஞ்சாலையை அடைந்தான். வெளிச்சத்தில் அவள் முகத்தைப் பார்த்ததும், "ஆ!" என்று வீரிட்டான். ஆம், அந்தப் பெண்ணிடம் கல்யாணியின் சாயல் அப்படியே பதிந்திருப்பதாக அவனுக்குப் பட்டது. இப்படியும் அப்படியும் உற்று உற்றுப் பார்த்துக் கொண்டே இருந்தான். அவன் பிரமை தெளிய வகையே இல்லை.

வண்டி ஒன்று வந்தது. அதில் அவளை ஏற்றிக் கொண்டு ஆஸ்பத்திரிக்குச் சென்றான். நடந்ததை அப்படியே கூறி அவளை அங்கே ஒப்படைத்தான்.

அன்றிரவு அவன் கண் மூடவே இல்லை.

மறுநாள் அவளைக் காண ஆஸ்பத்திரிக்குச் சென்றான். 'நோயாளியின் நிலை கவலைக்கு இடமாக இருக்கிறது; அநுமதி இல்லை' என்று சொல்லிவிட்டார்கள். அதற்கு மறுநாளும் அதே பதில்தான். 'உடல் நிலை, மூளையின் நிலை எல்லாம் சேர்ந்து உயிரையே மாய்த்து விடக்கூடிய கட்டம்' என்றார்கள்.

மூன்றாம் நாள் திருப்திகரமான பதில். 'நோயாளியிடம் தெளிவு தோன்றியிருக்கிறது. இனிக் கவலை இல்லை. எனினும் நாளைக்குத்தான் பார்க்க அநுமதி கிடைக்கும்' என்றார்கள். நாள் செல்லச் செல்ல அவளைக் காணும் ஆவலால் அவன் உள்ளம் துடியாய்த் துடித்தது. இப்போது அவன் ஆஸ்பத்திரிக்குத்தான் கிளம்பிக் கொண்டிருக்கிறான். அந்த நிலையிலேதான் அவன் புலம்பித் தவித்தான். உரிய நேரம் வந்ததும் அவன் புறப்பட்டுச் சென்றான்.

* * *

"எப்போது உள்ளே செல்வதற்கு அநுமதிப்பார்கள்?"

ஆஸ்பத்திரியின் வெளி வராந்தாவில் நின்று கொண்டிருந்த பழுத்த சுமங்கலி இப்படிக் கேட்டாள். ராஜு கைக்கடிகாரத்தைப் பார்த்து விட்டு, "இன்னும் இருபது நிமிஷத்தில்" என்றான். பிறகு பெருமூச்செறிந்தான்.

கிழவி கேட்டாள்: "உங்களுக்கு வேண்டியவர்கள் யாராவது உள்ளே இருக்கிறார்களோ?"



"ஆமாம்!" ராஜு மறுபுறம் திரும்பிக் கொண்டான்.

கிழவி ஓயவில்லை. "எங்கள் பெண் இங்கே இருக்கிறாளாம். நிச்சயமாகத் தெரியாது. கேள்விதான் அவளுக்கு மூளை சரியில்லை அடிக்கடி சமுத்திரக் கரைக்குப் போய் விடுவாள்"

"என்ன! உங்கள் பெண்ணா? பெயர்?"

"ஜானகி."

"ஓகோ! சரிதான்."

'இந்த அம்மாள் குறிப்பிடுகிற பெண் வேறு' என்று ராஜு எண்ணிக் கொண்டான். கிழவி மறுபடியும் பேசினாள்:

"இதற்காகவே நாங்கள் இருவரும் எப்போதும் அவளைக் கட்டிக் காத்துக் கொண்டிருப்பது வழக்கம். பொல்லாத வேளை பாருங்கள், நாலாம் நாள் சாயங்காலம் கொல்லைப்புறம் போன இவர் அங்கே இசைகேடாக விழுந்துவிட்டார்.

நான் போய் இவரைக் கைத்தாங்கலாகக் கொண்டுவந்து மாட்டுக் கொட்டடத்தில் கிடத்தி, வேண்டியதைச் செய்து முடித்து விட்டு, உள்ளே வந்து பார்த்தால் ஜானகியைக் காணவில்லை. தெருவிலே உள்ள அத்தனை வீடுகளிலும் புகுந்து புறப்பட்டுத் தேடி முடிப்பதற்குள் நன்முக இருட்டிவிட்டது. அதற்கு மேல் ஒன்றுமே செய்ய முடியவில்லை. மறுநாள் காலையிலிருந்து உச்சிப்போது வரையில் சமுத்திரக் கரைப் பக்கமெல்லாம் போய்த் தேடி அலுத்தேன். ஒரு பலனும் இல்லை.

"இன்று காலையில் அடுத்த வீட்டு மாப்பிள்ளை வெளியூர் அலுவல் முடிந்து வந்தார். நாலாம் நாள் சாயங்காலந்தான் அவர் ரயிலுக்குப் போனுர். பஸ்ஸிலே போய்க் கொண்டிருக்கிறபோது, இந்த ஆஸ்பத்திரி வாசலில் யாரோ ஒருவர் பிரக்ஞையில்லாத ஒரு பெண்ணை வண்டியிலிருந்து இறக்கி உள்ளே கொண்டுபோனதைப் பார்த்ததாகவும், அந்தப் பெண்ணைப் பார்த்தால் ஜானகியைப் போல் இருந்ததென்றும் சொன்னுர். அதனுல்தான் இங்கே வந்து காத்திருக்கிறோம். எல்லாம் சபலந்தான்."

இதைக் கேட்டதும் ராஜுவுக்கு நம்பிக்கை போய் விட்டது. நிராசையுடன் வீட்டுக்குப் போகப் புறப்பட்டான். ஆனுல் சிறிது தயக்கம் ஏற்பட்டது.

'அவள் கல்யாணியாக இல்லாவிட்டால் போகட்டும்; நம்மால் காப்பாற்றப்பட்ட பெண் நல்ல நிலையை அடைந்து விட்டாளா என்று நாம் நேரில் பார்த்துத் தெரிந்துகொள்ள வேண்டாமா? அது நம் கடமை இல்லையா?'

மறுபடியும் திரும்பி நடந்தான்.

கிழவியின் புலம்பலுக்குக் கிழவர் பதில் சொன்னுர்:


"அதற்கு நாம் என்ன செய்வது? பகவானுகப் பார்த்துக் கொடுத்தது; அவனே அபகரித்துக் கொண்டானுனுல் நம்மால் என்ன செய்ய முடியும்? கடலிலே கிடைத்தது; கடலிலேயே போயிற்று என்று நாம் இருக்க வேண்டியதுதான்."

இந்தப் பேச்சை அட்டையாகக் கேட்டுக் கொண்டிருந்த ராஜு, கிழவரின் கடைசி வார்த்தைகளைக் கேட்டதும், பாய்ந்து அவர்களிடம் சென்றுன்.

"என்ன என்ன? என்ன சொன்னீர்கள்? ஜானகி உங்கள் சொந்தப் பெண் இல்லையா?"

"உம். அது ஒரு பெரிய கதை" என்றுர் கிழவர்.

கிழவி சொன்னுள்: "எங்களுக்கு ஒரே பெண். அவள் பெயர் ஜானகி. இரண்டு



"என்ன, அந்த அப்பாவி மனுஷனுக்குப் பின்னாலே இத்தனை பெரிய மனுஷர்களும் பல்லை இளிச்சுக்கிட்டு வர்றாங்க?"

"அந்தப் பெரிய மனுஷர்களெல்லாம் இந்த அப்பாவி மனுஷனிடம் பல்லை இளிக்கிறது, அவர் குடும்பத்தில் இருக்கிற பதினாறு வோட்டுக்காகத்தான். எல்லாரும் ஒரே வட்டத்திலே எலெக்ஷனுக்கு நிக்கிறாங்க!"

குழந்தைகளை விட்டுவிட்டு அவள் கண் மூடி விட்டாள். "நாலு வருஷங்களுக்கு முன் தாராமங்கலம் போயிருந்தோம். அங்கே என் தங்கை வீட்டில் இந்தப் பெண்ணைப் பார்த்தோம். "சில நாட்களுக்கு முன் அந்த ஊருக்கு அருகில் நடந்த கடல் விபத்தில் அந்தப் பெண் கிடைத்தாளாம். செம்படவர்கள் கட்டுமரத்தில் கொண்டு வந்தார்களாம். ஒருநாள் முழுவதும் பிரக்ஞையே இல்லையாம். அப்புறமும் பேச்சு வரவில்லையாம். எப்பொழுது பார்த்தாலும் மலங்க மலங்க விழிப்பாளாம். சில சமயம் அழுகை. உணவும் இல்லை. உறக்கமும் இல்லை. மொத்தத்தில் ஏதோ மூளைக் கோளாறு என்று தெரிந்தது.

"இந்தப் பெண்ணை நான் அழைத்துக் கொண்டு போகிறேன் என்றேன். தாராளமாக அழைத்துக்கொண்டு போ. ஆனுல் இவளால் உனக்கு உபத்தரவந்தான் என்றுள் என் தங்கை.

"அழைத்து வந்து கிட்டத்தட்ட ஒரு வருஷகாலம் வரை வைத்தியம், மாந்திரீகம் என்று என்ன என்னவோ முயன்றேம். இது தெளியாது என்று எல்லாரும் சொல்லி விட்டார்கள். என்ன கேட்டாலும் பதில் இல்லை. பல தடவைகள் பல வந்தம் செய்தால் எப்போதாவது துளி ஆகாரம். மற்ற அம்சங்களில் பிரமை

இருந்ததே தவிர, அடிக்கடி சமுத்திரக் கரைக்கு ஓடுவதற்கு மட்டும் பிரமை இல்லை. அங்கே போய்ச் சமுத்திரத்தைப் பார்த்துக் கொண்டே நிற்பாள். கண்களிலிருந்து ஏனோ தாரை தாரையாகக் கண்ணீர் வடியும். ஏன் என்று கேட்டால் பதில் இல்லை. 'என்றாவது ஒரு நாள் இவள் கடலில் விழுந்து விடுவாளோ!' என்று நாங்கள் கவலைப்பட்டுக் கொண்டேயிருந்தோம்; அது வீண் போகவில்லை.''

ராஜுவின் உள்ளம் கொந்தளித்தது.

''சந்தேகமே இல்லை''--இப்படி அவன் வாய்விட்டுக் கூறுவதற்கும், ஆஸ்பத்திரி மணி கண கண வென்று ஒலிப்பதற்கும் சரியாக இருந்தது.

''வாருங்கள், வாருங்கள்''---அவன் முன்னே விரைந்தான்; அவர்கள் அவன் பின்னே தள்ளாடி நடந்தார்கள்.

நாலாம் நாள் பார்த்த நர்ஸ் மாடி வராந்தாவில் தென்பட்டாள். ராஜு அவளிடம் பவ்யமாகப் பேசினான். தன்னை அறிமுகப்படுத்தி, நினைப்பூட்டி, அந்தப் பெண் இப்போது எங்கே இருக்கிறாள், எப்படி இருக்கிறாள் என்று விசாரித்தான். அந்த நர்ஸ் நல்லவள். சிரித்த முகம். நின்று பதில் சொன்னாள்.

''நோயாளியிடம் நல்ல தெளிவு ஏற்பட்டு விட்டது. என்ன என்னவோ கேள்விகள் கேட்டாள். எங்களுக்குப் பதில் சொல்லத் தெரியவில்லை. ஐந்தாம் எண் வார்டில் இருக்கிறாள். போய்ப் பாருங்கள்.''

''நன்றி, வந்தனம்!'' ராஜு மேலும் நடந்தான்.

''அதோ இருக்கிறாளே, என் ஜானகி!''

கிழவி ஒரு கட்டிலினிடம் விரைந்தாள்.

''அம்மா, ஜானகி!''

தன் கையைப் பற்றிய கிழவியை ஒரு மாதிரியாக உற்று நோக்கினாள் அந்தப் பெண்.

''ஜானகியா!...நீங்கள்...யார்?...என் பேர்...ஜானகி இல்லையே!...''

''ஆமாம். ஜானகி இல்லை; கல்யாணி!''

தன் பதற்றத்தையெல்லாம் பல்லைக் கடித்து அடக்கிக்கொண்டு அவள் பின்னாலிருந்த ராஜு இவ்வாறு சொன்னான்.

அவள் சட்டென்று திரும்பிப் பார்த்தாள். கண்கள் விரிந்தன; புருவங்கள் உயர்ந்தன; இதழ்கள் இழைந்தன.

''நீ...ங்...க...ள்...''

அவளுடைய அலங்கோலமான தோற்றத்தையும் அப்போதைய அவள் நிலைமையையும் கண்டு அவனுக்குத் துக்கம் குமுறிக் கொண்டு வந்தது. பேச வாய் எழவில்லை.

சூழ்நிலையில் திடீர் மாற்றம்; ஒரு பரபரப்பு. ராஜு கவனித்தான். டாக்டர் வந்து கொண்டிருந்தார். முன் கண்ட அதே நர்ஸ் உடன் வந்தாள். ''அதோ, அவர்தான்'' என்று டாக்டருக்கு ராஜுவைச் சுட்டிக் காட்டினாள். ராஜு டாக்டருக்கு வணக்கம் கூறினான். அவர் நோயாளியைப் பார்வையிட்டு விட்டு ராஜுவிடம் ஆங்கிலத்தில் ஏதோ பேசினார்.

''இது ஒருவிசித்திரமானகேஸ், ஸார்!'' இப்படி ஆரம்பித்தவர் மூன்று நாட்களாய் நோயாளி இருந்த நிலை, செய்த சிகிச்சை முறை அனைத்தையும் கூறினார். அவரே வியப்புக்கு உள்ளாகி யிருந்தது அவர் பேச்சில் தெரிந்தது.

அவர் பேசி முடித்ததும் ராஜுவும் நடந்தவை முழுவதையும் சொன்னான். தனக்கே தன் மனைவியை அடையாளம் புரியவில்லை என்று அவன் துயரம் தோய்ந்த குரலில் சொன்னபோது டாக்டர், மனிதத்தன்மை நிறைந்தவராய் அங்கலாய்த்தார். பிறகு, ''இதில் வியப்பதற்கு அதிகம் இல்லை, ஸார்! ஒரே வருஷத்துக்குள் அடையாளம் புரியாத அளவுக்கு உருக்குலைந்து போய்விடுவதில்லையா? மேலும், கடலில் விழுந்தவர் பிழைப்பதற்கில்லை என்ற உறுதியான எண்ணம் உள்ளே இருந்ததும், எதிர்பாராத நிலையில், விபத்து முறையில், இரவு வேளையில் பார்த்ததும் உங்கள் மனத்தில் நம்பிக்கை ஏற்படவில்லை; அடையாளமும் தெரியவில்லை. ஆனால் நீங்கள் பாக்கியசாலி. இது யாரும் சடுதியில் நம்ப முடியாத அதிசயம்...! உம்! உங்கள் மனைவிக்கு இப்போது உடலிலோ, மூளையிலோ கோளாறு சிறிதும் இல்லை. இப்போதே நீங்கள் 'டிஸ்சார்ஜ்' செய்து அழைத்துக்கொண்டு போகலாம். அதிர்ச்சியினால் ஏற்பட்ட மூளைக் கலக்கம் மறு அதிர்ச்சியினால் நீங்கி விட்டது. ஆயினும் இனி எவ்வித அதிர்ச்சியும் நிகழாதபடி கவனித்துக் கொள்ளுங்கள்.'' டாக்டர் அங்கிருந்து போய் விட்டார்.

ராஜு டாக்ஸி கொண்டுவந்தான். கிழத்தம்பதிகளையும் வற்புறுத்தி அழைத்துக் கொண்டான். காரில் போகிற போது, அவர்களுக்கு அனைத்தையும் சுருக்கமாக விளக்கினான். அதைக் கேட்டுக் கல்யாணி உடம்பைச் சிலிர்த்துக் கொண்டாள். ''அதிசயம்! அதிசயம்!'' என்றார்கள் பெரியவர்கள். மறுநாள் காலையில் இந்த அதிசயத்தைக் காண ராஜுவின் வீட்டில் ஊரே கூடிவிட்டது.


அவ்வளவு சிக்கனம்! ஒரு முறை தேய்த்தால்
கால்கேட் டெண்டல் கிரீம்
85% கிருமிகளை ஒழிக்கிறது
சொத்தையும் மற்றும் துர்நாற்றமும் ஏற்படுத்தும் கிருமிகள் அவை
COLGATE
COLGATE
DENTAL CREAM
மிகச் சிறந்த பலனுக்கு எப்பொழுதும் உபயோகியுங்கள்!
கால்கேட் டூத் பிரஷ்


மிக அழகிய...
அடர்ந்த நீண்ட ஒளியுள்ள கூந்தல்!
பிரதிதினமும் கால்கேட் பெர்பியூம்டு காஸ்டர் ஹேர் ஆயில் தடவி வந்தால், கூந்தலானது அடர்த்தியாகவும், நீளமாகவும் வளருவதுடன் இளமையின் ஒளியுடனும், அற்புத ஜ்வலிப்புடன் விளங்குவதைக் கண்டு நீங்கள் பரவசமடைவீர்கள். அது உங்கள் கூந்தலின் இயற்கை அழகை எடுத்துக்காட்டி எல்லோரையும் பிரமிக்கச்செய்யும்.
மகிழ்ச்சியூட்டும் நறுமணம்—
உங்கள் குடும்பம்
முழுவதும் விரும்புவது!
COLGATE
HAIR OIL
கால்கேட்
பெர்பியூம்டு
காஸ்டர்
ஹேர் ஆயில்
எக்கானமி சைஸை வாங்கி பணத்தை மிச்சப்படுத்துங்கள்!

எண்ணக் குமிழிகள்

இரவிலிருந்தே நெஞ்சு எல்லையில்லாமல் பொங்குகிறது. நெஞ்சின் மூலையிலிருந்து ஒரு பெருமிதம் அழுத்தம் தாங்காது, நினைவுப் பரப்பில் ஓர் அலையாக வீங்குகிறது. மௌனமாக அது விம்மித் தணிந்து, தவழ்ந்து வருகையிலேயே, திடீரென்று ஓர் இமைப்பொழுதில் என்னுடைய சிறுமையான வாழ்வின் அவலங்கள் திரையாகக் கிளம்பிச் சுருண்டு, பிடரியைச் சிலிர்த்துக் கொண்டு, அசுர கதியில் முன்னதைத் தன்னுள் அடக்கிக் கொண்டு, மூர்க்கத்தனமாகக் கரையில் அடித்து நுரையும், திவலைகளுமாகச் சிதறுகின்றன. கரையில் நினைவின் நுரைகள்; திவலைகள்.

துக்கத்தில் மனம் ஸ்தம்பிக்கிறது; மகிழ்ச்சியில் தடுமாறுகிறது. அழுகை கூட வருகிறது. அதுவும் இந்த இரவின் மௌனத்தில் இந்த வேதனை என்னால் தாங்க முடியாத ஒன்று. மணி பன்னிரண்டு; ஒன்று. எனக்குத் தூக்கம் வரப் போவதில்லை. ரயில் பிரயாணத்தில் கண்ணைச் சுழற்றிக் கொண்டு வருவதுபோல், உடல் அசதியின் எல்லையில் நினைவுகள் துயிலில் ஒன்றினால் தான் உண்டு.

ஆனால் இந்த இரவு எனக்கே சொந்தம்; எனக்காகவே படைக்கப்பட்டது. இந்த விநாடிகளின் உணர்ச்சிகள்—இல்லை, இந்த விநாடிகளின் உணர்ச்சிகளில் தோய்ந்த இந்த விநாடிகளைப் போல் என் வாழ்வில் இனி என்றேனும் வருமோ, வராதோ? நான் தூங்கப் போவதில்லை!



எங்கோ, கடிகாரம் மறுபடியும் ஒன்றடித்தது. நேரம் எவ்வளவு வேகத்தில் ஓடுகிறது! ஆனாலும் பொழுது விடிவதற்கு இன்னும் எவ்வளவு நீண்ட நேரம் இருக்கிறது!

படுக்கையில் எழுந்து உட்கார்ந்தேன். 'மறுபடியும்...ஒரு முறை!...' நெஞ்சில் ஓர் ஆசை எழுந்தது.

விளக்கைப் போட்டால் நாணு விழித்துக் கொண்டு விடுவான். அரவமின்றி மெழுகுவர்த்தியைப் பொருத்தினேன். தீக்குச்சியின் உரசலில், பெட்டிப் பூட்டினுள் சாவியின் 'க்ளிக்'கில் நாணு விழித்துக்கொண்டு விடுவானோ என்று ஒரு பயம்!

பெட்டியின் மேலாகத்தான் இருக்கிறது—அந்தக் காகித உறை; உள்ளே அந்த நீல நோட்டு! நூறு ரூபாய்!

மெழுகுவர்த்தியின் வெளிச்சத்தில் பார்த்துப் பார்த்து மகிழ்ந்து கொண்டிருந்தேன். தடாரென்று ஓர் ஓசை; திறந்திருந்த பெட்டி மூடிக் கொண்டது. நாணு விழித்துக் கொண்டு விட்டான்; ''என்னடா அது?''

''ஒன்றுமில்லை...'' மென்று விழுங்கினேன். ஆனால் நல்லவேளை; கேட்டானேயொழிய அவன் என் பதிலுக்குக் காத்திருக்கவில்லை. புரண்டு படுத்துக் கொண்டு தூங்கி விட்டான். ஒருவேளை நினைவிருந்தால் காலையில் நண்பர்களைச் சேர்த்துக் கொண்டு 'கோட்டா'ப் பண்ணுவான். அவன் சுபாவம் அது.

அந்த நோட்டையும், நற்சான்றிதழையும் பெட்டியில் வைத்துப் பூட்டிவிட்டுப் படுக்கையில் சாய்ந்தேன்.

மெழுகுவர்த்தி கரைந்து கொண்டிருக்கிறது. அதை உற்று நோக்குகையில் அம்மாவின் நினைவு வருகிறது. அம்மாவுக்கு ஒரு நல்ல புடவை வாங்கிக் கொடுக்கலாம். 'அப்பா! நீங்கள் எத்தனை நாட்களுக்கு மாற்று வேஷ்டியில்லாமல், உலர்த்தி உலர்த்தி உடுத்திக் கொள்வீர்கள்? இதோ உங்களுக்கு இரண்டு வேஷ்டிகளும்...'

முக்கியமாக, நான் இரண்டு சட்டைகள் தைத்துக் கொள்ள வேண்டும். இதோ ஒரு காட்சி; கல்லூரி விழாவில் நடந்த நாடகக் காட்சி மாதிரி என் கண்முன் நிற்கிறது. இதோ கல்லூரி

விழா அரங்கு - ஆயிரக்கணக்கானவர்களின் முன் ஒலிபெருக்கி பேசுகிறது. "...கட்டுரைப் போட்டி, முதல் பரிசு-பணப் பரிசு ரூபாய் நூறு. முதலாண்டு மாணவன் ராகவன். மே. ரா." என்று என்னுடைய பெயரைப் பரிசு வழங்குபவர் படிக்கிறார்.

பலவிதமான உணர்ச்சிகளில் திணறிக் கொண்டு நான் பரிசு வாங்க மேடையேறுகிறேன். படிகளில் ஏறும்பொழுதே கைகள் என்னையறியாமல் அவசரப்பட்டுக் கூப்பிக் கொள்கின்றன. கூட்டத்தில் என்னைக் கேலி செய்யும் சிரிப்பின் அலையொன்று தவழ்கிறது. குறுகிப் போகிறேன். "அழுமூஞ்சிக்குப் பரிசு போய்!" கூட்டத்தில் ஓர் பரிகாசக் குரல். மறுபடியும் ஓர் சிரிப்பலை எழுந்து ஒரு மூலையில் கழிக்கிறது. நடுங்கிய கைகளுடன் பரிசைப் பெற்றுக் கொள்கிறேன். ஆயிரமாயிரம் கண்கள் என்னைப் பார்க்கின்றன — என்னை; என் தோளை; என் தோள்பட்டையில் அழுக்கடைந்த சட்டையின் கிழிசலை; அதை மறைக்க முயன்று கொண்டிருக்கும் குண்டூசியை! யாரோ முதுகில் தட்டினார். பரிசு கொடுத்தவராக இருக்கும். நான் நன்றி தெரிவிக்கக் கூட இல்லை; நொடியில் திரும்பி விட்டேன்.

அவசரச் சலவைக்கென்று போட்ட அந்த எனது ஒரே நல்ல சட்டை நேற்றுக் கிடைத்திருந்தால், மேடையில் நிமிர்ந்து கூட நின்றிருப்பேன். இல்லாவிட்டாலும் இத்தனை குழப்பம் இல்லாமலாவது இருந்திருப்பேன். யார் கண்டார்கள்? ஒருவேளை பரிசைப் பெற்றுக் கொண்டு முன் வரிசையிலிருந்த சந்தியாவின் கண்களைக் கூடச் சந்தித்திருப்பேன். அவளது உதடுகளில் புன்னகை பூத்திருந்திருக்குமோ? பூத்திருக்கலாம்.

சந்தியா என்னைக் காதலிக்கிறாள் என்று எனக்கு ஒரு பிரமை. இத்தனை பேரில், என்னைவிடச் சிறந்தவர்களை விட்டு, என்னை அவள் ஏன் காதலிக்க வேண்டும் என்ற எண்ணம் எனக்குக் கசக்கிறது. அவள் என்னைக் காதலித்தால் எனக்கு ஆறுதலாக இருக்கும். அவ்வளவுதான்; அவள் என்னுடையவளாகவும் ஆகிவிட வேண்டாம். நான் என் காதலைத் தியாகம் செய்துவிடத் தயார். அவள் என்னைக் காதலித்தாள் என்ற நினைவு எனக்குப் போதும். எத்தனை எத்தனை முறைகள் எண்ணிப் பார்த்திருக்கிறேன். 'நீ எங்கே, நான் எங்கே, சந்தியா?...நான் கொடுத்து வைத்தது அவ்வளவுதான்...' இப்படித் தான் முடிவு ஒரு பெருமூச்சின் சுருதியில் முடியும்-கதைகளில் வருகிற மாதிரி. அந்த நினைவைப் பெருமூச்சில் புதைப்பேன்.

"கொக்கரக்...கோ...கோ!" என் நினைவின் சுருதியைக் கலைத்துக் கொண்டு பக்கத்துச் சந்தில் ஒரு கோழி கூவுகிறது. மணி இரண்டு, இரண்டரைதான் இருக்கும். இன்னும் பொழுது கிடக்கிறது. ஆனால் கோழிக்கு என்னவோ அவசரம்; அர்த்தமில்லாத அவசரம்! விடிவைத் தேடும் அவசரம்.

நினைவுத் தொடர் எதிலிருந்து எதற்கு வந்து விட்டது? என்னவோ நினைத்தேனே? ஆம், எனக்குச் சட்டை தைத்துக் கொள்வதைப் பற்றி. ஊரில் போய்ப் பார்த்துக் கொள்ளலாம். பதினைந்து, இருபது நாட்களில் விடுமுறை வந்து விடும். அதுவரையில் எப்படியாவது ஓட்டி விடலாம். அந்தப் பணத்தை அப்படியே அனுப்பி விடலாம். அதை மூளிப்படுத்துவானேன்?

மூளி...குறை ...நிறைவின்மை....இந்த வார்த்தைகளை நினைக்கும்போதே அக்காவின் நினைவு வருகிறதே!

இதோ ஓர் அலை கழுத்தைச் சிலிர்த்துக் கொண்டு வருகிறது!

அக்காவின் குறையைத் தீர்த்து விட முடியுமா? பேராசை பிடித்த அவள் புகுந்த வீட்டாருக்கு இந்த நூறு ரூபாய் எம்மாத்திரம்?

அக்காவின் கடிதம்—"நான் உண்மையாகத்தான் கேட்கிறேன், ராகவா! என்னை ஒரு அநாதை ஆசிரமத்தில் சேர்த்து விடேன். அங்கே பட்டணத்திலே அப்படி நிறைய இருக்குமாமே?... அம்மாவுக்குத் தெரிய வேண்டாம்! நம் கஷ்டம் நம்மோடு இருக்கட்டும்; 'இதையெல்லாம் எழுதிப் படிக்கிற பிள்ளை மனசை ஏன் கெடுக்கறே?' என்பாள். நீ வயசிலே சின்னவன்தான். இருந்தாலும் எனக்கு வேறு யார் இருக்கிறார்கள் ராகவா...?"

அலை என்னைக் கரையில் அடித்துத் தள்ளிவிட்டுப் போய் விட்டது.

"பௌல்டு! போல்ட்!" பக்கத்து அறையில் பட்டாபி தூக்கத்தில் உளறுகிறார். அவருக்குத் தூங்கும்போது கூடக் கிரிக்கெட் ஞாபகம். என்னைவிடப் பெரியவர்; இறுதியாண்டு மாணவர். எனக்குச் சிரிப்பு வருகிறது; பொறுமையாகக் கூட இருக்கிறது.

மெழுகுவர்த்தியும் கரைந்து விட்டது. இருள் கனக்கிறது. இந்தப் பொழுது எப்பொழுது விடியப் போகிறதோ?

• • •

காலையில் நாணு என்னைக் கேலி செய்து விட்டுத்தான் ஓய்ந்தான். தபால் நிலையத்துக்குக் கிளம்புகையில்,

"எங்கேடா கிளம்பிட்டே, மடிசஞ்சி?" என்று கேட்டுக் கொண்டு மறுபடியும் வந்து விட்டான்.

"எங்கேப்பா, எங்களுக்கெல்லாம் விருந்து? - ஸ்வீட், காரம், ஐஸ்கிரீம், காப்பி ?" என்று நண்பர் குழாம் வளைத்துக் கொண்டு விட்டது. நான் பரிசு வாங்கினால் இவர்களுக்கு விருந்து கொடுக்க வேண்டுமாம்!

"இது சுத்த நீராகாரம்! இது கிட்டே காப்பியாவது, ஐஸ்கிரீமாவது! ஒண்ணும்புரளாது தம்பி... மணியார்டர் கமிஷனுக்குக் கூட அதிலிருந்து காசு எடுக்க மாட்டானே, மகராஜன்!"—நாணுதான். இது அவனுடைய சுபாவம்; அவனுக்கு என்னிடம் ஒரு சுவாதீனம்.

"பழி, தபாலாபீஸுக்குத்தானேடா? போ, போ. இதே நோட்டைத்தான் எங்கப்பாவுக்குக் கொடுக்க வேண்டும் என்று சொல்லி மணியார்டர் செய்து விட்டு வா. தொலே!"

மெதுவாக அங்கிருந்து நகர்ந்தேன்.

"பார்த்துப் போம்மா, கண்ணு! தெருவிலே எடுத்துப் பார்த்துக்கினே போவாதே. எவனாலும் சோமாரி அட்சின்னு பூடப் போறான், வாய்தாரே!" எல்லாம் சக மாணவர்களின் கேலி.

இந்தக் கேலியெல்லாம் பற்றி எனக்கு இப்பொழுது கவலையில்லை. "சார், இதைப் பார்த்தீர்களா? எல்லாப் பாடங்களிலும் எழுபத்தைந்துக்கு மேல் வாங்கியிருக்கிறான். ஒவ்வொருத்தன் பணமும், சிபாரிசும் வைத்துக் கொண்டு பையன் மார்க் கொ'கவில்லையே என்று பொருமுகிறான்... இவன் துரதிருஷ்டம் நம் வீட்டில் வந்து பிறந்திருக்கிறான்." என்று வந்தவரிடமும் போனவரிடமும் என் சர்டிபிகேட்டைக் காட்டி அங்கலாய்த்த அந்த அப்பா, நாளைக்கு இந்த மணியார்டரை வாங்கிக் கொண்டவுடன் எவ்வளவு பெருமைப்படுவார்! என் மனம் நடந்து கொண்டே அதைக் கற்பனை செய்கிறது.

ம்ஹூம்! இப்படி நினைத்தால் போதாது! இதோ, அப்பா வருகிறார். உச்சிக்கால அபிஷேகத்தை முடித்து விட்டு, அப்பா கோயிலிலிருந்து வெளியே



வருவதற்கும், தபால்காரச் சிங்காரம் ஆடி ஆடிக் கொண்டு வருவதற்கும் சரியாக இருக்கும். பரஸ்பரம் நல்லெண்ணத்தைப் பரிமாறிக் கொள்ளும் முறையில் இருவர் முகங்களிலும் மென்னகை; அவரவர் அவரவர் வழியில் போய் விடுவார்கள். ஆனால் நாளைக்கு—!

''சாமி, உங்களுக்கு ஒரு மணியார்டர் வந்த மாதிரி...''

''எனக்கா?''

''ஆமாம்? உங்கள் பையன் அனுப்பியிருக்காரு. போலிருக்கு'' சிங்காரத்துக்கு எதிலும் நிச்சயம் கிடையாது! அப்பா ஒன்றும் புரியாமல் திகைக்கிறார். நன்றாக விழிக்கட்டும்!

பக்கத்து வீட்டுத் திண்ணையிலேயே இருவரும் உட்காருகிறார்கள். அடையாளமிட்ட இடத்தில் அப்பா கையெழுத்துப் போடுகிறார். கண்ணைச் சுருக்கிக் கொண்டு, எழுதுகையில் வாய் கூடச் சற்றுக் கோணினாற் போல் போய் விடுகிறது.

நாளைக்கு என் மணியார்டர் போகும் போது, அம்மா வீட்டில்தான் இருக்க வேண்டும். அதுவும் நான் எதிர்நோக்கியிருக்கும் அந்த நேரத்தில் அப்படி இருந்தால்தான் எனக்குப் பிடிக்கும். அம்மாவைப் பல நிலைகளில் இப்பொழுது நான் காண்கிறேன். ஒவ்வொரு நிலையிலும் அம்மா ஏழ்மைக் கோலம் புனைந்து கொண்ட மகாலட்சுமி மாதிரித்தான் தெரிகிறாள்.

இப்பொழுது நான் அம்மாவின் தெய்விகத் திருமுகத்தை உணர்கிறேன். அம்மா கூடத்துத் தூணில் சாய்ந்து கொண்டிருக்கிறாள். குளித்த அவசரத்தில், அவசரம் அவசரமாகப் புடவையைச் சுற்றிக் கொண்டு வந்து, கூந்தாமுலை 'எடுத்து விட்டு'க் கொண்டிருக்கிறாள். அம்மாவின் முகத்திலும், தோளிலும் நீர்த்துளிகள் முத்து முத்தாக ஒளிர்கின்றன. கந்தாமுப் பயல் பிஞ்சுக் கையால் அம்மாவின் மஞ்சட்கயிற்றைப் பிடித்துக் கொண்டு, கால்களை மாற்றி, மாற்றி உதைத்துக் கொண்டிருக்கிறான். இதோ, அம்மாவின் மஞ்சள் மெருகேறிய முகம், முன் தலைமயிரின் நரை, பழைய வெள்ளைத் தோடுகள் எல்லாம் கண்முன் தெரிகின்றன. மூக்குத்திகளைக் கழற்றிப் பெண்ணின் காதுகளுக்குப் போட்டாகி விட்டது. துவாரம் அடைந்து போய் விடாமல் இருப்பதற்காக அம்மா ஓர் ஈர்க்கை ஒடித்துப் போட்டுக் கொண்டிருக்கிறாள். 'பிள்ளை சம்பாதித்து வாங்கிப் போட மாட்டானா?' என்று எண்ணம் இருக்கலாம்.

அம்மாவின் வாய் சற்றே திறந்திருக்கிறது. சற்றே வரிசை தவறிய பற்கள்.



வயதான கட்சிக்காரர்: வக்கீலய்யா! நீங்க ரொம்ப இளைஞராக இருக்கிறீர்களே இந்தப் பெரிய வழக்கை எடுத்து நடத்த வயது வேண்டாமா?

வக்கீல்: அதற்குத்தானே சொல்லுகிறேன், இந்த வழக்கை நடத்த என்னைப் போன்ற இளைஞர்தான் வேண்டும் என்று!

அவை வரிசையாக அமைந்திருந்தால் கூட அந்த முகத்துக்கு அவ்வளவு அழகாக இருக்குமோ என்னவோ? முற்றத்தில் துளசி மேடைக்கு மேல் தெரியும் வானத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறாள். அம்மாவுக்கு ஆயிரம் கவலைகள்...'அந்தப் பிள்ளை, (நான்) கண் காணாத இடத்தில் எப்படியிருக்கிறதோ? இந்தப் பெண்ணுக்கு (அக்காவுக்கு) என்று வழி பிறக்கப் போகிறதோ?..

''சுந்தரநாயகி! நீ என்றைக்குக் கண் திறந்து பார்க்கப் போகிறாயோ?...''

இதோ, அப்பா வந்து விட்டார் அவசரம்; அவசரம் ''அந்தக் கண்ணாடிக் கூட்டைக் கொண்டா...''

அம்மாவின் நிலை கலைகிறது. அக்காவின் கையில் வெள்ளெழுத்துக் கண்ணாடி வருகிறது.

''அதென்ன, கையில் பணம்?''— அம்மா கேட்கிறாள்.

இதோ குழந்தைகள் கூட வந்து விட்டார்கள். சந்தடியில் கந்தாமுப் பயல் கூடப் புடவைக்குள்ளிருந்து தலையை நீட்டி வெளிச்சத்தின் கூசத்தில் கண்களை மூடி மூடித் திறக்கிறான்.

அப்பா கண்ணாடியை மாட்டிக் கொண்டு விட்டார். நான் கற்பனை செய்யும் அந்த விநாடி வந்து விட்டது. அது எப்படி யிருக்கப் போகிறது? ம்ஹூம்! என்னால் நினைக்கக்கூட முடியாது.

மௌனமாக, அலையொன்று விம்மித் தவழ்கிறது!

• • •

அப்பா தாழ்வாரத்தில் முன்னும் பின்னுமாக நடக்கிறார். யாரிடம் போய்ச் சொல்லலாமென்று கால்கள் பறக்கின்றன!

பேச்சை மறந்திருந்த அம்மாவுக்குப் பேச்சு வருகிறது. ''...இப்படியுமா இருக்கும் ஒரு பிள்ளை? தனக்கென்று ஒரு பத்து ரூபாய் எடுத்து வைத்துக் கொள்ளத் தெரியாதோ ஒரு பிள்ளைக்கு? இங்கே கொஞ்சம் பாருங்களேன்! அதில் ஒரு இருபத்தைந்து ரூபாய் அவன் செல



''ஏண்டா நேத்திக்குப் பள்ளிக் கூடம் வரல்லே. ஏதாவது நொண்டிச் சாக்குச் சொல்லாதே.''

''காலில் 'பிராக்சர்' சார்!''

வுக்கென்று தனியாக எடுத்து வைத்து விடுங்கள்...அந்தப் பிள்ளை நட்சத்திரத்துக்கு இன்று சுந்தரநாயகிக்கு ஒரு அர்ச்சனை செய்தால் தேவலை...இந்தப் பெண்ணுக்கு ஒரு புடவையும், ரவிக்கைத் துண்டும் வாங்கி வந்தால், இருக்கிற பாத்திரங்களில் இரண்டைக் கொடுத்து, ஒரு பட்சணத்தையும் பண்ணிக் கொடுத்து இதைக் கொண்டு அவர்கள் வீட்டில் விட்டு, அவர்கள் காலில், கையில் விழுந்து பார்ப்போம்...''

அப்பா ஆழ்ந்த சிந்தனையில் பெஞ்சியில் வந்து உட்காருகிறார். ''...இன்றைக் கட்டுக்கே அந்தப் பிள்ளைக்கு ஒரு கடிதாக போடுங்கள்.''

'எப்போதும் படித்துக் கொண்டே இருக்க வேண்டாம். உடம்பைப் பார்த்துக் கொள். லீவு விட்டதும் உடனே வந்து சேர்' என்று எழுதுங்கள்.

தபாலாபீசுக்கு நடந்து கொண்டே இப்படிக் கற்பனையலைகளில் மிதக்கும் போது அம்மாவின் அன்புக்கரத்தை என் தோள்மீது உணர்கிறேன். ''என்னடா குழந்தை இது? அடையாளமே தெரியாமல் இளைச்சுப் போய்...ஒரு கறுப்பு வேறே....போடாப்பா, உடம்பைப் பார்த்துக் கொள்ள வேண்டாமோ?''

இதோ தபால் நிலையம் சாலையின் மறுபுறத்தில். நான் மணியார்டரை அனுப்ப வேண்டிய இடம். ''ஐயோ, அம்மா !...ஆங் !'' எதன் கீழோ நான் அமுங்குகிறேன். என்மேல் பெரிதாக ஒரு கனம் கவிகிறது.

''ராஷ் ட்ரைவிங்! ராக்கெட்டிலே பறந்து போகிறதாக எண்ணம் இவன்களுக்கெல்லாம்...''

''இந்தப் பையன்தான் ஆகாயத்தைப் பார்த்துக் கொண்டு வந்தான்...''

''யார் பெத்த புள்ளையோ ?...''

''கூட்டம் போடாதிங்க; கூட்டம் போடாதிங்க...'' உணர்வு மங்கிக் கீழே விழுந்த என் செவிகளில் மேலே கண்ட வார்த்தைகள் ஒடுங்கிக் கேட்டன.

ஒரு பெரிய அலை வந்து என்னைச் சுருட்டிக் கொண்டு போனதாக ஒரு ஞாபகம். அப்புறம் அலையே ஓய்ந்து விட்டது போலிருக்கிறது. கடல் குளம் மாதிரி ஆகி விட்டது.

தோளில் 'சுளீர் சுளீ'ரென்று ஒரு வலி. சட்டையின் குண்டூசி குத்தி விட்டதோ?

''ம்...ம்...அசையக் கூடாது.'' யாரோ டெலிபோனில் பேசுவதுபோல் குரல் மெலிந்து ஒலிக்கிறது. கண்ணை நன்றாகத் திறக்க முடியவில்லை. அருகில் 'நர்ஸ்'...!

சந்தியா, நீ எப்பொழுது நர்ஸாகி... சந்தியா! நான் கொடுத்து வைத்தது... சே! இது சந்தியா அல்ல; அக்கா! நாடிக் குழலைக் காதில் மாட்டிக்கொண்டு நான் படித்த பள்ளிக்கூடத்தின் அந்தப் பழைய தலைமையாசிரியர்...

'அம்மா! நான் உன் மடியில் படுத்துக் கொண்டு பால் குடித்துக் கொண்டிருந்தேனே, என்னைத் திடீரென்று கீழே போட்டு விட்டாயா, அம்மா?'

''என்ன தம்பி சொல்லறே?''

''நோ, நோ! துரதிர்ஷ்டம் பிடித்த பையன். பிழைப்பானென்று எனக்கு நம்பிக்கையில்லை''-பலவிதமான குரல்கள் பலவிதமான முகங்கள் என்னுள் தெரிகின்றன.

• • •

''நாணு, அழுகிறாயா? சே, என் பையில் பணம் இருந்ததே; இருக்கிறதா, பார். அப்பாவுக்கு ஒரு தந்தி கொடுத்து விடுகிறாயா?...மணி என்ன ஆச்சு?''

இப்பொழுது, நான் அம்மாவின் தெய்விகத் திருமுகத்தை உணர்கிறேன். குடத்துக் குத்து விளக்கின் சுடரில் அம்மாவின் பார்வை நிலைத்திருக்கிறது. அம்மாவுக்கு ஆயிரம் கவலைகள். ''அந்தப் பிள்ளை கண் காணாத இடத்தில் எப்படியிருக்கிறதோ?...''

(நான்தான் இப்படிக் காரில் அடிபட்டுக் கிடக்கிறேனே.) உடல் பதற, உள்ளம் பதறக் கையில் தந்தியுடன் அப்பா வீட்டுக்குள்ளே போகிறார். ''அதென்ன தந்தி''—என்று கேட்கிறாள் அம்மா. இதுவும் ஒரு விநாடி. இன்னொரு விநாடி! அவர் படிக்கும் என் விபத்தைப் பற்றிய செய்தி அம்மாவுக்கு எப்படியிருக்கப் போகிறது? 'ம்ஹூம்' என்றால் நினைக்கக் கூட முடியவில்லை. அலையொன்று காதில் 'ஓ' வென்று இரைகிறது. அந்தப் பேரிரைச்சலில் என் புலனுணர்வுகள் ஒடுங்கித் தேய்ந்து மறுபடியும் மங்கி விடுகின்றன. நானாகக் கற்பனை செய்து பார்த்த என்னைக் குமிழிகள் உடைந்து சிதறிவிடுகின்றன.

திருச்சி உலகநாதன்

12. உலகநாதனுக்கு ஜே!

சடைக்குள் பதுங்கிக் கொண்டிருந்தவர்கள் எங்கே ஓடினால்தான் என்ன? அவர்கள் ஓடி ஒளிந்த இடங்களுக்குச் சென்று, ஒளித்து வைத்த பண்டங்களை எடுப்பது போல் மோப்ப நாய்கள் எளிதாகப் பிடித்து விட்டன. ஐம்பதுக்கும் மேற்பட்ட நபர்கள் அகப்பட்டார்கள். கோபாலுவும் பிடிபட்டான். அவர்கள் அனைவரையும் மதுரை போலீஸார் வசம் ஒப்படைத்து விட்டுக் கோபாலுவை மட்டும் தங்கள் காரில் ஏற்றிக்கொண்டு திருச்சிக்கு வந்தார்கள். அவனிடம் வாக்குமூலம் கேட்டதற்குத் தனக்கு ஒன்றும் தெரியாது என்று சொல்லி விட்டான். அதற்காகப் போலீசார் அவனை இலேசில் விட்டு விடுவார்களா? இல்லாத தந்திரங்களை யெல்லாம் கையாண்டு விவரத்தைக் கறந்து விட்டார்கள். எத்தனையோ சிறுவர்கள் அவர்களது திருட்டுக்கு உடந்தை என்பது தெரிய வந்தது.

முருகண்ணன் என்ற குருட்டுப் பிச்சைக்காரனும், பழவெண்டர் தாண்டவராயனும் கோபாலுவுக்குக் கூட்டு என்பதும் தெரிய வந்தது.

''தாண்டவராயன் இப்பொழுது எங்கே பழம் விற்கிறான்?'' என்று கேட்டார் போலீஸ் அதிகாரி.


''டவுன் ஸ்டேஷனில்!'' என்றான் கோபால்.

''இன்ஸ்பெக்டர்! நேரே ஜீப்பிலே போய்த் தாண்டவராயனை 'அரஸ்ட்' செய்யும்'' என்று உத்தரவிட்டார் அதிகாரி. பிறகு சித்திவிநாயகத்தைப் பார்த்து, ''மிஸ்டர், சித்திவிநாயகம்! உங்கள் பையன் உலகநாதன் காணாமற் போனதனால் போலீஸ் இலாகாவுக்குப் பெரிய அதிர்ஷ்டம் கிடைச்சிருக்குது. இதே ஜங்ஷன் பிளாட்பாரத்தில் முன்னால் நான் இந்தக் கோபாலுவைப் பார்த்திருக்கிறேன். இவன்தான் பக்கா 'ரௌடி' என்று தெரியாது! உங்கள் உலகநாதன் காணாமற் போனதினால் எத்தனை திருடர்கள் கிடைத்திருக்கிறார்கள், பார்த்தீர்களா? இன்னும் கிடைக்க வேண்டியவன் குருட்டுப் பிச்சைக்காரன் ஒருவனேதான். அவனை எப்படியும் கண்டு பிடித்தாக வேண்டும்.''

''என்னுடைய உலகநாதனை நான் அழைத்துக் கொண்டு போகலாமா? அவன் எங்கே இருக்கிறான்?''

''அவன் எங்காவது தப்பி ஓடாதிருக்க சேட்டு வீட்டில் இருக்கட்டும் என்று அனுமதித்திருக்கிறேன். சேட்டே அவனுக்குக் காவல். உங்கள் வீட்டுக்கு அவனைக் கொண்டு போக வேண்டாம். நீங்களும் அவனைப் பார்க்கவேண்டாம். நானே ஒருதினம் பொறுங்கள்.''

''தங்களிடம் ஒரு உண்மையைச்





சொல்ல வேண்டும். இந்தக் கேஸில் அகப்பட்டுள்ள தாண்டவராயன் என்னுடைய மைத்துனன். அவனுக்கும் என்னுடைய குடும்பத்துக்கும் எனக்கும் எவ்விதமான சம்பந்தமும் இல்லை. அவன் என்னையோ என் குடும்பத்தையோ பழி வாங்கும் எண்ணத்தில் எதைச் சொன்னாலும் ஒப்புக் கொள்ள வேண்டாம்.''

''அப்படி வாருங்கள். திருடன் உங்களோடு இருக்கிறானா?''

''என் வீட்டில் இல்லை. அவன் சிறு பிள்ளை முதலே பொல்லாதவன். என் பேச்சையோ, அவன் தமக்கை பேச்சையோ கேட்க மாட்டான். ஆனாலும் எப்போதாவது தன் தமக்கையைப் பார்த்துப் போக வருவான்.''

''சரி, சரி! சம்மன் வரும்போது கோர்ட்டுக்கு வரவேண்டியிருக்கும். நீங்கள் போகலாம்'' என்று ஜில்லா போலீஸ் சூப்பிரண்டெண்ட் உத்தரவு கொடுத்தார். சித்தி விநாயகத்துக்கு ஒரே ஆனந்தம். சில மாதங்களுக்கு முன் அவர் ரயிலில் போனபோது சாமியார் சொன்ன தகவல் நினைவுக்கு வந்தது.

தாண்டவராயன் அவருடைய மைத்துனன் என்றதுமே சித்தி விநாயகத்தின் மீது போலீஸ் அதிகாரிக்குச் சந்தேகம் வந்து விட்டது. எனவே ஒரு நபரைக் கூப்பிட்டு அவரை 'நிழல்' செய்யச்சொன்னார். அந்த ஆசாமி அவரை அனுப்பிய போது சித்திவிநாயகம் ஆர். எம். எஸ். தபாலாபீஸின் அருகே நின்று கொண்டு ''தந்தி கொடுக்க முடியுமா?'' என்று விசாரித்துக் கொண்டிருந்தார்.

திருச்சி ஆர். எம். எஸ். தபாலாபீஸ் இரவில் வேலை செய்யாது. அங்கே 'சார்டிங்' வேலை மட்டுந்தான் இரவில் நடைபெறும்.

''நீங்கள் தந்தி கொடுக்க வேண்டுமென்றால் பெரிய போஸ்டாபீசுக்குப் போங்கள். இரவில் வேறு எந்தப் போஸ்டாபீசும் திறந்திருக்காது'' என்று தபால் சிப்பந்தி ஒருவர் சொன்னார்.

சித்திவிநாயகம் சைக்கிள் ரிக்ஷா ஒன்றைப் பேசிக்கொண்டு பெரிய போஸ்டாபீசுக்குப் போனார்.

அவர் தந்தியைக் கொடுத்து விட்டு வெளியே சென்றபின் சி. ஐ. டி. உள்ளே நுழைந்தார்.

''இப்போது ஒருவர் தந்தி கொடுத்தாரே, எந்த ஊருக்குக் கொடுத்தார்?'' என்று கேட்டார். அவர் சொல்ல மறுக்கவே, ''நான் கேட்டால் சட்ட விரோதம். அப்படியும் இலாக்காவினர் கேட்டால்...'' என்று சொல்லியவாறே, தாம் சி.ஐ.டி. என்பதை நிரூபித்தார். தபால் சிப்பந்தி தந்தியையே எடுத்து அவரிடம் காட்டி விட்டார்.

''பஞ்சாமிர்தப் பண்டாரம், பழனி அடிவாரம், மேற்பார்வை விபூதி வீரலிங்கம்.

''காணமற் போன என்னுடைய மகன் உலகநாதன் அகப்பட்டு விட்டான். அவனைப் பழனிக்கு அழைத்து வருகிறேன். தங்கள் ஆசீர்வாதத்தால் அவனுக்கு மொட்டை யடித்துக் காவடி எடுத்து வைக்க வேண்டும்.

சிப்பாய் சித்திவிநாயகம்''

தந்தியை அப்படியே வார்த்தைக்கு வார்த்தை குறித்துக் கொண்டார் சி. ஐ. டி.

அடுத்த சில கணங்களுக்குள்ளேயே போலீஸ் அதிகாரியின் ஆணையின் பேரில் பழனி மலையடிவாரத்துப் போலீஸ் ஸ்டேஷனுக்குத் தகவல் பறந்தது. 'விபூதி வீரலிங்கம் மேற்பார்த்துப் பஞ்சாமிர்தப் பண்டாரத்துக்கு ஒரு தந்தி வருகிறது. அதைக் கவனித்து வைக்கவும். சந்தேகம் இருந்தால் ஆளையே பிடித்து வைக்கவும்' என்று!

பழனி போலீஸ் ஸ்டேஷனுக்குள் பொழுது போகாமல், போலீஸ் சேவகர்கள் சீட்டு விளையாடிக் கொண்டிருந்தார்கள். அப்போது டெலிபோன் மணி கிணுகிணுக்கவே ஸ்டேஷனில் சுறுசுறுப்பு ஏற்பட்டது.

செய்தியை வாங்கியவர் போன் பேசி முடித்ததும், ''இந்தா, ஐயா எட்டு! இங்கே வா ஐயா. இப்போதே போய், மலையடிவாரத்திலே யாரோ விபூதி வீரலிங்கமாம். அவன் மேற்பார்வைக்குத் தந்தி ஒன்று வருகிறதாம். அவன் வீட்டில் ஒரு சாமியார் இருக்கிறாராம். அவர் பெயர் பஞ்சாமிர்தமாம். அவரை நீ விசாரிக்க வேண்டும். நீ போலீஸ் என்பது தெரியக் கூடாது. மதுரையிலிருந்து கோபால் அனுப்பினான் என்று சொல்லு. அந்தச் சாமியார் கோபாலுவின் ஆள்

என்று உன்னிடம் ஏதாவது தகவல் சொன்னால் முதுகுத் தோலை உரிக்க இங்கே அழைத்து வா. இல்லாவிட்டால் அவரை அங்கேயே விட்டுவிடு!'' என்று சொன்னார்.

ஏட்டய்யா 'மப்டி' உடையில் புறப்பட்டார். விபூதி தயாரிக்கும் வீரலிங்கத்தின் தொழிற்சாலையை அவர் அறிவார். அங்கே சமீப காலமாக வந்து தங்கும் பஞ்சாமிர்தச் சாமியார் பற்றியும் இலேசாகக் கேள்விப்பட்டிருந்தார்.

பஞ்சாமிர்தச் சாமியாருக்குத் தங்கம் உண்டாக்கும் சித்துத் தெரியும் என்பதை வீரலிங்கம் அறிந்து, அவருக்கு மரியாதையுடன் வந்தால் போனால் தங்குவதற்குத் தமது விபூதித் தொழிற்சாலையின் ஒரு பகுதியில் இடமும் கொடுத்திருந்தார். பக்தி உள்ளவர். சாமியார் எப்போது வருவார், எப்போது போவார், எங்கே போவார் என்பதெல்லாம் யாருக்கும் தெரியாது. அவருக்குப் பழனி பஞ்சாமிர்தம் அதிகம் பிடிக்கும். அதனாலேயே அவருக்குப் பஞ்சாமிர்தச் சாமியார் என்ற பெயர் வழங்கலாயிற்று.

பஞ்சாமிர்தச் சாமியார் உள்ளே நிஷ்டையில் இருப்பதாக எண்ணிக் கொண்டிருந்தார். சாமியாருக்கு அப்பொழுது நல்ல தூக்கம். அவர் பூஜையில் தாம் இருப்பதாகச் சொல்லிவிட்டால், தூங்கி விழித்த பின்னரே யாரும் உள்ளே வரலாம்.

விபூதியில் காசு சம்பாதித்தவர் வீரலிங்கம். சாமியார்கள் ஒரு சிலர் தங்கம் செய்வதைக் கேள்விப்பட்டுத் தாமும் எலுமிச்சம் பழம் அவ்வளவு தங்கம் சம்பாதிக்க எண்ணினார். சாமியார் எவ்வித மான காசும் பெற்றுக் கொள்ளவில்லை. அதனால் விபூதி வீரலிங்கத்துக்கு அவரிடம் பற்று அதிகமாகிவிட்டது.

போனவாரம் காலணாவைப் பச்சிலைச் சாற்றில் ஊற வைத்துப் புடம் போட்டதில் ஒரு பவுன்-முத்திரைப் பவுன்-வந்தது. இது ஊருக்குத் தெரியாது. நேரில் கண்ட வீரலிங்கம் சாமியாருக்கு அடிமையாகி விட்டார். இன்னும் ஒரு மாதத்தில் எலுமிச்சங்காய் அளவு தங்கம் சேமித்துத் தருவதாகவும் சாமியார் சொல்லிவிட்டார்.

சாமியார் உள்ளே படுத்துக் கொண்ட பின்னர் வீரலிங்கம் தமது வீட்டுக்குப் போகாமல் வெளியே கொட்டகையில் படுத்திருந்தார். அவரை யாரோ கூப்பிட்டார்கள். சிவப்பு சைக்கிள் தெரியவே, எழுந்து வந்தார். தந்திச் சேவகன் தந்தி ஒன்றைக் கொடுத்தான். தந்தி பஞ்சாமிர்தச் சாமியாருக்கு வந்திருந்தது. உடனே சாமியை எழுப்பிக் கொடுக்க வேண்டும் என்ற ஆசை. காலையில் கொடுத்தால் சாமியார் கோபம் கொள்ளுவார். தந்திச் சேவகனிடம் என்ன விவரம் என்று கேட்டார். தந்திச் சேவகர்களுக்கு என்ன செய்தி என்று தெரியும். இனும் கேட்பதற்கு நிற்கலாமா போகலாமா என்பதற்காகச் செய்தியை அறிந்து வருவார்கள்.



தமக்குத் தந்தி ஏதாவது வரும் என்று சாமியார் எப்பொழுதோ ஓரிரண்டு மாதங்களுக்கு முன்னரே சொன்னது நினைவுக்கு வந்தது. அதனால் சாமியைக் காக்க வைக்கக் கூடாது என்று எண்ணிக் கதவைத் தட்டினார்; சாமியார் எழுந்து கொண்டார்.

"தங்களுக்குத் தந்தி, சுவாமி!''

"கொண்டு வாருங்கள். என்ன எழுதியிருக்கிறது?''

"யாரோ ஒரு பையன் உலகநாதனும். அகப்பட்டு விட்டானும். பழனிக்குக் காவடி எடுக்க வரவேண்டுமாம். உங்கள் பதிலைக் கேட்டிருக்கிறார்.''

"அப்படியா? தந்தியை இங்கே கொண்டு வாருங்கள்'' என்று வாங்கி வைத்துக் கொண்டு நிச்சிந்தையாகப் படுத்துவிட்டார். விபூதி வெளிச்சத்தைக் குறைத்துவிட்டு வந்தபோது, தலைப்பாகை கட்டிக்கொண்டு ஒரு ஆள் வந்தார். வந்தவர், "பஞ்சாமிர்தச் சாமி இங்கே இருக்குதா?'' என்றார். வந்தவர் உள்ளூர் ஏட்டு என்று விபூதிக்குத் தெரியாது.

"சாமி நித்திரையில் இருக்குது!''

"சாமிக்குத் தந்தி வந்திருக்கணுமே?''

"ஆமாம். வந்தது.''

"சாமியிடம் சொல்லுங்கள், மதுரையிலிருந்து ஒரு ஆள் பார்ப்பதற்கு வந்திருப்பதாக!''

"சொல்லுகிறேன்'' என்று விபூதி வீரலிங்கம் வந்தவரை வெளியே நிறுத்திவிட்டு மீண்டும் பய பக்தியுடன் குடிலுக்குப் போனார்.

"சுவாமியைத் தேடி யாரோ வந்திருக்கிறார்கள். மதுரைப் பக்கமாம்.''

"அனுப்புங்கள்.''

சாமியார் எழுந்து படுக்கையில் உட்கார்ந்து கொண்டு பாதி தூக்கத்திலும் பாதி விழிப்பிலும் இருந்தார்.

பயபக்தியோடு உள்ளே நுழைந்தார் வந்தவர்.

"யார் நீங்கள்?"

"சாமி! மதுரை கோபால் நினைப்பூட்டச் சொன்னார்!"

"மதுரை கோபாலா? அது யார்?"

"திருச்சியிலிருந்து வந்தவர். எனக்கு ஆப்த சிநேகிதர். உடனடியாகச் சாமியை அழைத்து வா என்றார்."

சாமியார் கண்ணடித்தார், விபூதிக்கு அவர்கள் பேச்சு தெரியக் கூடாது என்பதை உணர்த்துவது போல்.

"அடடே! அந்தக் கோபாலா? சௌக்கியமா? பாவம் நீண்ட நாள் அவன் பக்கவாதத்தில் கிடந்தான். அவனுக்கு மந்திரிக்க மதுரையில் ஒரு ஆள் அகப்படவில்லையா? எப்போது மதுரையிலிருந்து வருகிறீர்கள்?"

"ராத்திரி ஒரு மணிக்குத்தான் வந்தேன். உங்களை இங்கே யாருக்கும் தெரியவில்லை. நல்ல வேளையாக இங்கே தாங்கள் இருப்பதை ஒரு தந்திச் சேவகன் சொன்னான். அவன் சொல்லாவிட்டால் எனக்குத் தெரியாது, சாமி!"

"விபூதி வீரலிங்கம்! இப்போது மணி என்ன? மதுரைக்கு வண்டி அகப்படுமா?"

"அகப்படும், சாமி! திண்டுக்கல்லில் ஐந்து மணிக்கு இணைப்புக் கிடைக்கும்!"

"உங்களிடம் பணம் அகப்படுமா?"

"எவ்வளவு வேண்டும்?"

"ஐந்நூறு வேண்டும்!"

"சாமிக்கு இல்லாத பணமா?" என்று விபூதி வீரலிங்கம் உள்ளே ஓடிப் போய் இரும்புப் பெட்டியைத் திறந்து பணத்தை எண்ணிக் கொண்டு வைத்தார்.

பஞ்சாமிர்தம் தமக்கென வைத்திருந்த டின் ஒன்றை எடுத்துப் பைக்குள் திணித்தார். "சிவயோகம், சச்சிதானந்தம், முருகா!" என்று கூறியவாறே எழுந்தார்.

"முருகண்ணே! சீக்கிரம் கிளம்புங்க."

"வர்றேன்" என்று பஞ்சாமிர்தம் சொன்னதும், எட்டய்யா புலி போல் பாய்ந்து அமுக்கிக் கொண்டார். பஞ்சாமிர்தம் சாமியார் வேஷத்தில் இருந்தவன் குருட்டுப் பிச்சைக்காரன் முருகண்ணன் தான். எட்டய்யா எதிர்பாராதவிதமாக இவ்வாறு அமுக்கித் தமது மடியிலுள்ள விசிலை அடித்ததும் வெளியே நின்ற போலீஸ்காரர்கள் உள்ளே நுழைந்தனர். பஞ்சாமிர்தம் தூணிலே கட்டப்பட்டார். இதைப் பார்த்ததும் விபூதிக்கு உடம்பு வெலவெலத்துப் போய்விட்டது.

அதற்குள் பழனி போலீஸ் இன்ஸ்பெக்டர் வந்தார். ஆளை விலங்கு மாட்டி மறு ரயிலில் திருச்சிக்கு அனுப்பி வைத்தார். பாதுகாப்புக்காக எட்டும் இன்னொரு போலீசும் உடன் போனார்கள்.

* * *

சித்திவிநாயகம் தந்தியை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். அந்த வேளையில் ஜில்லா போலீஸ் அதிகாரி உள்ளே வரவே சற்றுக் கலங்கிப் போனார்.

"வாருங்கள், வாருங்கள்."

"பஞ்சாமிர்தப் பண்டாரம் வந்துவிட்டார்."

"உங்களுக்கு எப்படித் தெரியும்?"

"நாங்களே அழைத்து வந்தோம். வாருங்கள், அவர்தானா என்று அடையாளம் காட்ட வேண்டும். உங்கள் மனைவி ஞானயம்மாள் எங்கே?"

ஞானயம்மாளுக்கு உடம்பு வெலவெலத்தது. உள்ளே நின்ற அவள் உடம்பு ஜில்லிட்டது. நாக்குச் சுருண்டு, மிரளமிரள விழித்தபடியே வந்தாள்.

"இந்தாம்மா! நீங்கள் செய்தது மிகவும் தவறு. அந்தப் பையன் உலகநாதன் மிகவும் நல்ல பிள்ளை; அவனை உருப்படாமல் செய்ய முயன்றீர்கள். இனியாவது இவ்வாறு செய்யாதீர்கள். உங்கள் மீது போதிய குற்றம் இல்லை. குடும்பப் பெண்; அதனால் விட்டு வைக்கிறோம். உங்கள் கணவர் காட்டிய அன்புக்கே உங்கள் குற்றம் மன்னிக்கப்பட்டது!"

ஞானயம்மாள் சற்று நிமிர்ந்தாள்.

"இனிமேல் உலகநாதனை நான் காப்பாற்றுவேன். அவன்தான் தெய்வம்!"


வாழ்க்கையில்
நீங்கள்
பெறுவதென்ன?
விளங்கும் வீரியமா
அல்லது
வாழ்க்கையின் சந்தோஷத்தை கவலை, தெம்பின்மை, சிரமம் முதலியன கெடுக்காமல் காத்துக்கொள்ளுங்கள். வாழ்க்கையில் உண்மை வெற்றி தெம்பினால்தான் ஏற்படும்—ஸனடோஜன் புதுபலம் அளித்து, உடல்வலிமை மனசக்தி அதிகரிக்கச் செய்கிறது. 25,000 த்துக்கு மேற்பட்ட வைத்தியர்கள் அதன் அபூர்வ சக்தியளிக்கும் குணத்திற்கு அத்தாட்சி அளிக்கிறார்கள்.
ஸனடோஜன்
மிக்க உயர்ந்த பால் டானிக்

"போதும், போதும் உன் பாசாங்கு" என்று கடிந்தார் சித்திவிநாயகம். வாசலில் நின்ற ஜீப் அவர்கள் இருவரையும் ஏற்றிக் கொண்டு நகர்ந்தது.

கண்டோன்மெண்டு ஸ்டேஷனுக்குள் சிப்பாய் நுழைந்ததும், "சித்தப்பா!" என்று கூவியவாறு ஓடிவந்து கட்டிக் கொண்டான் உலகநாதன். மாலை மாலையாக அவன் கன்னத்தில் அன்புத் துளிகள் புரண்டன. அந்தக் காட்சி எல்லாருடைய மனத்தையும் உலுக்கி விட்டது.

"உனக்கு நல்லது செய்ய இருந்த நான் எவ்வளவு கஷ்டங்களைத் தந்துவிட்டேன்."

சிப்பாயும் உலகநாதனும் அழுது தீர்த்தார்கள்.

"கொண்டு வா, கைதியை" என்ற சிம்ம கர்ஜனை கேட்டது. இந்தக் கர்ஜனை "சீனுப்பயல் சௌக்கியமா?" என்ற உலகநாதனின் பரிவான கேள்வியை விழுங்கி விட்டது.

கைதி அங்கே வந்ததும் சித்திவிநாயகம், "இவர் பஞ்சாமிர்தப் பண்டாரம் அல்லவா?" என்றார்.

"இவன்தான் குருட்டுப் பிச்சைக்காரன் முருகண்ணன்" என்றான் உலகநாதன்.

சிப்பாயும் உலகநாதனும் ஒருவரை யொருவர் திகைப்பால் பார்த்தனர்.

"அவர்தான் இவர்; இவர்தான் அவர்" என்றார் ஜில்லா போலீஸ் அதிகாரி. அடுத்து வந்தது கைதி கோபாலு. அவனையும் உலகநாதன் அடையாளம் கண்டு சொன்னான்.

"இனி கோர்ட்டு விசாரணை நடைபெறும்" என்று அதிகாரி சொன்னார்.

* * *

அதிகாரி சொன்னபடியே ஆதியோடு அந்தமாக வழக்கு விசாரணை நடந்தது. குறுக்குக் கேள்விகள் கேட்கப்பட்டன. எத்தனையோ நபர்கள் தினம் தினம் விசாரணைக்கு வந்தார்கள். அத்தனை விவரங்களும் இங்கு தேவையில்லை. முடிவிலே நடந்த தீர்ப்பு மட்டுமே போதுமானது.

அதோ நீதிபதி சொல்வதைக் கேளுங்கள்:

"இந்த வழக்கு மிகவும் சிக்கலானது. இதை விசாரணை செய்வதில் நான் பெருமை அடைந்தேன். குடும்பத்தோடு சிறு பிள்ளைகளைத் தட்டி வளர்க்க வேண்டும்; அன்பும் பாசமும் காட்ட வேண்டும். இல்லாது போனால் பிள்ளைகள் கெட்டுப் போவார்கள். உலகநாதனும் மற்றப் பையன்களைப் போல மாறிக் கெட்டிருந்தால் முருகண்ணன்-கோபாலு மதுரை கேடிகளோடு கேடிக் கூட்டம் பிடிபட்டிருக்காது. 'நல்லவனாக இருக்க வேண்டும்; நல்லவனாக வாழ வேண்டும்' என்ற சிந்தனை உலகநாதனின் மனத்தில் பிறந்தது ஏதோ தெய்வச் செயல்தான். அதனால் அவன் நல்லதையே செய்ய முயன்றான். இவ்வளவு அறிவு நிரம்பிய



"அசல் நீலக் கல் கையில் போட்டுக் கொண்டால் அதிர்ஷ்டம் வரும் என்று சொல்லுகிறார்கள். ஆனால் நான் கையில் போட்டுக் கொண்டிருப்பது இமிடேஷன் நீலம்."

"போகட்டும், பரவாயில்லை. ஏதோ இமிடேஷன் அதிர்ஷ்டமாகிலும் வரட்டுமே!"

பிள்ளை படிக்க முடியாமற் போனது வருந்தத்தக்க காரியம். ஒரு வருடப் படிப்பும் வீண் போய் விட்டது. பையன் திருட்டுக் கூட்டத்தில் சூழ்நிலையால் தள்ளப்பட்டாலும் உத்தம எண்ணங்களோடு இருந்திருக்கிறான். இவனைக் காவல் காத்த சேட் ஜீவன்லால் மிகவும் அன்பாகவே நடத்தி யிருக்கிறார்.

"இந்த வழக்கிலே, ஞானியம்மாள் செய்த கொடுமை மிகவும் அதிகம்தான். ஆனாலும் மன்னிப்புக் கேட்டு இனி உலகநாதனைத் தன் பிள்ளை போலவே நடத்துவதாகச் சொல்லுவதால் அவள் மன்னிக்கப்படுகிறாள்.

"போலீஸார் இத்தனை திருடர்களைப் பிடித்துள்ளார்கள். இவர்களுக்குத் துணையாக உலகநாதன், ஏணி என்ற குரங்கு காட்டி இருவரும் துணை நின்றதற்காக என் பாராட்டுக்கள்.

"இவர்கள் மீண்டும் பள்ளிக்கூடங்களில் சேர்ந்து படிக்க வேண்டும். இவர்கள் திறமையாகப் படித்தால் இவர்களுக்குச் சர்க்காரின் உபகாரச் சம்பளமும் கிடைக்க வழி செய்ய வேண்டும்.

"ஜீவன்லால் சேட், தமது சொந்தச் செலவில் உலகநாதனைப் படிக்க வைக்க ஒப்புக் கொள்வது மிகவும் போற்றுதற்குரிய செயல். அதைச் சிப்பாய் சித்திவிநாயகம் மறுக்க மாட்டார் என்று எண்ணுகிறேன்.

"இவ் வழக்கில் கொடுமை, திருட்டு, ஜேப்படிகள் செய்து வந்த முருகண்ணன் என்ற பஞ்சாமிர்த சாமியார், ரௌடி கோபாலு, தாண்டவராயன் ஆகியவர்களுக்கு ஆயுள் தண்டனை கிடைக்கிறது. இவர்களுக்குத் துணையாக நின்ற நிரபராதிகள் மொச்சைக்கொட்டை, எச்சிப் பீடி முதலான எழுவருக்குச் சர்க்கார் சிறைச் சாலையில் நடத்தப்படும் பள்ளிக்கூடம் அடைக்கலம் தரும். அவர்கள் அங்கு கல்வி கற்று வெளியுலகம் வரலாம்.

"இந்தச் சிக்கலான வழக்கிலே துப்புத் துலக்கி கேடிகளைப் பிடித்த போலீஸ

இலாகாவினர் செய்த சேவைக்கு எனது பாராட்டுகள்..."

தீர்ப்பை எதிர்பார்த்து உலகநாதன் படித்த பள்ளிக்கூடத்தின் தலைமை ஆசிரியர், அவரது துணை ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரும் கோர்ட்டுக்கு வெளியே அணிவகுத்து நின்று கொண்டிருந்தனர். தீர்ப்பு முடிந்து உலகநாதன் வெளியே வந்ததும், "உலகநாதனுக்கு ஜே! திருடர்களைப் பிடித்த தீரன் உலகநாதனுக்கு ஜே!" என்ற கோஷங்கள் வானை முட்டின.

மலர் மாலைகள் பொலபொலவென்று உதிர்ந்தன. மேலும் மேலும் மாலைகள் விழுந்து கொண்டேயிருந்தன.

உலகநாதன் புகழ் திருச்சி மட்டுமின்றி மறுநாளே இந்தியா முழுவதும் பத்திரிகைகள் வழியாகப் பரவியது. (முற்றும்)

படித்துப் பாருங்கள்!

ஈழத்துச் சிறுகதைகள்

ஒவ்வொரு நாட்டு வாழ்விலும், சூழ்நிலையிலும் ஒரு அழகு இருக்கிறது. அந்த அழகைக் கதைக் கண்களோடு பார்த்துக் கதையாக்க வேண்டுமானால் அந்நாட்டு வாழ்விலும், சூழ்நிலைகளிலும், தோய்ந்து பழகிய மக்களால்தான் முடியும். பன்னிரண்டு சிறுகதைகளைக் கொண்ட இந்த "ஈழத்துச் சிறுகதைகள்" என்ற தொகுதியில் யாழ்ப்பாணத்துச் சிற்றூரில் விவசாயியின் வாழ்வையும் (வென்னம்) இலங்கை மலைப் பிரதேசங்களின் வாழ்வையும் கடற்கரை வாழ்வையும் சித்திரிக்கும் கதைகளைக் காண்கிறோம். பொதுவான கதைகளையும், சரித்திரக் கதைகளையும் கூடக் காண முடிகிறது. சில கதைகளில் ஈழத்துத் தமிழின் அருமையான 'சொல் வழக்குகள்' உயிரோட்டத்தோடு திகழ்கின்றன. தமிழ் எழுத்தாளர்களும், தமிழ் மக்களும் இலங்கைத் தமிழ் இலக்கிய உலகின் சிறுகதை வளத்தை எடைபோட இதனைப் படித்து மகிழ்வது நல்லது.

எழுதியவர்; பன்னிரு கதாசிரியர், விலை 2-50 விற்பனை உரிமை. பாரி நிலையம். பிராட்வே - சென்னை-1.

குறள் தந்த இல்லற இன்பம்

அந்த நாளில் பத்து உரையாசிரியர்கள், ஒழுக்கமும் தகுதியும் நிறைந்த நூற்பயிற்சியும் கொண்டு திருக்குறளுக்கு உரையெழுத முற்பட்டார்கள். உரையெழுதுகிறவனுக்கு நூல்களிடமும், நூலாசிரியர்களிடமும் மதிப்பு அதிகமாக இருந்தது அந்தக்காலத்தில்.

ஆனால் இந்தப் பத்து ஆண்டுகளுக்குள் மலிவான விலையில் மலிவான தரத்தில் குறளை விளக்க முற்பட்ட நூல்கள் நூற்றுக் கணக்கில் தோன்றி விட்டன. குறளின் ஆழத்தைக் காண இந்த நூல்கள் பயன்படா விட்டாலும், குறளைப் பற்றியே அறியாமலிருந்த பாமர மக்களுக்கு இவை ஓரளவு குறளறிவை உண்டாக்கியிருப்பதைப் போற்றத்தான் வேண்டும். அந்த வகையில் திருக்குறள் அறத்துப் பால் இல்லறவியலின் அதிகாரங்கள் சிலவற்றை விளக்கும் இந்த நூலும் ஒன்று. 'இல்வாழ்க்கை'யிலிருந்து புகழ் இறுதியாக 20 அதிகாரங்கள் எளிய முறையில் விளக்கப்பட்டுள்ளன இந்நூலில்.

எழுதியவர்: புலியூர்க் கேசிகன். விலை ரூ. 2. கலைஞன் பதிப்பகம், தியாகராய நகரம், சென்னை - 17.

ரமணியின் தாயார்

நடைமுறை வாழ்க்கையிலிருந்து விலகாத அனுபவங்களைக் குழப்பமில்லாமல் சுவை நிரம்பிய கதையாகப் பின்னி வளர்த்துக் கொண்டு போவதில் எஸ்.வி.வி.க்கு நிகர் அவர்தான். வாழ்க்கையிலிருந்து பிரிந்து உயரத்திலோ, எட்ட முடியாத இலட்சியபீடங்களிலோ நிறுத்திப் பார்க்கத் தேவையில்லாத சாதாரணமான உயிருள்ள பாத்திரங்களைப் பார்க்கிறோம் இந்த நாவலில்.

லோகநாயகி தொடக்கத்தில் தன் கணவனின் பெற்றோரை அளவற்று வெறுக்கிறாள். அவர்களை வயதான காலத்தில் தனியே சென்று குடியிருக்கும்படி விரட்டுகிறாள். பணத்தையும், திமிரையும் வைத்துக் கொண்டு வாழ்ந்துவிட முடியும் என்றிருந்த அவளே பின்பு மனம் மாறுகிறாள். அவளுக்கு ரமணி என்று ஒரு பையன் பிறந்து அவளைப் பலவகையிலும் துன்புறுத்துகிறான். பையனுக்குப் படிப்பு வரவில்லை. ஓடிப்போய் விடுகிறான். இதற்கிடையில் அத்தை பெண் பாமாவைக் காதலிக்கிறான். லோகநாயகியின் கணவர் சாம்பமூர்த்தி தம் சொத்தைத் தந்தையின் பேருக்கு உயில் எழுதி வைத்துவிட்டு இறந்து போகிறார்.

ரமணி காசிக்குப் போகிறான். ஒரு பணக்காரருடைய சொத்துக் கிடைக்கிறது. ஊருக்கு வருகிறான். துளசியை மணந்துகொண்டு திரும்பவும் காசிக்கே போய் விடுகிறான். ரமணியின் தாயார், தான் இளமையில் வெறுத்த கணவனின் பெற்றோருக்குத் தொண்டு செய்யச் சென்னையிலேயே தங்கி விடுகிறாள். படிக்கச் சுவையான பொழுதுபோக்கு நாவல்.

எழுதியவர்: எஸ். வி. வி. விலை ரூ. 3. அல்லயன்ஸ் பிரசுரம் - மயிலாப்பூர் சென்னை—4.

Printed and Published by R. Ananthanarayanan for the Proprietors Messrs. Bharathan Publications Private Limited at the Kalki Press, Kilpauk, Madras-10
Managing Editor: T. Sadasivam.

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon